155

முத்தாரம்

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 OCT 1957
155 / 4-7

ஜூலை

ஆசிரியர்:
மு. கருணாநிதி

19.8.54.

முத்தாரம்

[இலக்கியத் திங்கள் ஏடு]

ஆசிரியர் :

மு. கருணாநிதி

வெளியிடுபவர்:

மாறன் எம். ஏ.,

அச்சிடுவோர்:

'முரசொலி' அச்சகம்,

சென்னை—6.

அலுவலகம்:

4-128, மவுண்ட் ரோடு,

தபால் பெட்டி எண்: 712

சென்னை—6.

'டெலிபோன்' எண்:

84780

ஆண்டு சந்தா

உள்நாடு ரூ. 6—00

வெளிநாடு ரூ. 7—00

ஆறுமாத சந்தா

உள்நாடு ரூ. 3—00

வெளிநாடு ரூ. 4—00

ஆரம்: 1 | ஜுலை, 57 | முத்து: 10-12

கதை :

மு. கருணாநிதி ... 4

அல்லி ... 24

அதிகமான் ... 33

நலங் கிள்ளி ... 40

நாஞ்சில் கி. மனோகரன் ... 58

ஆ. சு. மணியன் ... 65

இரா. மதனகோபால் ... 99

கட்டுரை :

பி. சி. கணேசன் ... 12

அ. ரா. ... 17

உடுமலையான் ... 73

முதல்வன் ... 81

கவிதை :

கவிஞர் வாணிதாசன் ... 3

கருணானந்தம் ... 10

கவிஞர் முடியரசன் ... 31

நாடகம் :

ப. செல்வராசன் ... 84

பெருங்கதை :

விக்டர் ஹ்யூகோ,
தமிழில் — அ. ராஜா ... 107

சித்திரத் தொடர்கதை ... 20

முத்துக்கள்

சிந்தையைத் தூண்டும் சிறுகதை சொல்வதில்; செந்தமிழ் மணக்கும் கட்டுரை தருவதில்; செந்தேன் நிகர்க்கும் நறுங்கவிதை பொழிவதில்; எட்டுத் திக்கும் சென்று எழில் எண்ணம் சேர்ப்பதில் சிறப்பு பெற்று விளங்கும் 'முத்தார'த்தின் இந்த இதழிலே வழக்கமான 'அடிக் கரும்புப் பகுதிகள்' அதிகமிருக்கின்றன.

ஆசிரியரின் 'யாழ்'—காதல் காதலென்றே அதிர்கிறது; உங்கள் உள்ளத்தில் களிப்புபாய்ச்சுகிறது! இந்த இதழிலே இதர திராவிட மொழிக் கதைகளும்; வடநாட்டு மொழிக் கதைகளும் முன்னைவிட அதிகமாகத் தமிழிலே தரப்பட்டிருக்கின்றன.

'அசோகன் மனைவி'—கன்னடக் கதை; அசோகன் அந்தரப்புரத்திலே இருந்த அலங்கோலத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது!

'பூனை விளைத்த பூசல்'—இந்திக் கதை மூடநம்பிக்கையையும்; அதை நம்பி வயிறு வளர்ப்போர்களையும் எள்ளி நகையாடுகிறது!

'நான் கள்வனா?'—வங்கக் கதை ஏழையின் எழில் உள்ளத்திற்கும, சாது மிரண்டால் காடு கொள்ளாது என்னும் தத்துவத்திற்கும் ஓர் உருவமாக இருக்கிறது!

—வெறும் மேலை நாட்டுக் கதைகளையே தமிழில் தருகிறீர்களே என்று குறைபட்டுக்கொண்டவர்களுக்கு இவை மிக்க மகிழ்ச்சி தரும் என நம்புகிறோம்.

தமிழிலும், இதர மொழிகளிலும் பழக்கமுள்ளவர்கள் இது போன்ற சுவைமிக்கக் கதைகளைத் தாய் மொழியில் வடித்துத்தர முன் வருவார்களேயானால் 'முத்தாரம்' அவர்கள் முயற்சிக்கு முழு ஆதரவையும் தரும்.

இன்னொன்று; அடுத்த மாதம் முதல் உங்கள் 'முத்தார'த்திற்கு இரண்டாவது ஆண்டு பிறக்கிறது. எனவே அடுத்த இதழ் புதிய மாற்றங்களுடன் முன்னிலும் சிறப்பாக முழுநிலவுபோல் இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்!



கண்கள் சலித்தன!

கவிஞர் வாணிதாசன்

பார்த்துச் சலித்தன கண்கள்—அடிக்கடிப்
பார்த்துச் சலித்தன கண்கள்—என்
பைந்தமிழ் அன்பர் சென்ற வழியினை...

நேத்திரா முழுமையும் நித்திரை யில்லை—
நீள்கடல் என்னைப்போல் அடைந்தது
தொல்லை—

படுக்கைச் சிறு விளக்கும் பரிகசம்
செய்யும்
பாயும் தலையணையும் எனக்குநோய்
செய்யும்
அடிக்கடி அவர் பேச்சை காதொலி
செய்யும்
அறைச்சுவர் எங்கணும் நிழல்
உருச் செய்யும்

காவல் நாய் வீட்டோரம் காதுகள்
உதறும்
கதவைத் திறந்து பார்த்தேன்என்
மனம் பதறும்
ஆவலடங்கா உள்ளம் அடுக்களை
செல்லும்
அருந்த உணவெடுக்கும் மருந்தென்று
வெறுக்கும்.

யாழ்

மு. கருணாநிதி

“மருங்குவண்டு சிறந்தார்ப்ப,
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி,
நடந்தாய் வாழி காவேரி!”

கானல் வரிப் பாடல் தன்னை கரும்பனையச் சுவையேற்றித் தருபவளின கரந்தனிலே இருப்பதுதான் யாழோ, அன்றி இதழ்களிடை ஒலிப்பதுதான் யாழோ என அயர்ந்திருந்தான் அழகு நம்பி. உயர்ந்து நிற்கும் மார்பகத்தின் குறுக்கே சாய்த்த எழில் யாழின் இருமுனையும் இணையாய் இல்லையென அவன் கண்கள் தீர்ப்புக் கூறித் திருமகளாம் தேன்மொழியின் தேகக் கட்டை வியந்து நோக்கும். அவளே யாழ்! அவள் உருவே யாழ்! அவள் மொழியே யாழ்! அழகு நம்பி, மதி மயக்கம் கொண்டவனாய் அவள் எதிரே அசைவற்று அமர்ந்திருந்தான். திசையெட்டும் இவள் போலத் தேன் தமிழைப் பாடுதற்கும், யாழ் நரம்பை மீட்டுதற்கும் இதுவரையில் பிறக்கவில்லையெனப் பேசி மகிழ்ந்தது இசை அரங்கம்.

“யாழின் நரம்புகளில் எத்தனையோ உணர்ச்சிதனைக் கிளப்புகின்ற இவள் விரல்கள், இதய நரம்புகளில் பட்டுவிட்டால் இன்பக் கதைகள் கோடி கோடி கேட்கலாமே! இறைவா! நின் அருளால் இன்மொழியாள் எந்தனுக்குக் கிட்ட வேண்டும்,” எனத் துடித்தான் அழகு நம்பி.

யாழோசை நின்ற பின்னர் இந்த உலகத்தில் இருப்பதையே நினைத்துக்கொண்ட மாமன்ற இசைவாணரெல்லாம் இல்லம் ஏக; வெல்லத்தை மொய்த்து விட்ட எறும்புபோல அழகு நம்பி அவள் பின்னே நடக்கலானான்.

உயிர் பெற்ற ஓவியமோ— உலகு பெற்ற பெரும் பேறோ— ஒப்பற்ற அழகினாலே உயிர் வாங்கி நடக்கின்றாளே; எனப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்... “பின் அழகுக்கே அந்த நிலையென்றால், முன் அழகும், முல்லைச் சிரிப்பழகும், முத்தா

ரம் தொடுப்பதற்குக் குவிகின்ற இதழ் அழகும் கண்டுவிட்டால் என் நிலைதான் என்னாமோ?'' எனக் கேட்டபடித் தொடர்ந்து சென்றான்.

அரங்குதனை மயங்க வைத்தாள். அழகுதனைப் பழகு தமிழ் இசையோடு குழைத்துத் தந்தாள். யாழ் எடுத்தாள். யாழானாள்.

யாரானாலும் நிகரில்லையென நாதம் தந்தாள். வேதம் தந்த கருத்தெல்லாம் அவள்விழிதந்த ஒளியினிலே கருகிப் போகும். அவள் நடந்தாள், வீடுநோக்கி!

தன் பின்னே தணியாத ஆசைக் குன்றம். தாகமுடன் தள்ளாடி வருவதை யறியாத பாவையவள்!

வீட்டுக்குள் நுழைந்து விட்டாள்—கூட்டுக்குள் சென்ற புறா—யாழ் மீட்டும் எந்தன் புறா—நாட்டுக்கு இளவரசன் எனக்கின்றி எவர் கொள்வார் என நினைத்து வாயிலிலே நின்றிருந்தான் அறிவிழந்த அழகு நம்பி.

அண்ணாந்து நின்றவனின் இதயத்தின் அடிபீடம் ஆட்டுதற்கு விண்மீது நிலாத் தட்டு தொங்கியது—அதன் நடுவே ஓர் உருவம்—அதுதான் அவள் உருவம்! இளைப்பாற நிலா முற்றம் வந்தவளின் முழுத் தோற்றம் கண்டுவிட்ட முடிவேந்தன் மைந்தனுக்கு முப்பாலின் இறுதிப் பால் தலைக்கேறி விட்டதாலே தட்டி விட்டான் வீட்டுக் கதவு தன்னை! ஓடி வந்து ஒரு தோழி திறக்கலானாள்—''இளவரசன் வருகைதனை எந்தன் எழிலரசி அறியட்டும்'' எனச் சொன்னான். அவள் ஓடி அழகியிடம், ''தேன் மொழியே! தேசத்து இளவரசன் தெருக் கதவைத் தட்டி விட்டுத் தேகமெல்லாம் வியர்வைக் குளமாக நிற்கின்றான். தீரங் காட்டும்

அட்டைப்படக்கதை

தோள்களிலே நாணம் தொங்குவதை—வீரம் பாடும்மீசைகளில் வெட்கம் ஆடுவதை விழியினால் உணர்ந்தேன் தோழி; விடை கொடுத்து அனுப்பவா-அழைக்கவா?'' எனக் கேட்டாள்.

அழைத்துவா எனச் சொல்லி அவள் அலங்கார மாடம் புகுந்தாள். அவன் வந்தான். அவளும் வந்தாள் கையினிலே யாழோடு!......

''தேன்மொழி'' எனச் சொன்னான்; ''வணக்க''மென உரைத்து விட்டு வாய் திறக்க வழியின்றி யாழ் மீட்டிப் பாடலானாள்.

''யாழ் கேட்க வரவில்லை கண்ணே'' என்றான்.

''பின் யாது கேட்க?'' என்றாள்.

''உன்னைக் கேட்க!''

''என்னைக் கேட்கவா?''



''ஆம்; அழகே! அவனிதனில் உன்னையன்றி வேறோர் நினைவறியேன். நெஞ்சினிலே இக்கணமே குடியேறு'' என்றான்.

''இளவரசே! கணிகைதானே எனக் கருதிக் கணக்கைத் தவறாகப் போட்டுவிட்டீர்; என் கொழுநன் ஒருவனுண்டு என்பதையும் மறந்தீர். கற்புக்கு மதிப்புதரும் தமிழகத்தை அழிக்காதீர்; போய் வாரும்!'' எனச் சினந்தாள்.

''உன்னை மணந்த ஒருவனுண்டு எனும் சேதி இன்றுதான் கேட்கின்றேன் பாவாய்; அவன் எவனோ எனக்குக் காட்டிவிடு; கால்வேறு கைவேறாய் ஆக்கிவிட்டு கட்டிலறையை நமக்காக்கிக் கொள்வோம்'' என்றான்.

''செங்கோல் வேந்தர் குடிப் பிறந்த கொடுங்கோல் கொழுந்தே! இழக்கத் துணியாத என் பொருள்கள் ஆளன், யாழ், அருங்கற்பு—இம்மூன்றுமென நீ அறிக!'' எனச் சொல்லி எழுந்து நின்றாள்.

எண்ணைமீது பாய்கின்ற தீபோல — எரிமலையின் பெரு மூச்சில் வழிகின்ற குழம்புபோல—வேகம் காட்டி அவள்மீது பாயலுற்றான். அய்யோ என அவள் ஓடி அடுத்த அறைதனில் உறங்குகின்ற

கணவன்மீது விழுந்தழுதாள். கண் விழித்த அவள் ஆளன், எதிரே இளவரசன் நிற்கின்ற நிலை கண்டு கொதித்துப் போனன்.

''கணிகைக்குக் கற்பா? காசினியோர் சிரிப்பார்கள்! கணவனென இருக்கின்ற மனிதா!.......கட்டி வெல்லம் நான் சுவைத்திடத் தருவாய்!...இல்லை, என் கத்திக்கு இரையாக வேண்டும்—'' என முழங்கி நின்ருன்.

நிற்பதற்கு வழியில்லாப் பிறவி; தேன் மொழியின் ஆளன்; காலற்ற நொண்டி— அதைக் கண்டுவிட்ட — இளவரசன், துணிவு மிகக் கொண்டுத் தொட்டிழுத்தான் தோகை தனை! கண் எதிரே நடக்கின்ற கொடுமை, காண்பதற்குச் சகியாத நொண்டி, ஆங்குள்ள மண்தொட்டி தூக்கி, இளவரசன் தலைமீது வீச, அது கண்ட அநியாயக்காரன், வாள் நீட்டி அவன்மீது பாய்ந்தான். அதைத் தடுக்கத் தேன் மொழியாள் எண்ணி, யாழ் எடுத்து வாள்மீது வீச, வாள் ஒடிந்து யாழ் முறிந்துபோக மன மொடிந்து வீழ்ந்து விட்டாள் கீழே!

''யாழ் போன பின்னர் எது போனல் என்ன வாழ்வோ மடி வாடி!'' என வாரியணைத்தான் நம்பி.



''யாழ் போனல் பிறிதொன்று வாங்கிக் கொள்வேன்; எந்தன் கற்பும், ஆளனும் போய்விட்டால் அவை வாங்க அங்காடி கிடையாது அறிவாய்!'' என மொழிந்து ஒடிந்த வாள் கை பிடித்து உயிர் பிழைத்து ஓடு என்ருள்.

அவள் வாளெடுத்து விட்டது கண்டு, அதை எதிர்க்க— முறிந்த யாழ் எடுத்து நின்ருன் இளவள்.

''என் யாழை, உன் வாளால் வெட்டமாட்டேன்; நீயும் எம்மை உயிரோடு விடமாட்டாய்! |காக்கவேண்டிய மூன்றில் ஒன்றிழந்தேன் — கற்பி

முக்க, கணவனை உனக்கு அடிமையாக்க நான் பிறந்தேனில்லை; இதோ பார்" என்றாள். பாய்ந்தாள் கணவன்மீது!

"என்னருமை அத்தான்! உம்மை உயிரோடு சித்ரவதைக் கூடத்துக்கு அனுப்ப மாட்டேன்; இருவருமே சேர்ந்து செல்வோம் இறப்புலகு" என்றாள். சரியென்றான் கொழுநன்.

உடைந்த வாளைக் கணவன் நெஞ்சுதனல் நுழைத்தாள்—அவ்வாளைத் தன் இதயத்தில் ஏந்தினாள் — இருவர் உடல் உடைந்த யாழ்மீது சாய்ந்தது!

கற்பு—ஆளன்—யாழ் — மூன்றையும் பாதகன் பறிக்க முடியவில்லை. அவள் உறுதி வென்றதெனக் கூறி வெட்கினான்—வேந்தன் மகன்! விழி அருவியாக வெளியேறினான் வீட்டை விட்டு!...அவன் சென்ற திக்கெல்லாம் யாழோசை அவனைச் சூழ்ந்து கொன்றது.

★

[குறுநில மன்னன் ஒருவன் காலத்தில் நடந்த நிகழ்ச்சியெனச் சொல்லப்படும் ஒன்றை வைத்து எழுதப்பட்ட "உண்மைச் சித்திரம்" இது!]

❋❋❋

தராசுமுனைத் தீர்ப்பு!

அமெரிக்காவிலுள்ள 'மெயின்' என்னும் ஊரின் புறத்தே, ஒருவன் சிறு கடையொன்றைத் திறந்தான். அவனுடைய சுவையான சமையல் அவனுக்கு விரைவில் நல்ல வியாபாரத்தைக் கொடுத்தது. ஒரே ஒரு விஷயம் அவனுடைய இந்த வெற்றிக் களிப்பைக் கெடுத்தது. நாள் தோறும் மாலையில் ஒரு முதியவர் அந்தச் சிற்றுண்டி விடுதிப் பக்கம் வருவார். வருபவர் கடைக்குள் நுழையாமல், சமையலறையிலிருந்து காற்றில் மிதந்து வரும் உணவின் நறுமணத்தை மட்டும் மனமார முகர்ந்து விட்டுச் செல்வது வழக்கம்.

இதைப் பார்த்து எரிச்சல் மிகக் கொண்ட விடுதிக்காரன், இறுதியாக முதியவர்மீது இழப்பீட்டு வழக்குத் தொடர்ந்தான். குற்றச் சாட்டைக் கேட்டு முடித்த நீதிபதி, "உம்மிடமிருக்கும் சில்லறைக் காசுகள் அனைத்தையும் கொடும்" என்று எதிர்வாதியான கிழவரிடம் கேட்டார்.

கிழவர் தம்மிடமிருந்த சில்லறைகளைக் கொடுத்ததும், நீதிபதி அந்தக் காசுகளைத் தமது இருகரங்களையும் குவித்துப் பெருமிதத்தோடு பலமாகக் குலுக்கினார். பின்னர் அவற்றை முதியவரிடமே திருப்பித் தந்துவிட்டு,

"சரி, ஐயா வாதியே! கிழவர் உமது சமையலின் மணத்தை நுகர்ந்தார்; நீர் இப்போது அவருடைய காசுகளின் ஓசையைக் கேட்டுவிட்டீர். இரண்டுக்கும் சரியாகப் போய் விட்டது!" என்றார்.

"ஏ அப்பா! என்ன விலை போட்டிருக்கான்
ஒரே பகற்கொள்ளை!"

செல்வமும் சுகவாழ்வும்!

ஸ்ரீமுதாவின் மேனிநிறம் கறுப்பா னாலும்,
குறைவில்லா வெள்ளைமனம்! தங்கை யான
அமுதாவோ அழகரசி எனினும், மிக்க
அழுக்காறும் அடக்கமிலாச் செருக்கும்
கொண்டாள்!

சமுதாயக் கோட்பாட்டிற் கிணங்க இந்தச்
சகோதரியர் திருமணத்தை முடித்து வைத்து.
அமுதுநிகர் இல்வாழ்க்கை அனுப விக்க
அனுப்பிவிட்டார் பெற்றோர்கள் ஆசிகூறி.

அக்காவின் கணவனொரு ஏழை; தன்னை
அரசாங்க ஊழியத்தில் அர்ப்பணித்துத்
தக்கோனாய், மனைவிமக்கள் தம்மைத் தாங்கும்
சான்றோனாய், அமைதியுடன் விளங்கி
வாழ்ந்தான்!

இக்கால முற்போக்கின் எடுத்துக் காட்டாய்
இலங்குகின்ற சிறியவளின் செல்வக்
கோமான்
துய்க்காத பொருளில்லை; துன்பம் சற்றும்
தொடராத பெருவாழ்வில் திளைத்து வந்தான்!

தங்கையிட்ட அழைப்பேற்றுத் தனியேசென்று,
தணியாத வியப்பினிலே தவித்தாள்
மூத்தாள்!
அங்கிருந்த அணிமணிகள், பட்டுச் சேலை,
அடுக்கடுக்காய் வைரநகை, வெள்ளிச்
சாமான்—
'எங்கிருந்து குவித்திட்டார் இந்தச் செல்வம்?
எப்படித்தான் வசதிகளைச் சேர்த்தார்?' என்று
தங்கையிடம் கேட்டறியத் தேடும் போது—
தனியறையில் வழக்கறிஞர் ஒருவரோடு

சொல்லுகின்ற சொற்கேட்டுச் சுருண்டுபோனாள்!
'துணைவருக்குத் தங்கையிடம் தொடர்பே
யில்லை!
எல்லையிலாப் பொருள்திரட்டக் கள்ளத்தோணி
ஏராளம் வைத்திருந்தார்! அரசாங்கத்தார்,
தொல்லைதரும் இவர்குழுவைப் பிடிப்பதற்குத்
துப்பாக்கிப் படையினரை ஏவி விட்டார்!
சொல்லாமல் புறப்பட்டாள் குமுதா, 'இந்தச்
சுகவாழ்வு(?) யாருக்கு வேண்டும்?' என்று.



கருணாநந்தம்

மாணவரிடையே கட்டுப்பாடு வேண்டும்!

பி.சி. கணேசன், பி.எஸ்ஸி.,பி.டி

மாணவரிடையே கட்டுப்பாட்டுணர்ச்சி குன்றி வருகிறது என்று குற்றச்சாட்டு பொதுவாக எங்கும் எல்லோராலும் பேசப்படுகிறது. கட்டுப்பாடு இருக்கவேண்டிய அளவுக்கு இப்பொழுது மாணவர்களிடையே இல்லை என்பது உண்மை. ஆனால் நோயை மட்டும் கூறிவிட்டு சும்மா இருப்பது அறிவுடைமை ஆகாது. நோய்க்கான காரணங்களைக் கண்டு தெளிய வேண்டும். அக்காரணங்களை அறிந்தபின் அவற்றை நீக்கி கட்டுப்பாட்டுணர்ச்சியை மாணவரிடையே வளர்க்கும் வழிவகைகளையும் காணவேண்டும்.

கட்டுப்பாட்டுணர்ச்சி மாணவரிடையே குன்றிவிட்டது என்று கூறும்பொழுது, அவர்களெல்லாம் குழப்பவாதிகள் ஆகிவிட்டார்கள் என்பது பொருளல்ல. ஈரமான களிமண் மாணவர்கள்! அவர்களை வேண்டிய பாண்டமாக வளைய முடியும். பாண்டம் ஒழுங்கற்று சுத்தமாக அமையாவிட்டால் குற்றம் நிச்சயமாகக் களிமண்ணுடையது அல்ல. கட்டுப்பாடு குறைவதற்கான சூழலையும் அமைத்துவிட்டு, கட்டுப்பாடு குன்றிவிட்டது என்று வரட்டுக் கூச்சலிடுவது பிரச்சினையை எந்த வழியிலும் தீர்க்காது; மாறாக, திருப்பித் திருப்பி அதையே சொல்லுவதின் மூலமாக கட்டுப்பாடின்றி வாழும் மனோ நிலையை நாமே மாணவர்களிடத்தில் மறைமுகமாகப் புகுத்துகிறோம். இம்மாதிரி விஷயங்களைப் பற்றி முடிவின்றி — தெளிவு பெறும் எண்ணமின்றி — பேசிக்கொண்டேயிருப்பது பெரிய நிலையில் இருப்பவர்களின் வழக்கமாகி விட்டது. கல்வித் தொடர்புடைய எந்த விழாவிலும், கூட்டத்திலும், இதைப் பற்றிப் பேசுவது சம்பிரதாயமாகி விட்டது.

மாணவப் பருவம் உணர்ச்சிகள் உந்த செயலில் ஈடுபடத் துடிக்கும் ஒரு விறுவிறுப்புள்ள பருவம். தனக்குள்ள ஆற்றலையும் பலத்தையும் செயல்படுத்தி, விளைவுகளைக் கண்டு பெருமிதம் கொள்ள வேண்டுமென்று விழைகின்ற பருவம். இந்த உணர்ச்சிகளை—ஆற்றலைத்—தேக்க வேண்டியபடி தேக்கி, பயனுள்ள வழிகளில் பாயச்செய்வது கல்வி நிலையங்களின் பெரும் பொறுப்பாகும். வெறும் புத்தகங்களைப் படிப்பதும், ஆசிரியர்களின் சுவையற்ற பரீட்சைத் தயாரிப்புகளுக்கு ஆட்படுத்திக் கொள்ளுவதும் மட்டும் மாணவனைத்

திருப்திப்படுத்தாது. அவனுடைய ஆற்றலை அவனுக்கு விருப்பமானவற்றில் காட்ட அவனுக்கு வாய்ப்பு வேண்டும். ஓவியம் வரைதல், இசை பயிலுதல், இலக்கிய மன்றங்களில் தர்க்கம் செய்தல், விளையாட்டுப் போட்டிகள், நாடகமாடுதல், பத்திரிகை வெளியிடுதல், கண்காட்சிகள் அமைத்தல், சுற்றுப் பயணம் செல்லுதல்—இப்படிப் பல துறையிலும் மாணவனின் கவனம் செலல, அவனுடைய ஆற்றல் துலங்கப் பள்ளிகளில் வசதிகள் வேண்டும். இப்பொழுதுள்ள பள்ளிகளில் இதற்கான வாய்ப்பு ஓரளவுக்கு இருக்கின்றது என்பதும், கல்விமுறை இதில் அதிக கவனம் செலுத்தத் தூண்டுகிறது என்பதும் உண்மை. ஆனால் பெரும்பாலான பள்ளிகளில் மேல் அதிகாரிகளைத் திருப்தி செய்யும் அளவுக்குத் தான் அவைகளில் நாட்டம் செலுத்தப்படுகின்றது என்ற உண்மையையும் நாம் மறப்பதற்கில்லை. காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை பள்ளிச் சிறைச்சாலையில் அடைபட்டு உழலும் மாணவன் பள்ளிவிட்டவுடன் சாயுங்காலம் தனக்குப் பிடித்தமான ஒன்றில் கவனம் செலுத்த விழைவது இயற்கை. விளையாடுவதற்கோ அல்லது வேறுதுறைகளில் ஈடுபடுவதற்கோ அவனுக்குப் போதிய வசதி செய்து கொடுக்கப்படாத நிலையில், அவனுக்குள்ள மலிவான ஒரே பொழுதுபோக்கு சாதனமான சினிமாப் படங்களில் அவன் கவனம் ஈர்க்கப்படுவதில் தவறென்ன இருக்க முடியும்?

பள்ளி மாணவர்களின் கட்டுப்பாடு கெட ஆசிரியர்களும், பள்ளி நிர்வாகிகளும் ஓரளவு பொறுப்பாளிகளே. திறமையற்ற ஆசிரியர்களும் வியாபார நோக்கோடு லாபம் கருதிப் பள்ளிகள் நடத்தும் நிர்வாகிகளும் மாணவர் நலனில் அக்கறை காட்டாமல், மாணவர்களுக்காகச் செலவிடப்பட வேண்டிய நேரத்தை முன்னவர்களும், பணத்தைப் பின்னவர்களும் விரயமாக்கியும் சுயநலத்திற்குப் பயன்படுத்தியும் கல்விப் பயிரை செழிக்க வொட்டாத களையாக இருக்கின்ற நிலையை நாம் நாட்டிலே பார்க்க முடிகிறது. மேல் நாடுகளில் ஃபோர்டு போன்ற தொழில் அதிபர்கள் தாங்கள் அடையும் ஊதியத்தில் பெரும் பகுதியைக் கல்வி நிலையங்கள் நிறுவவும்—கலை, மருத்துவக் கூடங்கள் சிறக்கவும் செலவிடுகின்றனர். ஆனால் நம் நாட்டவரோ கல்வி நிலையங்கள் அமைத்துப் பொருளீட்ட முயற்சிக்கும் அருவருக்கத்தக்க காரியத்தில் முனைப்புக் காட்டுகின்றனர். கல்வி நிலையங்களில் இம்மாதிரியான ஊழல்கள் தலையெடுப்பது கட்டாயம் மாணவரின் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டுணர்ச்சியையும் வளர்க்காது. மாறாக சிதைக்கும்.

மாணவர்களின் விழிப்பு

ணர்ச்சியையும் அரசியல் ஆர்வத்தையும் அரசியல் கட்சிகள் கிளர்ச்சிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதும் மாணவரிடையே பொறுப்பற்ற தன்மையை வளர்க்கும். விடுதலைக் கிளர்ச்சியில் — குறிப்பாக ஒத்துழையாமை இயக்கத்தில்— சேருமாறு காந்தியடிகள் மாணவர்களை அழைத்தபோதே ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் அச்செயலை வன்மையாகக் கண்டித்து, மாணவரின் கட்டுப்பாட்டுணர்ச்சி அடியோடு கெட்டுவிடும் என்று எச்சரித்தார். அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்த தன் விளைவை இன்று பள்ளிகளில் பார்க்கிறோம். ஆகவே தான் அறிஞர் அண்ணா அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும், மாணவர்கள் அரசியலை ஆய்ந்தறிய வேண்டும்—ஆனால் அரசியல் கிளர்ச்சிகளில் பங்கேற்று படிப்பைப் பாழ்படுத்திக் கொள்ளக்கூடாது என்ற கருத்தில் உறுதிப்பாடு காட்டுவதையே மாணவருக்கான அடிப்படைத் திட்டமாக்கியிருக்கின்றனர்.

மாணவர் கவனத்தைப் பயன் பெறும் வகையில் திருப்பும் சூழ்நிலை, திறமையும் ஒழுக்கமும் உள்ள ஆசிரியர்கள், மாணவர் நலனில் உள்ளபடியே அக்கறையுள்ள நிர்வாகம், மாணவர்களைப் பக்குவமற்ற நிலையில் அரசியல் கிளர்ச்சிகளில் பிடித்துத் தள்ளாத பொறுப்புள்ள அரசியல்வாதிகள்- இத்தனையும் ஒருசேர அமையுமானால் மாணவரிடையே கட்டுப்பாட்டுணர்ச்சி செழித்துச் சிறக்கும். கட்டுப்பாடு இல்லை என்று சொல்லுவதாலேயே பொறுப்பு கழிந்து விட்டதாகக் கருதாமல், அதனை வளர்க்க சம்பந்தப்பட்ட அனைவரும் முனைவரேல், பள்ளிகள் உண்மையிலேயே பண்பாடு வளர்க்கும் உலைக்களங்களாகும். வேலை கடினமல்ல! மனமும் பொறுப்புணர்ச்சியும் வேண்டும். உபதேசம் பயனளிக்காது—உருவான திட்டமும் செயலும் தேவை. ஃ

விற்பனையாகிறது!

கவிஞர் கண்ணதாசன்

எழுதிய

“உயிர் ஓவியங்கள்”

விலை ரூபாய் ஒன்று

விவரங்கட்கு :

பி. இராமசாமி அன் பிரதர்ஸ்,

“முத்துமாளிகை” : : சென்னை-4.



" அடடா ! நீங்க கீழே இறங்குங்க. சாவி எனக் கிட்டயேதான் இருக்கு !"





விசித்திரப் பிறவி!

சீனாவிலே யே சேன் குவான் என்று பெயர் படைத்த இவன் கைகளிலே இரு வளையங்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றன; அதில் ஒரு தட்டு தொங்க விடப்பட்டிருக்கிறது; இந்தத் தட்டிலே அவன் கோவிலிலே சாம்பிராணி போட்டுவந்தான்.

இந்த வளையங்களை அவன் தனது பன்னிரண்டாவது வயதிலே மாட்டிக் கொண்டான்; தூங்கும்போதுகூட அதை அவன் கழற்றுவதில்லை. அது அவன் உடம்போடு ஒரு அங்கம்போல் இருக்கிறது!

இதுதான் கலை உலகம்!

ஓவியம் படைப்போர், காவியம் புனைவோர், எழுத்து வித்தகர்கள், இசை வல்லுநர்கள், இவர்களெல்லாம் தங்கள் கலையை வளர்க்க; தாங்கள் ஈடுபட்டுள்ள ஒரு முயற்சியில் முன்னேற்றம் காண சிந்தனை செய்கிறார்கள். கற்பனை உருவாகிறது. கருத்துக்கள் வெடித்துச் சிதறுகின்றன. வானவெளியை நோக்குவதாலோ ஏதோ சூன்ய வெளியை 'வெறிச்'சென்று பார்த்துக்கொண்டிருப்பதாலோதான் இவர்களால் சிந்திக்க முடிகிறது; என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்குமாறாக வரலாற்றிலே இடம் பெற்றுவிட்ட சில முக்கியமானவர்கள தங்கள் சிந்தனைத்திரியைத் தூண்டிக்கொள்வதற்குக் கையாண்ட விசித்திர வழிகள் வியப்பாக இருக்கிறது.

நம் நாட்டிலும் கண்டிருக்கிறோம்; வெற்றிலை, பாக்கு, புகையிலை போட்டுக் குதப்பினால் இசையமைப்பாளர் சிலருக்கு சூடு கிளம்பும். ஒரு 'சிட்டிகை' பொடியை 'சர்'ரென்று உள் நாசிவரை இழுத்தால்தான் சிலரது மூளை வேலை செய்ய ஆரம்பிக்கும் இன்னும் 'சிகரெட்' காதலர்கள் இருக்கவே இருக்கிறார்கள். ஏதாவதொரு எழுத்தோவியத்தை அவர்கள் முடிப்பதற்கும் 'ஆஷ் ட்ரே' நிறைவதற்கும் சரியாக இருக்கும். அபின், சாராயம் இவைகள் இல்லாவிட்டால் கவிதை வடிக்க முடியாத கவிஞர்களும் உளர்!

இப்படிப்பட்ட விசித்திரக் கருவிகளுக்கு தங்களை இரையாக்கிக் கொண்ட சில மேனாட்டார்களின் கதை இன்னும் சுவையாக இருக்கிறது:

பிரான்ஸ் நாட்டின் இணையற்ற தளபதி, சர்வாதிகாரி என்று கருதப்படும் நெ போலியன் எந்தவித இராணுவ நட



உலகப் புகழ்பெற்ற மேதைகள், மாபெரும் இலக்கியப் புதையல்களைத் தோண்டி எடுக்க விசித்திரமான வழக்கங்களைக் கொண்டிருக்கின்றனர்....அந்த மேதைகளின் மன எழுச்சிக்குப் பாதை அமைத்துத் தந்த வேடிக்கையான பழக்கங்களை இங்கே படியுங்கள் :

வடிக்கை எடுக்க வேண்டுமானாலும் 'கிளைசிரைசா' என்ற செடியின் வேரைத்தான் மென்று கொண்டிருப்பாராம்!

இருபதாம் நூற்றாண்டின் ஷேக்ஸ்பியர் அன்று கருதப்படும் பேர்னாட்ஷா கருத்துக்கள் உதிப்பதில்லை என்றால் பஸ் சவாரி செய்ய ஆரம்பித்து விடுவாராம்!

ஓவிய நிபுணர்களும் இதற்கு விலக்கல்ல. துலாசே லாட்ரே என்பவருக்கு விபசார விடுதிகளுக்குப் போய்விட்டு வந்தால்தான் இயற்கையோடு வரைய

முடியும்! மறறும் மோடிக்ளினி, மார்ஸ் உடரில்லோ போன்றோருக்கு மதுப் பீப்பாய்கள்தான் மன எழுச்சிக்கு பாதை அமைக்க முடியும். பிரான்ஸ் நாட்டு பிரபல ஓவியர் யூஜின் திலா கிரேயுச்கு யாராவது அழகிய ஆரணங்கின் மடியில் இருந்தால்தான் எந்தக் காட்சியை இன்று வரையலாம் என்ற எண்ணம் ஓடும். 'உலகம் வியக்கும் சில சித்திரங்களை நான் அந்த செந்தாமரைகளின் அணைப்பிலே இருக்கும்போதுதான் கற்பனை செய்திருக்கிறேன்" என்று பெருமையாகப் பேசிக் கொள்வாராம் அவர்!

''மூன்று வீரர்கள் 'முகமூடி மனிதன்' போன்ற பெரும் இலக்கியங்களைப் படைத்த அலெக்ஸாண்டர் டூமாஸுக்கு எழுதுவதற்கு நீல நிறக் காகிதமும் பச்சை நிற மையும்தான் தேவை. மற்ற வண்ணங்கள் அவரது சிந்தனையையே சிதறடித்து விடுமாம்!

'நாநா'வை நமக்களித்த எமிலி சோலாவுக்கு இருட்டறையில்தான் தன் மூளையைத் தீட்டிக் கொள்ள முடியும். ஆனால் சிந்தனைச் சிற்பி புரட்சியின் வித்து என்று கூறப்படும் ரூஸோ திறந்த வெளியில், பூந்தோட்டத்தில், கதிரவன் ஒளி குறைவின்றி இருக்கும்பொழுதுதான் காகிதத்தில் பேனாவை வைப்பார்.

துப்பறியும் நாவல்கள் எழுதி புகழ்பெற்ற எட்கர் வாலஸ் என்பாருக்கு எண்ணிக்கையற்ற தேநீர் 'கப்பு'கள் காலியாகிக்கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவரது எழுத்திலே மர்மங்கள் தொக்கி நிற்கும். இதன் விளைவு 'டிராப்சி' என்ற நீரழிவுவியாதி அவரை ஆட்கொண்டது!

வேடிக்கையாக எழுதுவதில் சிறப்புற்ற மார்க் ட்வேயினுக்கு மிளகுப் பொடி தூவிய முட்டைகளில்தான் அவர் சிந்தனையே அடங்கி யிருக்கிறது! இதைவிட வேடிக்கை ஷிலலர் என்ற ஜெர்மானியக் கவிஞரின் வழக்கம். அவரது மேஜை நிறைய எப்பொழுதும் அழுகிய ஆப்பிள் பழங்கள் இருக்க வேண்டுமாம். அந்த துர்நாற்றம்தான் அவர் கவிதைகளுக்கு எழுச்சியூட்டுமாம்! விசித்திர நாசி!

லூயிகி செருபினி என்ற இத்தாலிய இசையமைப்பாளர் தின

மும் காலையில் சரியாக 2000 அடிகள்வரை உலாவி வருவார். பின் மூன்றுதரம் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, இரு முறை மூக்கு சிந்தி விட்டு பிறகு தான் இசையமைக்க உட்காருவாராம்!

ஆனால் உலக மகா கவி ஷெல்லியோ சாப்பாட்டுப் பிரியர். மார்க் ட்வெயினைப்போல வயிற்றுவலியை சம்பாதித்துக் கொள்ளும் அளவுக்கு ரொட்டிகளை முழுங்கிக்கொண்டேதான் எழுதுவார்!

தற்காலத்திய எழுத்தாளர் சிலருக்கு வேகமாக எண்ணங்கள் உருவாக வேண்டுமானால் ரேடியோவைச் சத்தமாக திருப்பி வைத்து விடுவர். சிறு கதை எழுத்தாளர் ஆன்டன் செகாவ் என்பவருக்கு எழுத வேண்டும் என்ற ஆசை பிறந்து விட்டால் உடனே ஒரு விருந்துக்கு ஏற்பாடு பண்ணுவாராம். அந்த கேளிக்கைகளின் சத்தத்திலே எழுத வேண்டியவை ஊற்றெனக் கிளம்பிவிடுமாம். டாக்டர் ஜான்சனுக்கு தன் பூனைக்குட்டி மேஜைமீது உட்கார்ந்து கொண்டு 'மியாவ், மியாவ்' என்று கத்திக்கொண்டிருந்தால்தான் எழுத முடியும்!

ஆனால் இப்சனைப் போன்றவர்களுக்கு ஊசிவிழும் ஓசையே வேதனையாக இருக்கும். இவர்களெல்லாம் ஏகாந்தம் விரும்பிகள்.

கனவு கண்டு கதை எழுதியவரும் உண்டு. ஆர். எல். ஸ்டீவன்சன் ஒரு நாள் இரவு மணி இரண்டிருக்கும். 'ஆ' என்றலறிக் கொண்டே படுக்கையை விட்டெழுந்தார். என்னவென்று அவர் மனைவி வினவிய போது பயங்கரக் கனவு என்றாராம். பிறகு அப்படியே மேஜை மீது எழுத உட்கார்ந்தார். மூன்று மணி நேரம் அவர் பேனாவின் ஓட்டம் தடைபடவில்லை. விளைவு...? உலகமே வியந்த, திரைப்படமாக வெளிவந்து அமோகவெற்றியடைந்த இலக்கியம் உருவாயிற்று. அதுதான் 'டாக்டர் ஜெகில் அண்டு மிஸ்டர் ஹைடு'!

பெதோவன் என்பவருக்கு கொஞ்சநேரம் மளமளவென்று தண்ணீர் கொட்டிக்கொண்டிருக்கும் குழாயடியில் தன் தலையை வைத்துக்கொண்டிருந்

தால்தான் கருத்துகள் கொப்பளிக்கும்!

எதையாவது சுவைத்துக் கொண்டிருந்தால்தான் யோசனையைச் செய்ய முடியும் என்பவர்களில் சிலர்.

மில்டன், டேஸ்கார்டஸ், ரோஸினி போன்றவர்களுக்கு சோம்பேறித்தனமாக சிறிது நேரம் படுக்கையில் சாய்ந்திருந்தால்தான் தத்துவங்கள் வெளிப்படும்.

—அ. ரா.

ஆதாரம் :
"சண்டே ஸ்டாண்டர்ட்"

செய்தி முழுவதையும் கேள்விப்பட்ட பொகேட் அரசரை விடுவிக்க பாஸ்டிலி சென்றார்.
மன்னவா! என் வீட்டில் மாபெரும் சதி நடந்துவிட்டது. என்னை மன்னித்து விடுங்கள்!
இரும்பு முகமூடி 5
பொகேட் சதி முழுவதையும் விவரித்தான்.
என்ன? என்னைப் போல எனக்கு ஒரு சகோதரனா? நான் கேள்விப் பட்டதில்லையே!
ஆமாம்; அது உண்மை தான்! உடனே புறப்படுங்கள்!
குதிரைகள் பறந்தன அரண்மனை நோக்கி!

அரண்மனையில்...
ராஜகுமாரனாகப் பிறந்து கைதியாக
வாழ்ந்த பிலிப் சகோதரனைப்போல
நடித்துக் கொண்டிருந்தான்.
திடீரென்று அவன் முகம் மாறியது...
ஆமாம்; அநேக ஆண்டுகளுக்குப்
பிறகு முதன் முறையாக அவன்
அன்னையைப் பார்த்தான். அழுகை
பீறிட்டுக்கொண்டு வந்தது.
அடக்கிக்கொண்டான். மண்டி-
-யிட்டான்; மரியாதையைத்
தெரிவித்தான்!
அரசனும் பொகேட்டும் காற்று
வேகத்தில் வந்துகொண்டிருந்-
-தனர்.
மன்னன் உள்ளே நுழைந்தான்-
தன்னைப் போலவே இருக்கும்
சகோதரனைக் கண்டான்-
இருவருமே திகைப்பில் ஆழ்ந்தனர்.


மன்னனுக்குப் பொறுமை தாங்க-முடியவில்லை.
கொடியவனே! என்னைத் தொலைக்கவா சதி செய்தாய்? இவனைக் கைது செய்யுங்கள்!
அய்யோ! என்னை விட்டுவிடுங்கள். எனக்கு மகுடம் வேண்டாம். சாதாரண அடிமையாக வாழ்கி-றேன். மீண்டும் என்னை சிறைக்கு அனுப்பாதீர்கள்!
பிலிப் அம்மாவின் பக்கம் திரும்பினான்.
அம்மா! பத்துமாதம் சுமந்து பெற்ற என் தாயே! நானும் உங்கள் மகன் தானே? எனக்கு இந்தக் கொடுமையை நீங்கள் மனதாரச் செய்யலாமா? அய்யோ! நீங்களாவது என் சகோதரனுக்குச் சொல்லுங்களம்மா! உங்களைப் பார்த்துக்கொண்டே இங்கேயே இருக்கிறேனம்மா!
மகாராணி மௌனமாகவே இருந்தாள்.


மன்னன் உத்தரவிட்டான்:
"பிலிப் என்கிற இவனுக்கு அடையாளம் தெரியாமல் முகத்திலே இரும்பு முகமூடியை மாட்டி சாகும்வரை பாஸ்டிலியிலே பூட்டுங்கள். முகமூடியை அவன் கழற்ற முயற்சித்தால் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லுங்கள்!"
அடுத்த கணமே பிலிப்பிற்கு இரும்புமுகமூடி மாட்டப்பட்டது.
பாவம்! ராஜ வம்சத்தில் பிறந்திருந்தும் அவனால் ராஜாவாக இருக்கமுடியவில்லை.
அரசகுமாரன் தான்; இருந்தாலும் சிறைவாழ்வுதான் அவனுக்குக் கிடைத்த பரிசு!
ஒரு வினாடி முன்னதாகப் பிறந்திருந்தாலும்; ஏழை வீட்டில் அவதரித்திருந்தாலும் சுதந்தரமாகவாவது வாழ்ந்திருக்கலாம்.
அந்தோ, பரிதாபம்! இதுதான் ராஜரீகம் போலும்!
வரலாற்று உண்மை கலந்த கற்பனைக் கதை.
செல்லப்பன்
(முற்றும்)

பூனை விளைத்த பூசல்

வெள்ளைப் பூனை அவ்வீட்டில் அனைவரையும்விட இராமுவின் மனைவியையே மிகவும் விரும்பியது. இராமுவின் மனைவி பாலா. அனைவரையும் விட வெள்ளைப் பூனையையே மிகவும் வெறுத்தாள். அவள் புக்ககத்திற்கு வந்து இரண்டு மாதங்களே ஆகின்றன கணவனின் அன்பு மனைவி; மாமியின் அருமை மருமகள்—எனப் பெயரெடுத்த பதினான்கு வயதுடைய இளம் பெண் அவள். சமையல் அறையின் சாவி அவள் இடையில் தொங்கியது. வேலைக்காரர்களிடையே அவள் ஆணை நடந்தது. அவள்தான் தற்போது வீட்டின் தலைவி! மாமியார் அவள் கையில் பொறுப்பை ஒப்படைத்து அமைதி பெற்றாள்.

இந்தி :

பகவதி சரண்வர்மா

ஆனால் அவளோ பதினான்கே வயதுடைய பெண். சில சமயம் சமையல் அறை திறந்து கிடக்கும். சில நேரம் அந்த அறையில் உட்கார்ந்தபடியே தூங்கிவிடுவாள். வெள்ளைப் பூனைக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும் நெய்யையும் பாலையும் குடித்துவிட்டு ஓடிவிடும். பாலா என்ன செய்வதென்றறியாது திகைப்பாள். அவள் சட்டியில் நெய்யை ஊற்றிக் கொண்டே தூங்கி விடுவாள். மீதியுள்ள நெய் பூனைக்கு விருந்தாகும். பாலா பாலை மூடி வைத்துவிட்டுச் சமையற்கார அம்மாவுக்குத் தேவையான பொருள்களை எடுத்துக்கொடுக்கச் செல்வாள். திரும்பி வந்து காலி பாத்திரத்தைத்தான் காண்பாள்! இதோடு நின்றாலும் கவலையில்லை; பாலாவைச் சாப்பிடக்கூட விடாமல் அவளைச் சோதித்தது அந்தப் பூனை. பாலாவின் அறைக்குப் பால்

கோவா வரும். இராமு வரும் வரைக் காத்திருப்பாள். அதற்குள் கிண்ணம் காலியாகிவிடும். கடைத்தெருவினின்று பாலாவுக்கென்று அல்வா வரும். பாலா வெற்றிலை மடித்து விட்டுத் திருப்புவதற்குள் அல்வா காணாமல் போய்விடும். பாலா, 'ஒன்று நான் இந்த வீட்டில் இருக்க வேண்டும்; அல்லது இந்தப் பூனை இருக்கவேண்டும்' என்று உறுதி பூண்டாள். இரு பக்கங்களிலும் படையெடுப்புக்கான ஏற்பாடுகள் தொடங்கின. இருவரும் எச்சரிக்கையாக இருக்கலாயினர். பூனை பிடிக்கும் கூண்டு வந்தது; அதனுள் பால், அல்வா, எலி, இன்னும் பூனைக்குப் பிடித்தமான பொருள்கள் பலவும் வைக்கப்பட்டன; ஆனால் பூனை அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதுவும் விழிப்போடு இருந்தது. இதுவரை அது பாலாவிடத்தில் சற்று அஞ்சியிருந்தது. இப்போதோ அவள் கூடவே சுற்றியலைந்தது. ஆனால் அவள் கைக்கு எட்டாத தொலைவிலேயே இருந்தது.

பூனையின் அதிகாரம் பெருகவே பாலாவுக்கு அந்த வீட்டில் இருப்பது தொல்லையாகி விட்டது.

ஒருநாள் பாலா இராமுவுக்காகப் பாயசம் பண்ணினாள். பிஸ்தா, பாதாம், தாமரை விதை இன்னும் பல சுவையான பொருள்களைச் சேர்த்துச் செய்யப்பட்டது அது. அதனை ஒரு கிண்ணத்தில் நிரப்பிப் பூனைக்கு எட்டாத உயரத்தில் ஒரு மாடத்தில் வைத்தாள். அதன் பிறகு அவள் வெற்றிலை மடிக்கத் தொடங்கினாள்.

சிறிது நேரத்தில் பூனை அறைக்கு வந்தது. மாடத்தின்

தமிழில்:

அல்லி

லே நின்றபடி மேலே இருக்கும் கிண்ணத்தை நோக்கியது. மோப்பத்தின் மூலம் அதில் சுவையான பொருள் வைக்கப்பட்டிருப்பதை அறிந்துகொண்டது. எவ்வளவு உயரம் என்பதைப் பார்த்துக் கொண்டது. பாலா வெற்றிலை மடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும் புரிந்து கொண்டது. பாலா வெற்றிலையை மாமியிடம் கொடுக்கச் சென்றபோது பூனை ஒரே தாவாகத் தாவியது. அதன் கால் கிண்ணத்தில் பட, கிண்ணம் கணீரென்ற ஓசையோடு தரையில் விழுந்தது. அந்த ஓசையைக் கேட்ட பாலா வெற்றிலையை மாமியின் பக்கம் வீசி எறிந்து விட்டு ஓடினாள். கண்ணாடிக் கிண்ணம் தூள் தூளாகச் சிதறிக் கிடப்பதையும் தரையில் கொட்டியுள்ள பாயசத்தைப் பூனை சுவைத்து உண்பதையும் கண்டாள். அவளைக் கண்டதுமே பூனை ஓடி விட்டது.

பாலாவுக்கு ஆத்திரம் மிகுந்தது. அவளால் பொறுக்க முடியவில்லை. பூனையைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்து விட்டாள். இரவு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. 'பூனையை உயிரோடு விட்டுவிடக்கூடாது. அதை எப்படிக் கொல்லலாம்?' என்றெல்லாம் சிந்தித்தபடி இருந்தாள். காலை மலர்ந்தது. அவள் எழுந்ததுமே படிக் கட்டில் அமர்ந்தபடி பூனை தன்னை அன்போடு நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

பாலா ஏதோ நினைத்தாள். பிறகு புன்முறுவல் பூத்தபடி எழுந்தாள். அவள் எழுந்ததுமே பூனை அங்கிருந்து நழுவியது. பாலா ஒரு கிண்ணம் பாலை வாசற்படியில் வைத்து விட்டுப் போனாள். கையில் மணையை எடுத்துக் கொண்டு அவள் திரும்பியபோது, பூனை பாலைச் சுவைப்பதில் ஈடுபட்டிருப்பதைக் கண்டாள். நல்ல வாய்ப்பு கிடைத்தது. அவள் தன் முழு வலிமையையும் தன் கையில் கூட்டி மணையைப் பூனையின் மீது வீசி எறிந்தாள். பூனை ஆடவில்லை; அசையவில்லை; கத்தவுமில்லை; ஒரேயடியாகப் படுத்துவிட்டது!

மணை விழுந்த ஓசையைக் கேட்டு வேலைக்காரி துடைப்பத்தைப் போட்டு ஓடிவந்தாள்; சமையற்காரி சமையலை விட்டு வந்தாள்; மாமி பூசையை நிறுத்திவிட்டு அந்த இடத்திற்கு ஓடிவந்தாள். பாலா தலை குனிந்தபடி, குற்றவாளிபோல் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அட கடவுளே! பூனை இறந்துவிட்டது! அம்மா! சின்னம்மா கையால் பூனையின் கொலை ஏற்பட்டுவிட்டது! இது சரியல்ல அம்மா!" என்றாள் வேலைக்காரி.

"அம்மா! பூனைக் கொலை மனிதக் கொலைக்கு ஈடானது. இந்தப் பாவம் போகும்வரை நான் இங்கே சமைக்க மாட்டேன்" என்றாள் சமையற்காரி.

"ஆமாம்; உண்மைதான்! இந்தப் பாவம் தொலையும்வரை இங்கே யாரும் சாப்பிட முடியாது; தண்ணீர்கூடக் குடிக்க முடியாது. அடடா! இவள் என்ன வேலை செய்து விட்டாள்!" என்றாள் மாமி.

"என்ன செய்யலாம்? புரோகிதரை அழைத்து வரட்டுமா?" என்று கேட்டாள் வேலைக்காரி.

மாமிக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது. "ஆமாம்; ஆமாம். உடனே போய் அழைத்து வா" என்றாள்.

எல்லோரும் கண நேரத்தில் அந்த இடத்தில் நிற்பதே 'பாபம்' என்று எண்ணியவர்கள்போல் வீட்டு முன்புறத்திற்கு வந்துவிட்டார்கள்.

பூனை கொலைப்பட்ட செய்தி மினசாரம் பாய்வதைப்போல உடனடியாக அக்கம்பக்கத்தில் பரவி விட்டது. இராமுவின் வீட்டின் முன்புறத்தில் பெண்களின் கூட்டம் கூடி விட்டது. நாலா பக்கத்திலிருந்தும் கேள்விமழை பொழிந்தது. பாலா தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

புரோகிதர் பரமசுக சாஸ்திரியிடம் இந்தச் செய்தி சென்றபோது அவர் பூசை செய்து கொண்டிருந்தார். செய்தியைக் கேட்டதுமே அவர் எழுந்துவிட்டார். சிரித்துக்கொண்டே மனைவியிடம், "இன்று சமையல் செய்ய வேண்டாம். காசிராமின் நாட்டுப்பெண் பூனையைக் கொன்று விட்டாளாம். பிராயச்சித்தம் நடக்கப் போகிறது. நல்ல விருந்து இருக்கும்!" என்றார்.

பரமசுகம் கட்டை குட்டையான ஆள்; உயரம் நான்கடி பத்து அங்குலம்; தொந்தியின் சுற்றளவு ஐம்பத்தெட்டு அங்குலம் இருக்கும்; வட்டமான முகம்; வெண்ணிறமேனி; நீண்ட குடுமி.

வடமதுரையில் அதிக உணவு உண்பவர்களின் பட்டியல் தயாரித்தால் அதில் பரம சுகத்தின் பெயர் முதலில் இருக்கும் என்று சொல்லுவார்கள்.

பரமசுகம் கண நேரத்தில் காசிராமன் வீட்டு வாசலில் நின்றார். பஞ்சாயத்து கூடியது. பாலாவின் மாமியார், சமையற்காரி, கிட்டுவின் தாய், சின்னுவின் தாத்தா, பரமசுகம்—இவர்

சுதந்திர வோட்டுரிமை!

தென் அமெரிக்காவில் ஒரு தேர்தல் நடைபெற்றது. ஆளும் கட்சியினர் தங்களுக்கிருக்கும் எல்லா 'பல'ங்களையும் உபயோகித்து எதிர்க்கட்சிகளைத் தலையெடுக்க விடாமல் தடுத்து வந்தனர். அப்போது வோட்டுகள் எண்ணப்பட்ட இடங்களில் ஒன்றில் நடைபெற்ற வேடிக்கையான நிகழ்ச்சியைக் கீழே தருகிறோம்:

போலீஸ் தலைமை அதிகாரி ஒருவரின் முன்னிலையில் வோட்டுகள் எண்ணப்பட்டன.

விழுந்த வோட்டுகள் எல்லாம் சர்க்கார் கட்சிக்கே சாதகமாய் இருந்தன. வெகு நேரம் கழித்து ஒரு வோட் எதிர்க்கட்சிக்கு விழுந்திருந்தது.

"பார்த்தீர்களா? எதிர்க்கட்சியினர் சுதந்திரமாய் வோட்டுப் போடலாம் என்பதற்கு இதுவே அத்தாட்சி" என்றார் போலீஸ் தலைமை அதிகாரி.

அப்புறம் வெகுநேரம் கழித்து இன்னொரு வோட் எதிர்க்கட்சிக்குச் சாதகமாக இருந்தது.

போலீஸ் அதிகாரி எரிச்சலுடன், "திருட்டுப் பயல்! ஒரே ஆள் இரண்டு தடவை வோட் செய்திருக்கிறான். இது செல்லாது; இதை ரத்து செய்து விடுகிறேன்" என்றார்.

—'பொஹிமியா'

களே பஞ்சாயத்து உறுப்பினர்கள். மற்ற பெண்கள் பாலாவின் பால் இரக்கம் கொண்டவர்கள்.

கிட்டுவின் தாய், "புரோகிதரய்யா! பூனையைக் கொன்றால் எந்த நரகம் கிடைக்கும்?" என்று கேட்டாள்.

பரமசுகம் சாத்திர ஏட்டைப் பார்த்துச் சொன்னார்: "வெறும் பூனைக் கொலையைக் கொண்டு நரகத்தின் பெயரைச் சொல்ல முடியாது. பூனை எப்போது கொல்லப்பட்டது என்ற முகூர்த்த விபரமும் வேண்டும். அப்போதுதான் நரகத்தைப் பற்றிச் சொல்ல முடியும்."

"சற்று முன்புதான் கொலைப் பட்டது" என்றாள் சமையற்காரி.

பரமசுகம் ஏட்டைப் புரட்டினார்; எழுத்துக்களின்மேல் விரலைச் செலுத்தினார்; தலையில் கை வைத்தபடி ஏதோ சிந்தித்தார்; முகத்தில் துயரத்தின் சாயலை வரவழைத்துக் கொண்டார்; முகத்தில் சிவப்பேறியது; மூக்கு சுருங்கியது; குரல் ஓங்கியது: "கடவுளே! கடவுளே! அனர்த்தம் நேர்ந்து விட்டது! காலையில், பிரம்ம முகூர்த்தத்தில் பூனைக் கொலை! கொதிக்கும் எண்ணெயில் வறுத்தெடுக்கும் கொடு நரகம் தான கிடைக்கும்! அம்மா, இதென்ன பாபம்!"

மாமியாரின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. "ஐயா! அப்படியானல் என்ன செய்வது? நீங்கள்தான் வழி சொல்ல வேண்டும்." என்றாள்.

பரமசுகம் புன்னகை புரிந்தார். "அம்மா! கவலைப்படாதீர்கள். புரோகிதர்களாகிய நாங்கள் எதற்கு இருக்கிறோம்? சாத்திரத்தில் பிராயச்சித்தம் என்ற விதி இருக்கிறது. பிராயச்சித்தத்தால் எல்லாம் சரியாகி விடும்," என்றார்.

மாமியார், "அதனால்தான் ஐயா உங்களை அழைத்தோம். மேலே என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்," என்றாள்.

"என்ன செய்வது? தங்கத்தால் ஒரு பூனை செய்து மருமகள் கையால் தானம்கொடுக்க வேண்டும். தானம் கொடுக்கும்வரை இந்த வீடு அசுத்தம் என்று கருதப்படும். தானம் கொடுத்த பிறகு இருபத்தோரு நாள் பூசை நடக்கும்!"

சின்னுவின் பாட்டி, "ஆமாம்; பின்னே? சாஸ்திரியார் சொல்வதுதான் சரி. முதலில் தானம்; பிறகு பூசை," என்றாள்.

"எத்தனை எடை தங்கத்தில் பூனை செய்ய வேண்டும்?" என்று மாமியார் கேட்டாள்.

பரமசுகம் புன்னகை பூத்தார். கையால் வயிற்றைத் தடவிக் கொண்டே கூறினார். "எத்தனை எடையிலா? அம்மா! சாத்திரத்தில் பூனை எத்தனை எடையோ அத்துணை எடையில் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இது கலி காலம். சாத்திரத்தை யார் பார்க்கிறார்கள்? அதன் மீதிருந்த மதிப்பே போய்விட்டதே. பூனையின் எடைக்குத் தக்கபடி எப்படிச் செய்ய முடியும்? பூனை இருபது இருபத்திரண்டு சேருக்குக் குறையாது. சரி; குறைந்தது இருபத்திரண்டு தோலா பொன்னில் பூனை செய்து தானம் கொடுங்கள். பிறகு உங்கள் விருப்பம்."

மாமியார் கண்களை அகல விழித்துப் பரமசுகத்தைப் பார்த்தாள். "அம்மாடி! இருபத்திரண்டு தோலா? மிகவும்

அதிகம் ஐயா! ஒரு தோலாவில் பூனை செய்தால் போதாதா?'' என்றாள்.

பரமசுகம் சிரித்தார். ''ஒரு தோலாவில் பூனையா? உங்களுக்கு மருமகளைவிடப் பணம் பெரிதா? மருமகள் கையால் பெரிய பாபம் நேர்ந்திருக்கிறது. அதை நீக்குவதில் கஞ்சத்தனமா?''

சிறிது நேரம் 'பேரம்' நடந்தது. இறுதியில் பதினொரு தோலாவில் செய்வதென முடிவாயிற்று.

அதன் பிறகு பூசை பற்றிய பேச்சு வந்தது.

''இதில் தொல்லை ஒன்றுமில்லை. நாங்கள் எதற்கு இருக்கிறோம்? அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்; நீங்கள் பூசைக்கு வேண்டிய பொருள்களை என் வீட்டிற்கு அனுப்பி விடுங்கள்,'' என்றார் சாஸ்திரி.

'' பொருள்களுக்கு எவ்வளவு பணம் ஆகும்?''

'' மிகவும் குறைந்த செலவில் நான் பூசை செய்துவிடுகிறேன். தானத்திற்காக பத்து மனு கோதுமை, ஒரு மனு அரிசி, ஒரு மனு பருப்பு, ஒரு மனு எள்ளு, ஐந்து மனு ஜவ்வரிசி, இருபது சேர் நெய், ஒரு படி உப்பு-இவ்வளவுதான். இதிலே எல்லாம் ஆகிவிடும்.''

'' அடேயப்பா! இவ்வளவு பொருள்களா? ஐயா, இதற்கே நூறு நூற்றைம்பது ரூபாய் ஆகும் போலிருக்கிறதே!''—மாமிக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது.

'' இதற்குக் குறைந்து ஒன்றும் செய்ய முடியாது அம்மா. பூனைக் கொலை எவ்வளவு பெரிய பாபம்! செலவைப் பார்ப்பதற்கு முன் மருமகளின் பாபத்தைப் பாருங்கள். இது பிராயச்சித்தம் அம்மா, விளையாட்டல்ல. பாபத்திற்குத் தக்க பிராயச்சித்தம் செய்ய வேண்டும். நீங்கள் என்ன, ஒன்றுமில்லாதவர்களா? நூறு நூற்றைம்பது ரூபாய் உங்களுக்குத் தூசு போல!''

இதைக் கேட்டு அங்கிருந்தோர் ஊக்கமடைந்தனர். கிட்டுவின் தாய், '' புரோகிதரையா சொல்வது சரிதான். பூனைக் கொலை சாதாரண பாவமல்ல. பெரிய பாவத்திற்குப் 'பெரிய'

ஞாபக மறதி!

'' நான் கொடுத்த சர்டிபிகேட்டில் ஒரு மாறுதல் செய்யவேண்டும்; கொஞ்சம் தருகிறீர்களா?'' என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தார், மரண விசாரணை அதிகாரியிடம், ஒரு டாக்டர்.

அதிகாரியோ கொஞ்சமும் தாட்சண்யமின்றி, '' ஒரு முறை கொடுத்த சர்டிபிகேட்டை மாற்ற முடியாதே! அது சட்ட விரோதமாயிற்றே!'' என்றார்.

'' இது முக்கியமான திருத்தமாயிற்றே! 'மரணத்தின் காரணம்' என்ற கேள்விக்கு எதிரே ஏதோ ஞாபகமாக என் கையெழுத்தையல்லவா போட்டு விட்டேன்!'' என்றார் டாக்டர்!

—'தி இங்கிலீஷ் டைஜஸ்ட்'

செலவு செய்ய வேண்டும்,'' என்றாள்.

"பின்னே என்ன? தானம்-புண்ணியம் முதலியவற்றால்தான் பாவம் தொலைகிறது. தானதர்மத்தில் சிக்கனம் கூடாது,'' என்றாள் சின்னுவின் பாட்டி.

"அம்மா! நீங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். இது ஒரு பெரிய செயலா?'' என்றாள் சமையற்காரி.

மாமியார் தன்னைச் சுற்றிலும் பார்த்தாள். அனைவரும் பரமசுகத்தின் சார்பில் இருப்பதைக் கண்டாள். பரமசிவம் வெற்றிப் புன்னகை புரிந்தார். "அம்மா! ஒரு பக்கம் மருமகளுக்குக் கொடு நரகம். இன்னொரு பக்கம் சிறு செலவு. எது நல்லது?.........செலவைப் பார்க்காதீர்கள்,'' என்றார்.

பெருமூச்சு விட்டவாறு, "உம்; இனி நீங்கள் ஆட்டுகிற படியெல்லாம் ஆட வேண்டியதுதானே''என்றாள் மாமியார்.

பரமசுகம் சிறிது சினத்தோடு கூறினார்: "அம்மா! இது மகிழ்ச்சிக்குரிய செய்தி! இது உங்களுக்கு உறுத்தினால் செய்ய வேண்டாம். நான் போகிறேன்,'' எனக் கூறிவிட்டு அவர் மூட்டை கட்டத்தொடங்கினார்.

"ஐயா! ஐயா! அம்மாவுக்கு ஒன்றும் உறுத்தவில்லை. பாவம், கவலைப்படுகிறார்கள். அவ்வளவுதான். ஆத்திரம் கொள்ளாதீர்கள்'' — சமையற்காரி, சின்னுவின் பாட்டி, கிட்டுவின் தாய் அனைவரும் ஒரே குரலில் கூறினார்கள்.

மாமியார் பரமசுகத்தின் கால்களையே பிடித்துக் கொண்டு விட்டாள். அதன் பிறகு பரமசுகம் நன்றாக அமர்ந்து கொண்டார்.

"இன்னும் என்ன செய்ய வேண்டும?''

"பதினொரு நாள் பூசைக்குப் பதினொரு ரூபாய். பதினொரு நாட்கள் இரண்டு வேளை ஐந்தைந்து பார்ப்பனருக்கு விருந்து வைக்க வேண்டும்.''—சிறிது நிறுத்திவிட்டுப் பரமசுகம் மேலே தொடர்ந்தார்: "நீங்கள் இதற்குக் கவலைப்பட வேண்டாம். நான் ஒருவனே இரண்டு வேளையும் சாப்பிடுகிறேன். நான் ஒருவன் சாப்பிட்டாலே பத்துப் பார்ப்பனர் சாப்பிட்ட பலன் கிடைக்கும்.''

"புரோகிதர் சொல்வது சரிதான். அவருடைய வயிற்றைப் பார்த்தாலே தெரியவில்லையா?'' என்று கிண்டல் செய்தாள் சமையற்காரி.

"சரி; இனிப் பிராயச்சித்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுங்கள். பதினொரு தோலா பொன் கொடுங்கள். நான் பூனை செய்துதரச் சொல்கிறேன். இரண்டு மணி நேரத்தில் செய்து கொண்டு வந்து விடுவேன். அதற்குள் பூசைக்கு வேண்டிய ஏற்பாடு செய்து வையுங்கள்......''

அவர் பேச்சை முடிப்பதற்குள் வேலைக்காரி மூச்சு வாங்க அறைக்குள் வந்தாள். அனைவரும் திடுக்கிட்டனர். மாமியார் இதயம் படபடக்க, "என்ன, என்ன நடந்தது?'' என்று கேட்டாள்.

வேலைக்காரி குரல் தடுமாற, "அம்மா! அந்தப் பூனை எழுந்து ஓடி விட்டது!'' என்றாள்.

எல்லோரும் சிரித்தார்கள். ஆனால் அந்தப் புரோகிதர் மட்டும் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

வருவாரோ? வாராரோ?

★ கவிஞர் முடியரசன் ★

வருவாரோ வாராரோ
  மணவாளன் தைநாளில்
        —வருவாரோ

உறவாடி ஒருகன்னம் சிவப்பேறச் செய்தார்
  ஓசிந்தாடி நானினேன் மறுகன்னம் புதைத்தார்
        —வருவாரோ

பொருள்சேரும் தமிழ்ப்பாடல் பாடுவேன்
  புதிதான முறைபாலே ஆடுவேன்
மருள்மாலை வருவார்நான் ஊடுவேன்
  மகிழ்வாக்கித் தருவார்பின் கூடுவேன்
        —வருவாரோ

சொன்னசொல் அத்தனையும் மறப்பாரோ?
  சுடுநிலவில் துயருண்டு கிடப்பேனோ?
என்நினைவு இல்லாமல் இருப்பாரோ?
  எத்தனைநாள் இத்துயரம் பொறுப்பேனோ?
        —வருவாரோ

வாழ்க்கைச் செலவு

வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் என்றால் என்ன? பலருக்கு இது புரியவேயில்லை; அதிலும் தோட்டப் பாட்டாளிகள் பெரும்பாலோருக்கு விளங்கவில்லை.

வாழ்க்கையில் சர்வ சாதாரணமாக உபயோகப் படும் பொருட்களின் விலைவாசிகளை ஒரே ஒரு இடத்தில் உள்ள விலையை மட்டும் மனதில் கொண்டு நிச்சயப்படுத்த முடியாதல்லவா? ஒரு தோட்டத்தில் முளைக் கீரையின் விலை கட்டு 1-க்கு 20-காசாக இருக்கும். மற்றொரு தோட்டத்தில் 15-காசாக இருக்கலாம். ஆனால் அநேகமாக இந்தப் பதினைந்து காசுக்குக் கீழும் 20-காசுக்கு மேலும் விலை மாறாது. இந்த இருவித விலையையும் மனதில் கொண்டு ஒரு சராசரி விலையை நிர்ணயித்துக் கொள்வதுதான் வாழ்க்கைச் செலவுக்குரிய புள்ளிகளாகக் கணிக்கப்படுவதாகும்.

இப்படிக் கணிக்கப்படும் புள்ளிக்கு அந்த முளைக் கீரையின் விலை 15 காசாகவுமின்றி 20 காசாகவுமின்றி சுமார் 17 அல்லது 18 காசாகக் கணக்கிடப்பட்டிருக்கும். 20 காசு விற்குமிடத்தில் உள்ளவர் இந்த வாழ்க்கையைச் செலவு புள்ளியைத் தவறானதெனக் கூற முடியாது. காரணம், மற்றொரு சாமானின் விலை இவருள்ள தோட்டத்தில் குறைவாகவும் 15 காசு கீரை விற்கும் தோட்டத்தில் கூடுதலாகவுமிருக்கக் கூடுமன்றோ! இப்படிப் பார்க்கும்போது மொத்தப்புள்ளி ஏறக்குறைய சரிப்பட்டு வந்துவிடும்.

ஒரு மனிதனுக்குக் குறைந்தபட்சம் இன்ன செலவு வரும் என்று முதலாளிகளால் கணக்கிடப்பட்டு வருகிறது. இப்படி ஜீவாதாரத்திற்கே மிக முக்கியமான கண்ணாடியாக விளங்கும் ஒரு கணிதம் தவறாக இருந்தால் அதை ஒப்புக்கொள்ள முடியாது.

வாழ்க்கைச் செலவு புள்ளி விவரம் நாடு முழுதுமுள்ள மக்களின் வாழ்க்கைச் செலவைப் பிரதிபலிப்பதாகவிருப்பதால் அதைக் கணிப்பதில் பலவிதக் கோணங்களிலும் கவனம் மிகவும் நுட்பமாகச் செலுத்தப்பட வேண்டியதவசியமாகும். பல்லாயிரம் குடும்பங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களிடம் பல்வேறு சமயங்களில் கணிதம் செய்யப்பட வேண்டியதவசியமாகும். இதையும் மக்களிடையே பல பிரிவுகளாகப் பிரித்துச் செய்ய வேண்டும்.

—'தங்கமணி', மேதின மலர், மலேயா.

உயிரோவியம்

வேலைக்காரன் பிலிப்ஸ் அன்றைய தபாலில் வந்திருந்த கடிதங்களை மேஜையின் மீது கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான். அயல் நாட்டுத் தபால் தலையோடிருந்த இரண்டு கவர்களை கையில் எடுத்தார் சாமர். அவர்தான் வீட்டின் சொந்தக்காரர்.

முதல் கவருக்குள் ஒரு பெண்ணின் புகைப்படம் இருந்தது. அதைக் கண்டதும் சாமர் லேசாக சிரித்துக் கொண்டார். அடுத்த கடிதத்தைப் பிரித்தார். அவருக்கு அறிமுகமில்லாத எழுத்து. அவர் கருத்தை அதில் செலுத்தியபோது, விஷத்தை இனிப்பில் தோய்த்து தருவதைப் போன்ற வாசகங்கள் அக்கடிதத்தில் இருந்தன. புகைப்படத்திலிருந்த பெண்ணைப்பற்றி வேறு யாரோ ஒருத்தி எதையெல்லாமோ எழுதியிருந்தாள். அதனால் என்ன பலன் ஏற்பட வேண்டுமென்று அவள் நினைத்தாளோ, அது நடந்தது! புகைப்படத்திலிருந்த அந்தப் பெண் போக்கிரியாம்! நடத்தைக் கெட்டவளாம்!

கோபத்தோடு கூண்டில் அடைபட்ட மிருகம் உலாவுமே, அதைப்போல சாமர் தனது அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். கடிதத்தை நம்புவதா; வேண்டாமா? பொய்யை மெய்யாக்கிக் காட்டினால் அதனால் பலன் என்ன? இப்படி அவர் மனதில் பலப்பல எண்ணங்கள்! ஒரு தடவை மேஜையின் மீதிருந்த அக்கடிதம் அவர் கண்களில் படவே, அதை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார். காகிதத் துண்டுகள் காற்றில் அலை பாய்ந்தன, அவர் மனதைப்போல!

இந்த நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்தான் பிலிப்ஸ்.

“இங்கேயே சாப்பிட்டு விடுகிறீர்களா...... இல்லை வெளியிலா?’—பணிவாகக் கேட்டான்.

“இன்னும் அரைமணி நேரம் போகட்டும்... இங்கேயே சாப்பாட்டைக் கொண்டு வந்து விடு!”—பிலிப்ஸ் வெளியே போகத் திரும்பினான்.

“நில்!” என்ற எஜமானரின் குரல் அவனை அந்த இடத்திலேயே நிறுத்தியது.

“இன்று நான் வெளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிவந்து கொண்டிருந்தபோது, தெருக்கோடியில் யாரோ ஒருவன் கூட்டம்போட்டு பேசிக்கொண்டிருந்தானே, அவன் யார்? அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் யார்?”

மூலம்: ஓ ஹென்றி—தமிழில்: ‘அதிகமான்’

—சாமர் தனது வேலைக்கார னிடம் கேட்டார். எஜமானரின் முகத்தோற்றத்திற்கும் குரலுக்கும் அதிக வித்தியாசம் இருந்ததை பிலிப்ஸ் ஆரம்பத்திலேயே கவனித்து விட்டான். அதனால் குரலில் பணிவையும், குழைவையும் கூட்டிக்கொண்டு அவன் பேசினான்.

"கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தவர்களில் பாதி பேருக்கு தங்க வீடுகள் இல்லை. பேசிக் கொண்டிருந்தவன், அந்த ஏழைகளுக்கு, இரவு தங்குவதற்காக நிதி திரட்டிக்கொடுக்கிறான்—பணம் சேர்ந்ததும் ஒவ்வொருவரையும் விடுதிக்கு அனுப்பி வைக்கிறான்—வரிசையாக நின்று கொண்டிருக்கும் அவ்வளவு பேருக்கும் இரவுக்குள் ஏதாவது விடுதியில் இடம் தேடித் தந்துவிட வேண்டுமே! பொதுவாக, அவன் மற்றவர்களின் நலனுக்காக உழைக்கிறான் சார்!"

"எனக்கு சாப்பாடு தயார் செய்துவிட்டு, அவர்கள் நின்று கொண்டிருக்குமிடத்திற்குச் சென்று, யாராவது ஒருவனை இங்கு என்னோடு சாப்பிட அழைத்து வா!" என்றார் சாமர்.

பிலிப்ஸ் அவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?"

"தங்க இடமில்லாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களில் யாரையாவது ஒருவனை இங்கு சாப்பிட அழைத்து வா என்கிறேன்...புரிந்ததா?"

"சரி சார்!"

"பார்த்து சுத்தமானவனாக, பார்வைக்கு சுமாராக இருப்பவனாக பொறுக்கிக் கொண்டிருக்காதே! யாரோ ஒருவன்...... முதலில் உன் கண்களில் பட்டவன்... அவனை அழைத்துக் கொண்டு வந்துவிடு...சரி போ"

பிலிப்ஸ் வியப்படைந்தவனாகத்தான் அங்கிருந்து போனான். இரவு நேரத்தில், அதுவும் முன் பின் தெரியாத ஒருவனை சாப்பிட அழைக்கும் பழக்கம் எப்போதுமே சாமரிடம் இருந்ததில்லை என்பதை வேலைக்காரன் நன்றாக அறிவான். இது குறிப்பிடத்தக்க மாறுதல் தான்!

ஆனால் சாமரின் மன நிலையைப் பற்றி வேலைக்காரன் என்ன அறிவான்? அக்கடிதத்தைப் படித்தபின், அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிராமல், யாரோடாவது பேசிப் பொழுது போக்கலாம் என்ற சாமரின் தீர்மானத்தின் விளைவு தான் இந்த உத்தரவு!

அரை மணி நேரத்திற்குப் பிறகு பிலிப்ஸ் சாப்பாட்டுக்காக எல்லாவற்றையும் தயார் செய்து வைத்துவிட்டு, விநோத விருந்தாளியை அழைத்துக் கொண்டு வந்தான். கையில் காசில்லாதவன் — அதுவும் இரண்டொரு நாள் பட்டினி கிடந்தவன் எப்படி இருப்பானோ அதே கோலத்தில் இருந்தான் புதிய விருந்தாளி. தோற்றத்தில் எளிமையும், ஏழ்மையும் போட்டி போட்டுக் கொண்டு காட்சியளித்தன. முகத்தில் மலர்ச்சிதான் இல்லையென்றால், கண்களிலும் நம்பிக்கையின் ஒளி சிறிதளவாவது காணோமே! புது இடத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை தனது பணிவின் மூலம் காட்டிக் கொண்டிருந்தான். பிலிப்ஸ் கொடுத்த குறிப்புகளினால் கைகளை நன்றாகக் கழுவித் துடைத்து வைத்திருந்தான்.

"என் பெயர் புளூமர். கூட இருப்பவரின் பெயரைத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?"

"என் பெயர் சாமர்... இப்படி என் எதிரில் அமருங்கள்," என்று தனக்கெதிராக இருநத காலி இடத்தைச் சுட்டிக் காட்டினார்.



கிழிந்த கோட்டுக்கு பொத்தான் கூட சரியாகப் போடவில்லை. இவ்வளவு இருந்தும் சாமர் அவனை வரவேற்க தன் இருக்கையை விட்டு எழுந்தபோது, அவன் கொஞ்சம்கூட கூச்சப் படாமல், பெரிய இடங்களில் பழகியவனைப்போல் நடந்து கொண்டான்.

"நீங்கள் விரும்பினால், இன்று உங்களுடன் சேர்ந்து சாப்பிட நான் ஆசைப்படுகிறேன்," என்றார் சாமர்.

"எனக்கு இப்படிப்பட்ட ஒரு பாக்கியம் கிடைக்குமென்று நான் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. இரவு தங்குவதற்கு இடம் தேட நின்றிருந்தவர்களின் வரிசையில் நாற்பத்திமூன்றுவது நபராக நின்று கொண்டிருந்தேன் நான். அப்போதுதான் உங்கள் பிரதிநிதி என்னை இங்கே விருந்து சாப்பிட அழைத்தான். அடுத்த குடியரசு தலைவரின் பதவி எனக்கு நிச்சயம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது போலிருந்தது, இன்று இரவு எனக்கு தங்க இடம் கிடைக்கும் என்று நான் நினைத்தது... நல்ல வேளை; சாப்பாட்டுக் கவலைக்கு நீங்கள் பெரிய மனது வைத்துவிட்டீர்கள்... இன்றைய பொழுது அநேகமாகக் கழிந்த மாதிரிதான்... உங்கள் உபகாரத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நான் எனது சோகம் நிறைந்த வாழ்க்கையில் சில அத்தியாயங்களை மட்டும் புரட்டிக் காண்பிக்கட்டுமா? இல்லை... முழு வரலாற்றையே நீங்கள் கேட்கிறீர்களா?"-புளூமரின் இந்தக் கேள்விக்கு பதில் அளிக்காமல் சாமர், தனக்குள் அவன் சரளமாகப் பேசுவதைக் கண்டு வியந்து கொண்டிருந்தார். ஏதோ புதையலைக் கண்டெடுத்து விட்டவன்போல் அவன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி எழுந்தவாறல்லவா பேசிக் கொண்டிருக்கிறான். கொஞ்சம் கூட புது இடம் என்ற கூச்சமில்லாமல்! அவனுக்கு சில பல பெரிய இடத்துப் பழக்கம் இருந்திருக்க வேண்டும்—இல்லாவிட்டால் விருந்து மேஜை காகிதத்தை அணுவளவும் பிசகாமல் கவனித்துக்கொள்ள முடியுமா? சாமருக்கு அவனைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் விழுந்தது. அவர் எதிர்பார்த்ததைப் போல், மனம் சற்று அமைதியாக இருந்தது இப்போது!

"இந்த இடம், உபசரிப்பு இவைகளில் உங்களுக்கு எதுவுமே புதுமையாகத் தெரியவில்லையா?" என்றார் சாமர்.

"உண்மையைச் சொல்லப் போனால்... இல்லை! நியூயார்க் நகரத்தின் நாகரிகம் எப்படிப் பட்டது என்று எனக்கு நன்றாகத் தெரியும். பிரதி பலன் இல்லாமல் எதையுமே யாருக்காகவும் செய்ய இங்கிருப்பவர்களுக்குத் தெரியவே தெரியாது! உங்களை நான் அப்படிப்பட்ட நபர்களில் ஒருவராகச் சேர்த்து விட்டேன் என்று நினைத்துவிட வேண்டாம்...

"கையில் காசின்றி சுற்றிக் கொண்டிருப்பேன்—நீ ஏன் இப்படி இருக்கிறாய்? உன் வாழ்க்கை எப்படிப்பட்டது? உன் வரலாற்றில் ஏதாவது சுவையான அத்தியாயங்கள் உண்டா? அப்படியென்றால் அவைகளைச் சொல்... உனக்கு நல்ல ஆகாரம் வாங்கித் தருகிறேன்—என்று என்னை அப்போது சந்திக்கும் ஒரு பத்திரிகை நிருபரோ...... இல்லை, வேறு இரக்கபாவமுள்ள சங்கத்தின் அங்கத்தினர்களில் யாராவது ஒருவரோ கேட்டு என்னைப் பற்றிய செய்திகளை மிகவும் சுவாரஸ்யமாக எழுதிக் கொண்டு போய் விடுவார்கள்... வாக்கு கொடுத்த ஆகாரம் வரவே வராது! எப்படி இந்த நாகரிகம்? இம்மாதிரி அனுபவத்தால்தான் நான் இப்போதெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது வழக்கம்! நீங்கள் தவறாக நினைக்காதீர்கள்—உங்களை நான் அப்படி நினைக்கவே இல்லை...என் கடமைக்காக இப்போது எனது வாழ்க்

கைப்பற்றி உங்களுக்குக்கொஞ்சம் சொல்கிறேன்...''—புளூமர் பேசுவதை நிறுத்தினான்.

''எனக்கு உங்கள் வாழ்க்கையைப்பற்றிக் கேட்க வேண்டும் என்ற அக்கரையோ ஆவலோ கிடையாது. உண்மையான காரணத்தைச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்......இன்றைக்கு யாரோடாவதுசேர்ந்து சாப்பிட வேண்டும் போலிருந்தது—அதனால் யாரையாவது கூட்டி வரும்படி சொல்லி அனுப்பினேன்...நீங்கள் வந்திருக்கிறீர்கள்!''

''ஒரு கோப்பை மதுவுக்கோ, இல்லை சூடான காப்பிக்கோ, என்னுடைய வாழ்க்கையின் ருசிகரமான அனுபவங்களைச் சொல்லிச் சொல்லி பழக்கப்பட்டவன் நான். என்னைப் போன்ற எவ்வளவோ பேர் இதேபோல் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்—செய்திகளுக்காக தெருவில் நாய் போல் அலைந்து கொண்டிருக்கும் நிருபர்களுக்குத் தேவையானது என்ன என்பது எங்களுக்குத் தெரியும்...பொருத்தமான கதையைச் சொல்லி வயிற்றை நிரப்பிக் கொள்வது எப்படித் தவறாகும்? கதைக்காக இல்லாமல் அன்பாக உபசரிக்கும் உங்களிடம் நானும் உண்மையைச் சொல்கிறேன். அதைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படலாம்! ஆனால் அந்த வரலாறுதான்...நான் இப்போது இருக்கும் நிலைமையின் கதை!'' என்றான் புளூமர்.

★

சாப்பாடு முடிந்தது. சூடான காப்பியை உறிஞ்சிக் குடித்துவிட்டு, சுருட்டு பற்ற வைத்துக் கொண்டபின் விருந்தாளி பேச ஆரம்பித்தான்:



"செராடு புளூமர் என்ற பெயரை நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"நன்றாகக் கேட்டீர்கள்...... மிகச் சிறந்த சித்திரக்காரனல்லவா அவன்...உருவப்படங்கள் வரைவதில் அவனுக்கு நிகர் அவனேதான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்," என்றார் சாமர்.

"ஐந்து வருடங்களுக்கு முன் நான்தான் அந்த அபாக்கியவான்! கடைசி படத்தைக்கூட இரண்டாயிரம் டாலர்களுக்கு விற்றேன். ஆனால் இப்போது நான்தான் அவன் என்றுசொல்லிக் கொள்ளக் கூடிய யோக்கியதையில்கூட இல்லை!"

"உங்களுக்கு அம்மாதிரி ஒரு நிலை திடீரென வரக் காரணம் என்ன?"

"அதுதானே நானே சரியாக விளங்கிக் கொள்ளாத விஷயம்! ஆரம்ப காலத்திலிருந்தே புகழ் என்னைத் தேடிக்கொண்டு வந்தது. சமூகத்தில் எனக்கு ஒரு தனி அந்தஸ்து இருந்தது. நான் வரையும் ஓவியங்களையும், சித்திரங்களையும், படங்களையும் பலர் பார்க்க வருவார்கள்! அவைகளைப் பார்த்தவுடன் பார்வையாளர்களின் முகத்தில் ஏற்படும் மாறுதல்களையும், முணுமுணுப்பையும் நான் அவ்வளவாக சட்டை செய்வதில்லை. ஏன் இந்த முணுமுணுப்பு, முகஞ்சுளிப்பு என்பதை நான் விரைவில் கண்டு கொண்டேன்...என்னிடம் ஒரு அபூர்வமான கலைத்திறமை இருந்தது. ஒருவரைப் பார்த்து படம் வரைந்தால், சாதாரணமாக அவர் எப்படி இருப்பாரோ அப்படித்தான் படத்திலும்—அதாவது எழுதப்படும் ஓவியத்திலும் இருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பது சகஜம்.

"என் ஓவியங்கள் அப்படிப் பட்டவைகளாக இல்லை. அவைகள் மனதின் படப்பிடிப்பாக அமைந்து விட்டன. உண்மையான குணம் எதுவோ அது ஓவியத்தின் முகத்திலும் பிரதிபலிக்க ஆரம்பித்தது. என்றால் எப்படி இம்மாதிரி வரைய முடிந்தது என்று எனக்கே தெரியவில்லை. அதற்காக நான் எந்த சிரமமும் எடுத்துக் கொள்ளவில்லை.

"சமூகத்தினால் மிகவும் உயர்வாகக் கருதப்பட்ட ஒரு பெண்ணின் படத்தை நான் வரைந்தேன். அதை அவள் கணவன் பார்த்தான். அடுத்த வாரத்தில் விவாகரத்து கோரிவிட்டான். அவள் யாரென்று ஓவியத்தின் முகம் மிகவும் நன்றாக எடுத்துக் காட்டி விட்டது!

"அடுத்தபடியாக ஒரு பாங்கரின் படத்தை வரைந்தேன். அதைப் பார்த்த அவரது நண்பர் ஒருவர் தான் பாங்கியில் போட்டிருந்த அவ்வளவு பணத்தையும் வாங்கிக் கொண்டுவிட்டார். படத்தைப் பார்த்தபின் பாங்கர் மேல் அவருக்கு நம்பிக்கைப் பிறக்கவில்லை.

"இம்மாதிரி ஒருவன் அல்லது ஒருத்தியின் படத்தை வரைவதோடு மட்டும் நிற்காமல் அவர்களது உண்மையான குணசித்திரத்தையும் படத்தின் முகத்தில் மிகவும் தெளிவாக விளக்கிவிட்டதால் எனது 'மார்க்கெட்' சீக்கிரம் படுத்துவிட்டது. நான் நன்றாக வரையக் கூடியவன் என்றாலும் எனக்கு கிராக்கியே இல்லை — உள்ளத்தின் பிரதிபலிப்பை யார் தான் வெளியில் காட்டிக்கொள்ள இஷ்டப்படுவார்கள்?

"ஓவியங்கள் வரைவது நின்றவுடன் ஒரு பத்திரிகை காரியாலயத்திலும், ஒரு அச்சகத்

திலும் படங்கள் போடும் வேலையில் அமர்ந்தேன். அந்த வாழ்வு நீடிக்கவில்லை. வேறு எந்தவேலையிலும் எனக்கு பயிற்சி இல்லை. அதனால்தான் இந்த அலங்கோலம்!''

புளூமர் பேசுவதை நிறுத்தினான்.

"ஒரு புகைப் படத்தைப் பார்த்து வரைந்தாலும், வரையப்படுவரின் குணச் சித்திரம் தெளிவாக அமையுமா அதில்?''

"முடியும்! அதுதானே என்னுடைய தூரிகைக்குள்ள தனி சாமர்த்தியம்? அதனால்தானே நான் வெறுக்கப்பட்டேன்!''

சாமர் பதில் பேசாமல் எழுந்துபோய் மேஜையின்மீது கிடந்த அந்தப் பெண்ணின் புகைப்படத்தை எடுத்து வந்து புளூமரின் கையில் கொடுத்தார். அவர் தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்த புளூமர் அப்போதே வேறு ஒரு காகிதத்தில் அப்பெண்ணின் படத்தை தெளிவாக, ஆனால் விரைவாக எழுதி முடித்தார்.

சாமர், புளூமருக்கு உத்தரவு கொடுத்து அனுப்பி விட்டு, பிலிப்ஸை கூப்பிட்டார். அவன் வந்தான்.

"இங்கே அருகில் ரெய்மான் என்ற பிரபல ஓவியர் ஒருவர் இருந்தாரே. அவர் வீடு உனக்குத் தெரியுமா? அவரை நான் அழைக்கிறேன் என்று கூறி சிறிது நேரம் அழைத்து வா!''

ரெய்மான் உடனே வந்து விட்டார். சாமர் தன்னை முதவில் அறிமுகப் படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்:

"அதோ, மேஜையின்மீது இப்போதுதான் வரையப்பட்ட ஒரு படம் இருக்கிறது—அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்பதை நான் அறிய வேண்டும்...தயவு செய்யுங்கள்!''

"ஆகா...பிரமாதம்....ஓவியக் கலையில் கைதேர்ந்த ஒருவனல்லவா இதை எழுதியிருக்கிறான்!'' என்றார் ரெய்மான்.

"நன்றாக வரையப் பட்டிருக்கிறதா? சந்தோஷம்! அப்படியென்றால், அப் பெண்ணின் முகத்தைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?''

"நல்ல அழகி—'தெய்வீகம்' என்கிறார்களே அது பொருந்திய முகம்...குணவதி போல் தோன்றுகிறது.........இது யாரென்று நான் அறியலாமா?'' என்றார் ரெய்மான்.

"என் மனைவி!'' என்று பெருமைபோடு சொன்னார் சாமர். அதைத் தொடர்ந்து—

"இந்தப்படத்தைப் பெரிதாக ஆக்கிக் கொடுங்கள். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்—சுற்றுப் பிரயாணம் போயிருக்கும் என் மனைவி திரும்பி வருவதற்குள் தந்துவிட வேண்டும்!'' என்றார் சாமர்—தபாலில் வந்த கடிதத்தினால் ஏற்பட்ட சந்தேகம் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டது.

ஃ

ஒரு தேசபக்தனை அவனுடைய தேசத்திலிருந்து விரட்டி விடலாம். ஆனால் அவன் உள்ளத்திலிருந்து அவனுடைய தேசத்தை விரட்ட முடியாது.

—வால்டேர்

தீர்ப்பு

கலீல் கிப்ரான

அது ஒரு நீதி மன்றம். அங்கு நீதிமன்ற பீடத்திலே நீதிபதி அமர்ந்திருந்தார். நகரத்தின் அறிஞர்கள் பலர் அவரது இரண்டு புறமும் வீற்றிருந்தனர். அவர்களின் சுருங்கிய மூகத்திலே நீதி நூல்களின— சட்ட நூல்களின் நுட்பங்கள் ஒளிவீசின. அமீரைச் சுற்றிலும் உருவிய கத்திகளுடன் பல போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நின்றுகொண்டிருந்தனர்! கோர்ட்டுக்கு வெளியே பலர், நகரத்தின் பல வகைப்பட்ட மக்கள் நீதி வழங்கப்படும் காட்சியைக் காணவோ, தங்கள் உறவினரில் சிலர் குற்றவாளிகளாய் இருப்பதாலோ-ஆங்கே நின்று கொண்டிருந்தனர். அவாகள் தலை குனிந்திருந்தனர். மூச்சை வேகமாக விடவும் பயநதனர். அமீர் தங்கள் பக்கம் பார்வையைச் செலுத்தினாலே போதும்; தங்கள் உடல் பயத்தினாலும் பீதியினாலும் இருதயத்தை ஏன்; ஆன்மாவைக் கூட உலுக்கி எடுத்து விடும் என்னும் அச்சமே தலைகளை பூமி நோக்கித் தாழ வைத்தது எனலாம்.

விசாரணை நேரம் நெருங்கிற்று. அமீர் தன் கையை உயர்த்தி, "குற்றவாளிகளை ஒருவர் பின் ஒருவராகக் கொண்டு வாருங்கள். அவர்கள் இழைத்த குற்றங்களையும், பாதகங்களையும் எடுத்துச் சொல்லுங்கள்." என்று உத்தரவிட்டார். வெம்புலி தன் கோரப பற்கள் தெரிய கொட்டாவி விடும்போது திறக்கும் வாய்போல சிறைக் கதவும் திறக்கப்பட்டது. உள்ளேயிருந்து, பிணைக்கப்பட்டுள்ள சங்கிலிகளின் ஓசையும், குற்றவாளிகளின் முனகல் ஒலியும் கலந்து ஒலித்தது. குழுமியுள்ள மக்கள் தலைகளோ தங்கள் கழுத்தை நீட்டி நீட்டி கல்லறையிலிருந்து எழும்பும் கோர மரணத்தின் உணவுப் பண்டங்களைப் பார்ப்பதின் மூலம் சட்டத்தை மீற முயற்சித்தன.

சில வினாடிகளுக்குப் பிறகு இரண்டு வீரர்கள். கைகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ள ஒருவனை அழைத்து வந்தனர். அவனுடைய உறுதிமிக்க முகமும் முறுக்கேறிய உடலும் அவன் அழுத்தமான சுபாவமும் வலிய நெஞ்சும் உடையவன் என்பதை உணர்த்தின. அழைத்துக் கொண்டுவந்த இருவரும் அவனைக் கோர்ட் முன்னால் நிறுத்தி விட்டுப்பின்னுக்குத் தள்ளி நின்றனர். அமீர் அவனைக் கூர்ந்து நோக்கியபின் "இதோ, முன்னால் நிற்கும்படியான இவன் நீதியின் பிடிப்பில் சிக்கியுள்ளவனைப் போல் நிமிர்ந்த தலையுடன் நிற்கிறான். இவன் செய்த குற்றம் யாது?" என்று வினவினார்.

கோர்ட் உத்தியோகஸ்தன் ஒருவன் எழுந்து, "அமீர் சாகேப், இவன் நேற்று ஒரு கொலை செய்தான். அதுவும் கனம் அமீர் அவர்களின் உத்தியோகஸ்தர் ஒருவரையே கொலை செய்தான். நேற்று அவர் தம்முடைய கடமையை ஆற்றச் செல்லும்போது, தன் கைவாளால் அவர் தலை மண்ணில் உருள வெட்டி வீழ்த்தினான். இவன் அந்த ரத்தம் தோய்ந்த கத்தியோடேயே கைது செய்யப்பட்டான்," என்றான்.

தம்முடைய உயர்ந்த இருக்கையிலேயே இப்படியும் அப்படியும் உடலை அசைத்தபடி அமீர் அனல் சிந்தும் கோபக் கண்களுடன் "அப்படியா? இவனைத் திரும்பவும் அந்த இருட்டுச் சிறையிலேயே தள்ளுங்கள். இவன் முதுகெலும்பு நெளிந்து முறியும் டி கற்களைச் சுமத்துங்கள். நாளைப் பொழுது விடியுமுன் வைகறையிலேயே இவன் கொலை செய்து அந்தக் கத்தியாலேயே இவன் கழுத்தைவெட்டி வனாந்தரத்திலே வீசி எறியுங்கள். இரை தேடும் விலங்கும் பறவையும் இவன் உடல் தசையைத் தின்ன—பிண நாற்றம் இவனுடைய சுற்றத்தினர் மூக்கைத் துளைத்திடச் செய்யுங்கள்," என உத்திரவிட்டார்.

வீரர்கள் உடனே அவனைத் திரும்பவும் சிறைக் கதவின் உள்ளே தள்ளி விட்டார்கள். ஆங்கு சூழ்ந்துள்ள மக்களோ அவனைப் பரிதாபத்தோடு நோக்கினர். பெருமூச்செறிந்தனர். கண்ணீர் சிந்தினர். 'பாவம், இளைஞன்; வாழ்க்கையின் வசந்தத்திலே இருப்பவன்; அழகும் பலமும் வாய்ந்தவன்' - அவர்கள் உள்ளத்தோடு இழையோடிய எண்ணங்கள் இவை.

இரண்டாம் முறை வீரர்கள் சிறைக் கோட்டத்திலிருந்து ஒரு அழகிய-ஆனால் பலவீனமான மங்கையை அழைத்து வந்தனர். தன் தலை தாழ கண்களில் நீர் கசிய அவள் நடந்து வந்தாள். அவள் முகத்திலே வேதனையும் துயரமும் நிலவின. தன் தவறுக்கு இரங்கி பச்சாதாபப்படுபவள்போல் காணப்பட்டாள் அவள்.

"உண்மையின் நிழலிலே ஒதுங்கி நிற்பாள்போல் நிற்கும் இந்த நோயாளிப் பெண் செய்த தவறு என்ன?" என்று வினவினார் அமீர் கோர்ட்டாரைப் பார்த்து.

தமிழில்: நலங்கிள்ளி

கோர்ட் உத்தியோகஸ்தன் எழுந்து, "அமீர் சாகிப், இவள் ஒரு விபசாரி. இவளுடைய கணவன் இவள் தன் காதலனுடன் இருந்ததைப் பார்த்து இவளைப் போலீஸில் ஒப்படைத்தான். ஆனால் இவள் காதலனோடு ஓடிப் போனான்"—என்று கூறினான்.

அமீர் அவளை உற்று நோக்க அவள் தலை மேலும் மேலும் தாழ்ந்தது. கடுகடுப்போடு அவர், "இவளை இழுத்துச் செல்லுங்கள். இன்று இரவு

நல்லவர்!

நல்லவர்களைப் பற்றி நிறையப் படிக்கலாம்; பேசலாம்; நிறைய எழுதலாம்; எவ்வளவோ பாராட்டலாம்; ஆனால் நல்லவராக இருப்பது தான் மிகக் கடினம்!

—ஏர்ல்

முழுவதும் இவளை முள்நிறைந்த படுக்கையில் படுக்கவையுங்கள். குடிக்கத் தண்ணீருக்குப் பதில் காடியைக் கொடுங்கள். நாளை விடியும்போது இவளை இழுத்துச் சென்று வனாந்திரத்திலே ஆடை ஏதுமின்றி நிற்க வைத்துக் கல்லெறிந்து கொல்லுங்கள். இவள் உடலை ஓநாய் தின்னட்டும். ஊர்வன சுவைத்துத் தின்னட்டும்'' என்று தீர்ப்பளித்தார். அவளுடைய துயரமிக்க பார்வையையும் அழகிய உருவத்தையும் கண்ட மக்கட் கூட்டமோ அவள் முடிவுக்காக ஏங்கினர்...இரங்கினர். அவளோ அந்த இருண்ட சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

மூன்றாம் முறையாக, வாலிபத்தை வறிதே கழித்து கிழத்தனத்தில் கால் வைக்கும் ஒருவனை அவர்கள் அழைத்து வந்தனர். அவனோ கால் நடுங்கித் தள்ளாட தன் உடையில் கிழிந்துத் தொங்கும் கிழிசலை மறைத்துக் கொண்டு வருபவன்போல் நடந்து வந்தான். பயத்தால் அவன் இப்புறமும் அப்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அவன் துயரமிக்க பார்வையிலே ஏழ்மையின்-துயரத்தின்—நம்பிக்கையின் கோர உருவங்கள் நன்கு புலப்பட்டன.

அமீர் அவனை ஏளனத்தோடும் வெறுப்போடும் பார்த்து ''உயிருள்ளவர்கள் நடுவில் பிணம் போல நிற்கும் இந்தக் கழிசடை என்ன குற்றம் செய்தான்?'' என்று வினவினார்.

கோர்ட் உத்தியோகஸ்தர்களில் ஒருவன் எழுந்து ''அமீர் சாகிப், இவன் ஒரு திருடன். கொள்ளைக்காரன். முன்னாள் இரவு இவன் துறவிகள் மடத்திலே நுழைந்தான். பாவம், அந்தத் துறவிகள் இவனைப் பிடித்து சோதித்தபோது இவன் தன் உடையிலே அப்புனித இடத்தின் புனித பாத்திரம் ஒன்றைத் திருடிமறைத்து வைத்திருந்தான்,'' என்றான்.

அமீர் மிக்க குரூரமான பார்வையோடு அவனை நோக்கிய பின், ''இவனை இருட்டறையில் தள்ளி விலங்கிடுங்கள். நாளைக் காலையில் இவனை வனாந்திரத்திலே ஒரு உயர்ந்த மரக்கிளையிலே சணல் நாரால் தூக்கிலிடுங்கள். அங்கே இவன் பிணம் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் ஊசலாடட்டும். இவன் தசைகள், மரத்திலிருந்து உதிரும் இலைகள்போல் தானே கீழே உதிரட்டும். இவன் உறுப்புகள் புயலால் உடல் ஊஞ்சலாடுவதால் ஒவ்வொன்றாய் மண்ணைச் சேரட்டும்,'' என்றார்.

அவன் அவ்வண்ணமே சிறைக் கோட்டத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டான். பார்த்தும் கேட்டும் நின்ற மக்களோ இப்படிப்பட்ட ஒருவன் எப்படி மடத்துள் புகுந்தான்; எப்படித் திருடினான்; அதற்குரிய தைரியம் கூட இவனிடம் இல்லையே-என்று அங்கலாய்த்தனர்.

அமீர் தம்முடைய நீதிபதி ஸ்தானத்தை விட்டுக் கீழிறங்கினார். அறிவாளிகளும் சட்ட நிபுணர்களும் அவரைத் தொடர்ந்து செல்ல, போலீஸ் வீரர்கள் பக்கலும் முன்னும் பின்னும் செல்ல கோர்ட் கலைந்தது. வேடிக்கை பார்த்த மக்களோ கலைந்து சென்று விட்டனர். சிறையிலே வேதனைப்பட்டு பெருமூச்சு விடும் குற்றவாளிகளும் பாராக்காரர்களும் தவிர ஆங்கு பிறர் ஒருவரும் இல்லை.

அவையாவும் நடைபெற்றபோது நான் அங்குதான் இருந்தேன். நடமாடும் உயிர்கள் முன்னர் அமைக்கப்பட்ட நிலைக் கண்ணாடி போல் சாட்சி பூதமாய் நான் நின்று அவைகளைக் கவனித்தேன். தன்னைப் போன்ற மனித இனத்துக்கு மனிதன் வகுத்த சட்டங்களை என் மனம் சிந்தித்தது. மனிதனிடையே நீதிக்காக என்ன சம்பவிக்கிறது என்பதை உள்ளம் ஆராய்ந்து வாழ்க்கையின் இரகசியத்தையும், அர்த்தத்தையும் அலசிப் பார்த்தது என் மனம்.

௨

மறு நாள் நகரத்தை விட்டு வெளியே வயல் புறத்தில் உலவச் சென்றேன். வயற் புறத்தின் அமைதியோ, உள்ளத்தை மறைத்துள்ள திரையை அகற்றிற்று. ஆங்கு வீசிய தூய காற்றோ நகர்ப்புறத்தின் குறுகிய சந்துகளிலும், இருண்ட சிறு அறைகளிலும் விளையும் துயரத்தின் — நம்பிக்கையின்மையின் வேரைக் கல்லி எறிந்தது.

நான் வயற் புறத்தைக் கடந்து அந்தப் பெருவெளியின் எல்லையை அடைந்தபோது அங்கே

உயரே வான வெளியில் வட்ட மிடும் கழுகு, காக்கைக் கூட்டங்கள் கீழே நிலம் நோக்கித் தாழ வந்தும் — பின்பு மேலெழுந்தும் பறந்து செல்வதைக் கண்ணுற்றேன். அங்கு வீசும் காற்றில் பறவைகளின் கூச்சலும் இரைச்சலும் சிறகை அடித்துக் கொள்ளும் படபட ஓசையும் கலந்து ஒலித்தன. இவைகளின் காரணத்தை நன்கு தெரிந்து கொள்வதற்காக நான் இன்னும் சற்று நெருங்கிப் பார்த்தேன். அங்கு என்ன பார்த்தேன் என்கிறீர்கள்?

என் முன்னே ஒரு மனிதன் உருவம் மரக்கிளையில் தொங்கி ஊசலாடிக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது தூரத்தில் ஒரு மங்கையின் உடலம் பல கற்களின் இடையிலே வீழ்ந்து கிடந்தது. இன்னும் சற்று தள்ளி ஒரு இளைஞனின் இரத்தம் தோய்ந்த உடல கிடந்தது. அவன் தலையோ சிறிது தூரத்திலே உருண்டு கிடந்தது.

இத்தகைய பயங்கரமான காட்சி என்னை ஸ்தம்பிக்கவைத்தது. என் கண்கள் வேறொன்றையும் காணவில்லை. அந்த மூன்று பிணங்களின் புறத்தே உள்ள ஆவி உருவத்தையே கண்டன. என் காதுகளோ மானிடரின் சட்டத்தால் அழிவெய்தும் பிணங்களைத் தின்ன வட்டமிடும் பறவைகளின் ஒலியையே கேட்டன.

மூன்று மனித ஜீவன்கள்—நேற்று வரை அவை உயிரோடு பிணைக்கப்பட்டிருந்தன. இன்று மரணத்தின் பிடிப்பில் சிக்கி அழிவுற்றன. மூன்று ஜீவன்கள் மனிதர்களின் வழக்க ஒழுக்கத்தின்படி தவறு செய்தன. சட்டமோ தன்னுடைய கண்மூடித்தனத்தால் தன் வலிய கரத்தை நீட்டி அவர்களை அழித்துவிட்டது. அந்த மூன்று ஜீவன்களின் அறியாமை அவர்கள் பலவீனத்தைச் சாதகமாக்கி குற்றவாளிகளாக்கிற்று. சட்டமோ தான் வலிமை மிக்கது என்ற காரணத்தால் அவர்களை அழித்து விட்டது.

ஒரு மனிதன் பிறன் ஒருவனைக் கொன்றால் மக்கள் அதைக் கொலை என்கிறார்கள். ஆனால் சட்டத்தால் ஒருவனைக் கொலை செய்பவனை நீதிமான் என்கின்றனர் மக்கள் மடத்தின்-தேவாலயத்தின்—சொத்துக்களைத் திருடினால் ஒருவனைத் திருடன் எனகின்றனர். ஆனால் அவன் உயிரைக் கொள்ளையிடும் அமீரை நீதிமான் என்கின்றனரே! ஒருத்தி தன் கணவனுக்கு நம்பிக்கை துரோகம் செய்தால் அவளை விபசாரி, பரத்தை எனத் தூற்றுகின்றனர் மக்கள். ஆனால் அமீர் அவளை ஆடையின்றி நிர்வாணமாகக் கல்லெறிந்து கொல்லத் தீர்ப்பளித்தால் அதே மக்கள் அவரைப் பெருந்தன்மைமிக்கவன் என்று போற்றுகின்றனர்.

ரத்தம் சிந்துதல் தீமை என்பது மன்பதைச் சட்டமானால் அரசன் மட்டும் அதைச் செய்யலாம் என்று அனுமதிப்பவர் யார்? பிறர் உடைமையைத் திருடுவது குற்றமானால், உயிரையே கொள்ளையிடுவதை நீதி என நியமித்தவர் யார்? பெண்களின் கற்பின்மை வெறுக்கத்தக்கதே! ஆனால் கல்லெறிந்து கொல்வதை இன்பமானதாகச் செய்தவர் யார்?

நாம் தீமையை அதைவிட பெருந் தீமையைக் கொண்டு பொழுது இதுதான் சட்டம் என்று சொல்லலாமா? லஞ்சத்தை அதைவிடப் பெரிய லஞ்சத்தால் மாய்த்து அதையே

" துணி விக்கிற விலையிலே 'டர்ப'னுக்கு எவ்வளவுங் காணும் துணி வாங்கிறது......! நமக்கு 'பிராக்டிஸ்' நடக்கிற லட்சணத்துக்கு எல்லாம் இது போதும்!......"

அறம் என்று கூறலாமா? குற்றத்தை பெருங் குற்றத்தால் சாய்த்து அது ஒன்றே நீதி என்னல் பொருந்துமா?

அமீர் தன் வாழ்நாளிலே தன் எதிரி எவனையும் வீழ்த்தியதே இல்லையா? தன்னுடனுறைபவர்களின் நிலத்தையோ உடமைகளையோ திருடியதே இல்லையா? அழகிய மாதர்கள் எவரையும் வஞ்சித்ததே கிடையாதா இந்த அமீர்? எல்லாவிதமான குற்றங்களிலும் விடுபட்டவரா? கொலைஞனை தூக்கிலிடவும், திருடனை வெட்டித் தள்ளவும், பரத்தையைக் கல்லெறிந்து கொல்லவும் தீர்ப்பளிக்கத் தக்கவரா இந்த அமீர்?

இந்தத் திருடனை மரத்திலே தூக்கியவர்கள் யார்? வானிலிருந்து மண் இறங்கிய தேவதூதர்களா? அல்லது தங்கள் கைக்கு எட்டக்கூடியவற்றை திருட பலாத்காரம் செய்து கற்பழிக்கத் தயங்காத மனிதர்களா?

இந்த மனிதன் தலையை வெட்டியவர்கள் யார்? மேலேயிருந்து குதித்த தீர்க்கதரிசிகளா? அல்லது சந்தர்ப்பம் கிடைக்கும்போது ரத்தம் சிந்தும் சாதாரண சிப்பாய்களா?

அந்தப் பரத்தையைக் கல்லெறிந்து கொன்றவர்கள் யார்? குகையிலிருந்து வெளியே வந்த மகாத்மாக்களா? அல்லது நள்ளிரவின் கும்மிருட்டிலே எத்தகைய பாபகாரியங்களையும் செய்யத் தயங்காத மனிதாத்மாக்களா? இது கிடக்க—சட்டப்—சட்டம் என்பதுதான் என்ன? இந்தச் சட்டம் பரலோகத்திலிருந்து பேரொளியோடு மண்ணுலகத்திற்கு இறங்கி வந்த தென்பதைப் பார்த்தவர்கள் யார்? எந்த மனிதன் கடவுளின் அந்தராத்மாவை அறிந்தவன்? மக்களுக்கு விதிக்கும் கடவுள் தீர்ப்பை உள்ளபடி உணர்ந்தவன் யார்?

"வாழ்க்கையின் உண்மை ஒளியை பலவீனர்களுக்கு மறுத்து—மறைத்து விடுங்கள்; வழுக்கி விழுந்தவர்களை வாளின் கூரிய நுனியில் அழித்தொழியுங்கள்; பாபிகளை இரும்புக் கால்களால் நசுக்கிப் போடுங்கள்," என்று எந்த யுகத்தில் தேவதூதர்கள் மக்கள் மத்தியில் உலவியபடி கூறினார்கள்?

இத்தகைய சிந்தனைகள் என் மூளையைக் குழப்ப அங்கிருந்த போது என் சமீபத்தில் காலடி ஓசை கேட்டேன். சுற்று முற்றும் திரும்பிப் பார்க்க சற்று தூரத்தில் உள்ள புதர்கள் மத்தியில் இருந்து ஒரு பெண் அம் மூன்று சவங்களை நோக்கியபடி நடப்பதைக் கண்டேன். மிக மிக அஞ்சியவள்போல அவள் திரும்பித் திரும்பிப் பார்த்து அச்சவங்களை அணுகினாள். தலை வெட்டப்பட்டு கீழே கிடக்கும் அந்த இளைஞனைக் கண்டவுடனே அவள் 'கிரீச்'சிட்டுக் கத்திவிட்டு, கதறி, தடாலென்று பக்கத்தில் வீழ்ந்து, தன் நடுங்கும் கரங்களால் அவன் உடலை அணைத்துப்புலம்பினாள். அவன் தலையில் உள்ள சுருண்ட கேசத்தை வருடியபடியே வாய்விட்டலறினாள். சோகத்தை அடக்க முடியாமல் தேம்பித் தேம்பியபடியே அங்கு கீழே கிடந்த அவனைக் கொன்ற அந்த வாளாலேயே குழி தோண்டி தன் மெல்லிய கரங்களால் அவனை இழுத்து வந்து அந்தக் குழியில் போட்டுப் புதைத்தாள். பிறகு அவனைக் கொன்ற அந்தவாளையே அவன்

தலைமாட்டில் நட்டு வைத்துப் போவதற்குத் திரும்பினாள். இந்தச் சமயத்தில் நான் அவளை அணுகினேன். என்னைக்கண்டவுடனே அவள் மேலும் நடுக்க மெய்தி கைகால்கள் நடுநடுங்க தரையைப் பார்த்தவாறே நின்றாள். கண்களில் இருந்து வழிந்தோடும் கண்ணீரோ தரையில் சொட்டு சொட்டாய் வீழ்ந்தது. பிறகு நீண்ட பெருமூச்சோடு அவள் என்னை நோக்கி "போ! இப்பொழுதே போய் அமீரிடம் சொல்! நானும் அவர் போன திக்கிலேயே போய் விடுகிறேன். என்னை அவமானத்திலிருந்து காத்த வீரபுருஷனின் உடலை கழுகும் விலங்கும் தின்னுமல் புதைத்ததற்கு எனக்கு மரணதண்டனைதான் என்றால் அதுவே மேல்!' என்றாள்.

"பயப்படாதே அம்மா! நான் இந்த இளைஞனின் முடிவுக்காக உனக்கு முன்னாலேயே பெருந் துயர் எய்தினேன். உன்னை எப்படி அவன் அவமானத்திலிருந்து காத்தான்? சொல்லம்மா!" என்றேன்.

தேம்பித் தேம்பி அவள் கூறினாள். ஒரு நாள் அமீரின் உத்தியோகஸ்தர் ஒருவன் என் அப்பாவின் நிலத்தைப் பார்வையிட்டு தீர்வை விதிக்க எங்கள் கிராமத்திற்கு வந்தான். அங்கு என்னைப் பார்த்த அவன் பார்வையில் விஷம் கலந்திருப்பதைக் கண்டு மிகவும் அஞ்சினேன். அந்த உத்தியோகஸ்தனே எங்கள் நிலத்திற்கு மிதமிஞ்சிய வரி விதித்ததோடல்லாமல் என்னை பலவந்தத்தோடு அக்கிராமத்தில் உள்ள சர்க்காரின் செல்வங் கொழிக்கும் அரண்மனைக்குத் தூக்கிப்போய் என்னைப் பலாத்காரம் செய்தான். நான் அவனைக் கெஞ்சினேன். அவன் இரங்கவில்லை.

ஆடவராகவே "நடித்த" பெண்மணி!

பிரிட்டிஷ் பெண்மணி ஒருவர் 52 வருடங்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் ஆண் வேடத்தில பணிபுரிந்திருக்கிறார் அவரையாரும் பெண்ணென்று சந்தேகித்ததே இல்லையாம்.

எடின்பர்க்கைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் பாரி என்னும் அந்த மங்கை ஸ்காட்லாந்து பிரபு ஒருவரின் பேத்தி ஆவார். காதல் பாதையில் தோல்வி கண்ட அம் மாது ஆண் கோலம் பூண்டு ராணுவத்தில் சேர்ந்தார்.

சகல ராணுவப் பரிட்சைகளிலும் தேறி ராணுவ வைத்தியப் படையில் தளபதி நிலைக்கு டாக்டர்ஜேம்ஸ் பாரி உயர்ந்தார். அதி திறமை வாய்ந்த வைத்தியர் என்று அவர் பட்டாளத்தில் பெயர் பெற்றார். அதுபட்டுமல்ல. முரட்டுப் 'பேர் வழி' என்றும் அவரைக் கருதினர்.

லண்டனில் அந்த மாது காலமானார். அதன் பிறகே அவர் ஆணல்ல; பெண் என்பது தெரிய வந்தது.

அந்தப் பெண்மணியிடம் 50 வருடகாலத்திற்கு மேல் ஊழியம் பார்த்து வந்த வேலைக்காரனுக்கே தன் எஜமானர் ஒரு எஜமானி என்பது தெரியாது!

—இராலன்

உடனே என் பலங்கொண்ட மட்டும் உரக்கக் கூவி கிராமத்திலுள்ள மக்களை உதவிக் கழைத்தேன். இவர், இந்த இளைஞர் எனக்காக துணிந்து உதவிககு வந்தார். உத்தியோகஸ்தனோ இவர் மேல் கடுஞ்சினங் கொண்டு இவரைத் தாக்கினான். இவர் தப்பி அவன் கைவாளாலேயே அவன் தலையை ஒரே வீச்சில் வீழ்த்தினார். இச்செயல் என் மானத்தையும் தன் உயிரையும் காப்பாற்றவே செய்யப்பட்டது. அந்த இடத்திலிருந்து இவர் எளிதாக தப்பி ஓடி தன்னைக் காப்பாற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால், இவரோ அத்தகைய கோழையாக இல்லை. கொலைகாரனைப் போல் ஓடிவிடாமல் வீரனைப் போல் அங்கேயே நின்றார். சிப்பாய்கள் இவரைப் பிடித்துப்போய் விசாரணைக்கு நிறுத்தினர். ஆ, இவர் முடிவு இறுதியில் இதுதான்.''

இவை கூறிய பின் அவ் வணங்கு தன் கண்களில் நீர் வழிய என்னை நோக்கினாள். அப்பார்வை என் நெஞ்சைப் பிழிந்தது.

ஆமாம்; ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்ற ஒரு காமக் காண்டாமிருகத்தின் தலையை வெட்டியிருக்கிறான். இந்த நல்ல காரியம் செய்த அவனுக்கோ மரண தண்டனை! கண்களில் நீர் கசிய வைத்தது. அடுத்த வினாடி அங்கிருந்து அலறிய வண்ணமே ஓடிமறைந்தாள்.

சிறிது நேரம் கழித்து ஒரு இளைஞன் அங்கு வருவதைக் கண்டேன். தன் முகத்தின் பெரும்பகுதியை மேலாடையால் மறைத்தபடி கல்லெறிந்து கொல்லப்பட்ட பரத்தையின் ஆடையற்ற சவத்தருகே போய் நின்றான். தன் மேலாடையைக் கொண்டு அவள் உடலை மறைத்தான். பிறகு தன் கைவாளைக் கொண்டு அங்கு ஒரு பள்ளம் தோண்டி அந்தப் பிணத்தை மிகமென்மையோடு தூக்கி, அக்குழியில் வைத்து, தன் கண்ணீரையும் அங்குள்ள மண்ணையும் கலந்து அப்பள்ளத்தை மூடினான். இடுகாட்டிலே பூத்துக் கிடக்கின்ற மலர்களைப் பறித்து அவள் சமாதி மீது வைத்துப் போவதற்குத் திரும்பினான். அப்போது அவன் எதிரே சென்று அவனை நிறுத்தி ''இளைஞனே! வழுக்கி விழுந்த ஒரு பரத்தையின் உடலைக் காக்கையும், கழுகும், பிறவும் புசிக்காதபடி இப்படி புதைத்து வைத்தாயே; சொந்தக்காரியா இவள் உனக்கு?'' என்று கேட்டேன். தூக்கமின்மையாலும் இடைவிடாது அழுததாலும் வீங்கிய சிவந்த கண்களால் என்னைப் பார்த்தான். அவனுடைய கண்களோ ஒரு சோகச் சித்திரமாக விளங்கிற்று. துயரத்தின் சாயை படிந்த அந்தக் கண்களோ அவன் வரலாற்றையே விளக்கும் போலிருந்தது. துயரம் நெஞ்சை அழுத்த நீண்ட பெருமூச்சோடு அவன் கூறலுற்றான்:

''ஐயா! இந்த மங்கை இப்படி ஆடையின்றி கொல்லப்படுவதற்கு காரணமானவன் இந்தப் பாவியாகிய நான்தான். நாங்கள் சிறுவயது முதல் ஒன்றாக வளர்ந்தவர்கள். எங்களுடனேயே எங்கள் காதலும் வளர்ந்தது. அக்காதல் வளர்ந்து மிகப்பெரிய, எங்கள் வணக்கத்திற்குரிய, தெய்வமாக மாறிவிட்டது.

''நான் வெளியூருக்குச் சென்றிருந்த காலத்திலே இந்த நங்கையின் தந்தை இவளை இவள்

வெறுக்கும் ஒருவனுக்கு மணம் செய்வித்தார். நான் ஊர் திரும்பியதும் இதைக் கேள்வியுற்றேன். பகலும் எனக்கு இருளடைந்தது. வாழ்வும் கசந்தது. மரணம் இனிமையாகத் தோன்றிற்று. என் உள்ளத்தோடு போராடினேன். தோல்வியுற்றேன். ஒரு நாள் என் அன்பைப் பார்க்கவேண்டுமென்று ரகசியமாகப் போனேன். என்னுடைய ஆவல் அவள் கண்ணொளியைக் காண்பதும், அவள பேச்சினிமையைக் கேட்பதும்தான். அதற்கு அதிகமாக ஒன்றும் நான் இச்சைப்படவில்லை. நாங்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்தோம். மௌனமே எங்கள் பேச்சாகவும். தூய்மையே எங்கள் துணையாகவும் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தோம். அவ்வளவே! சிறிது நேரம் கழித்து அவள் கணவன் உள் நுழைந்தான். எங்களைக் கண்டான். கோபம் கொழுந்து விட்டெறிய, அவள் மென்மையான கழுத்தை தன் முரட்டுக் கைகளால பிடித்து, ஊராரைக் கூவி ''ஓடிவருங்கள்; வந்து இவளையும் இவள் கள்ளக் காதலனையும் காணுங்கள்' என்றான். அக்கம் பக்கத்துள்ளவர்கள் ஓடி வந்தனர். விஷயம் தெரிந்த போலீஸ் விரைந்து வந்தது. அவள் கணவனுடன் அவளையும் நீதி மன்றம் அழைத்துச் சென்றனர். யாரும் என்னைத் துன்புறுத்தவில்லை. அடிக்கவில்லை. ஆம்; இந்தக் கண்மூடி சட்டமும் வஞ்சகப் பரம்பரையும் மங்கையரைத் தான் துன்புறுத்தும். ஆனால் ஆண்களை மன்னித்துவிடுமே!''

—இதைக் கூறிவிட்டு அந்த இளைஞன் தன் தலை குனிந்தவாறு ஊரை நோக்கிச் சென்றுவிட்டான். இந்தச் சிந்தனை என் நெஞ்சில் தேங்கிக் கிடக்க துய



ரம் மிக்க சூழ்நிலையில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் அங்கு கழிந்திருக்கும். மரத்தில் தூக்கில் தொங்கிக் கிடக்கும் திருடன் காற்றசையும் போதெல்லாம் ஊசலாடினன்- அந்தக் கிளை அசைந் தசைந்து ஆடியது. வீரத்தியாகியும், காதல தியாகியும் படுத் துறங்கும் மண்ணிலே தன்னை யும் உறங்கச் செய்ய வேண்டிக் கொள்வதுபோல் இருந்தது.

சிறிது நாழிகை கழிந்து ஒருத்தி, பாவம், வியாதியும் கவலையும் உருக்கிய உடலைத்தாங்கி கந்தையால் தன் மானத்தை மறைத்தபடி அங்கு வந்தாள். தொங்கும் அந்தத் திருடனது பிணத்தை அண்ணாந்துபார்த்து அவள் மார்பில் அறைந்து, தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுதாள் அவள் பிலாக்கணம்—சோகக் குரல்—என்னைச் செயலறறவனாக்கிற்று.

சிறிது நேரத்திலே அவள் மரத்தின் மீது ஏறி அந்த முடிச்சை அவிழ்த்து அவ்வுடலை இறக்கினாள். தொங்கி ஊசலாடிய மனிதனே ஈரத்துணி மூட்டையைப்போல் 'பொத்' தென்று வீழ்ந்தான். அவள் விரைந்து கீழ் இறங்கி, முதல் கல்லறையின் தலைப் பக்கம் நட்டு வைத்த வாளை எடுத்து, இரண்டு கல்லறைகளுக்கும் பக்கத்தில் மூன்றாவது சவக்குழியைத் தோண்டினாள். அந்தப் பிணத்தை அக் குழியிலே வைத்து, மண்மூடி, கல்லறையாக்கி. இரண்டு குச்சிகள் எடுத்து சிலுவைபோல் கட்டி அவன் தலைமாட்டில் நட்டு வைத்தாள். நடுங்கும் உடலோடும் தேம்பி அழுங்குரலோடும் நீர் வழியும் கண்களோடும் தன் ஊருக்குத் திரும்பிப் போகும் அவளை நான் நிறுத்தி, "ஏன் அம்மா, ஒரு திருடனைப் புதைக்க நீ இங்ஙனம் வரலாமா?'' என்று கேட்டேன்.

துயராலும் துன்பத்தாலும் சுற்றிலும் கருமை படர்ந்த தன் கண்களை ஏறிட்டுப் பார்த்து அவள், "திருடனா? அவரா? அவர் என்னுடைய அன்புக்குரிய கணவர் — என் குழந்தைகளின் பிரியமான அப்பா. எனக்கு ஐந்து குழந்தைகள் உண்டு. மூத்தவன் வயது எட்டு. சிறிய குழந்தை இன்னும் பால் குடிக்கிறது. என் கணவர் திருடர் இல்லை. அவர் பாதிரிகள் உள்ள துறவி மடத்தின் தோட்டக்காரர். ஆனால் அந்தத்துறவிகளோ இவருக்கு ஒவ்வொருநாள் மாலையிலும் ஒரு ரொட்டியைத் தவிர வேறொன்றும் கொடுப்பதில்லை. அதைக் கொண்டுவந்து எங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார். தன் இளவயதில் இருந்து அந்தத் தோட்டத்தில் உள்ள மரங்களுக்கும் அதைச் சார்ந்த கோதுமை வயல்களுக்கும் தன் நெற்றி வியர்வையோடு தண்ணீர் கலந்து பாய்ச்சி மரங்களையும் வயலையும் பாதுகாத்தார்.

'வயது ஏற ஏற உடல் தளர்ந்தது. உழைப்பால் உடல் நலமும் கெட்டது. பாதிரிகள் இவரை வெளியே துரத்தி விட்டனர். அவர் அழ, நான் அழ, தனக்குக் கருணை காட்டுமாறு அவர்களை வேண்டினார். ஏசுவின் பேரால், தேவதூதர்களின் பேரால் தன்னிடம் தயை காட்டும்படிக் கெஞ்சினார். பாதிரிகளோ அவர்மேல் இரக்கம் கொள்ளவில்லை. அவர்கள் கண்களிலே, மண்ணில் பசியால் வாடிக்கிடக்கும் என் குழந்தைகளோ, ஆடையின்றி பிறந்த மேனியோடு நடமாடும் என்

பிள்ளைகளோ தென்படவில்லை. (பரமண்டலம்தானே தென்படும்!) எனவே என் கணவர் நகரத்திற்குச் சென்றார் வேலை தேடி. இவருக்கு வேலை தர யாரும் முன் வரவில்லை. வலிவுள்ள இளைஞர்கள்தாமே வேலைக்குத் தேவைப்படுவார்கள்! வெறுங்கையுடனே திரும்பி வந்தார். கடைசியாக வீதி ஓரத்திலே பிச்சை எடுத்தோம். பிச்சையும் கிடைக்கவில்லை. "நொண்டியா? முடமா? இவன் வேலை செய்வதற்கென்ன? சோம்பேறி!" என்று வேலைத்தர இயலாத சமுதாயம் தூற்றிக் கொண்டே கடந்து சென்றது.

ஓர் இரவு பிள்ளைகளுக்கு ஒரு வாய் சோறும் இல்லை. மூத்த குழந்தை முதல் யாவரும் கதறிக் கதறி துடித்தனர். இதைக் கண்ட என் கணவருக்கு மனமாற்றம் ஏற்பட்டதுபோலும்; விரைந்து சென்றார். அவர் இருளில் மறைந்து சென்று தோட்டத்தின் வழியாக மடத்தில் புகுந்து பண்டகசாலையில் நுழைந்து ஒரு கூடையில் ரொட்டிச் சுடும் மாவைத் திருடிக் கொண்டு திரும்பி இருக்கிறார். பொன் அல்ல; குழந்தைகள்பசியாறத்தேவைப்பட்ட கோதுமைமாவு! திரும்பி இரண்டடி வைப்பதற்குள் துறவிகள் கூட்டம் ஓடி வந்து அவரைப் பிடித்து அடி அடி என்று அடித்து பிடித்துக் கட்டி போலீஸார் வசம், பொன், வெள்ளி சாமான்களைத் திருடினான் என்று கூறி ஒப்படைத்தது. போலீசும், நீதிமன்றமும், கழுகும் பருந்தும் அவர் உடலைத் தின்று தங்கள் வயிற்றை நிரப்பட்டும் என்று தீர்ப்பளித்தன."

இப்படிப் பேசி முடித்த உடனே பரிதாபத்திற்குரிய அம்

158954



குத்தியின்றி—இரத்தமின்றி—படை எடுக்காது—படுநாசம் விளைவிக்காது பதினேழு குறுநாடுகளை வெற்றி கொண்டாராம், முகலாய மன்னர் ஔரங்கசீப்!

வேறு எந்த முறையை அவர் கடைப்பிடித்தார்?

பாதரட்சைகள்!

விசித்திரமாக இருக்கிறதல்லவா? எந்த ஒரு நாட்டையாவது தன் வசப்படுத்த வேண்டுமென்று அவர் நினைத்தாலும், உடனே தன்னுடைய பட்டத்து யானையின்மீது — அலங்கரிக்கப்பட்ட அம்பாரியில் தனது மஞ்சள் நிற பாதரட்சைகளை வைத்து அந்த நாட்டு அரண்மனைக்கு அனுப்புவாராம்! அதைக் கண்ட அந்த நாட்டு மன்னர், ஔரங்கசீப்பின் குறிப்பறிந்து, யானையை வரவேற்று, பாதரட்சைகளை அரியணையில் ஏற்றி தான் பணிந்துவிட்டதை உணர்த்துவாராம்.

பாதரட்சைகள் நாடாண்ட விசித்திரம் பாரத சரித்திரத்தில் புதுமையில்லையாயினும் 17 நாடுகளை ஔரங்கசீப்புக்குத் தந்தன என்பது விசித்திரம்தானே!

மாது தன் விதியை நொந்து தன் வழியே சென்ருள். அவள் பேசிய-சொன்ன சொற்களி லிருந்து சோகச் சிற்பங்கள் மேலெழும்பி எங்கணும் நிறைந் துள்ளதைப்போல் அந்த இடம் தோற்றமளித்தது.

அந்த மூன்று கல்லறைகளின் இடையிலே திகைப்புற்று, நாவசையாமல், துயரத்தால் சிலை என நிலைத்து நிற்கும் சோக பிம்பமென நான் நின் றேன். நான் சிந்திக்க நினைத் தேன். மனம் சிந்திக்க மறுத் தது. புரட்சி செய்தது. மனம் ஒரு தாமரை மலர் போன்றது. இருளைக் கண்டு தன் இதழ்களை மூடிக் கொள்ளும். அது தன் மணத்தினை இருளுக்கும் நிழ லுக்கும் வாரி வழங்காது.

நான் அங்கு நின்றேன். அந்த மூன்று கல்லறைகளை மூடிய ஒவ்வொரு மண் துகளும் பரந்த வெளியிலே எழும் மூடுபனி யைப்போல் படிப்படியாக எழும்பி, இக் கொடுமையை எதிர்த்துக் கதறுவது போல வும், காதருகே சிற்றிலைகள் போல் ஒலி செய்து என் உள் ளத்தில் உணர்வூட்ட முயல்வ தைப்போன்றும் உணர்ந்தேன்.

அங்கு நின்றவாறே நான் பெருமூச் செறிந்தேன். ஆ! அந்த மூச்சில் உள்ள கனல் அங்குள்ள மரங்களைத் தொடு மானல், தூண்டுமானல். அவை கூட தங்கள் இடத்தைவிட்டு அணிவகுத்து தங்கள் கிளை யுடன் அமீர் முன் சென்று, போர் செய்து. துறவி மடத்தி லுள்ள பாதிரிகளின் தலைமேல் மடத்தின் சுவர்களை ஏற்றிக் கொண்டு திரும்பி வருமே!

நான் அங்கு நின்று அந்த மூன்று சவப் படுக்கைகளைக் கண்டேன். அங்கு தனிமை யின் இனிமையில் துக்கத்தின் கசப்பும் கலந்து காணப்பட் டது.

முதல் சவக்குழியில் உள்ள இளைஞன், ஒரு நங்கை தன் கற்பை சூரையாடும் ஓநாய்க் குப் பயந்து கதற தன் உயிரைப் பணயம் வைத்து காப்பாற்றி ஞன். அந்தத் தீரத்திற்கு அவ னுக்குக் கொடுக்கப்பட்ட பரிசு தலை சீவப்படுதல்! அந்த நங்கை அவன் வீரத்திற்கு அடையாள மாக அவன் கல்லறையிலே அவ னுடைய வாளை நட்டு வெட்கக் கேட்டிலும், அறியாமையிலும் உழலும் உலகத்திற்கு உண் மையை உணர்த்தினுள்.

இரண்டாவது கல்லறை— ஒரு மங்கையுடையது. அவள் உடலைக் காமம் அசுத்தப் படுத்துவதற்கு முன்—தூய்மை யான காதலால் ஆட்கொள்ளப் பட்டவள் அவள். அவர்கள் அவளைக் கல்லெறிந்து கொன் ருர்கள். ஏன்? தன்னுடைய உள்ளத்திற்கு அவள் இறக்கு மட்டும் துரோகம் செய்ய வில்லை. அவள் காதலனே அவள் கல்லறைமேல் மலர் மாலை சூட்டிச் சென்ருன். அவை காய்ந்து உதிரும் போ தெல்லாம் ஒவ்வொரு இதழும் தங்கள் அறியாமையால் ஊமை யராய் — தீச் செயலால் கண் மூடிகளாய் உள்ள மக்களைக் காதல் எங்ஙனம் தூய்மைப் படுத்துகிறது என்று கட்டா யம் உணர்த்தும்.

அதோ! மூன்ருவது கல் லறை; பாவம் ஏழை—அவன் கை துறவிகள் மடத்தில் வேலை செய்து ஓய்ந்தது. அவர்களோ அவனை நீக்கி வேருருவனை அமர்த்திக்கொண்டனர். வேலை செய்து குழந்தைகளைக் காக்க நினைத்தான். இயலவில்லை. பிச்சை எடுத்தான், கிடைக்க

யில்லை. தன்னுடைய வியர்வையின் பலனை சிறிது அனுபவிக்கலாம் என்று அவன் அங்கு சென்றான். துறவிகள் அவனைத் திருட்டுக் குற்றம் சாட்டி அழித்தனர். அவன் மனைவியோ அவன் கல்லறையிலே, இரவிலே மினுக்கும் விண்மீன்கள் பாதிரிகளின் கொடுமையை பரமண்டலத்தில் உள்ள பிதாவுக்கு விளக்கட்டும் என்பதற்கும், ஏழைகளையும் பலவீனர்களையும் கூரிய வாளால் நசுக்க எப்படி ஏசுவின் போதனைகள் உபயோகப்படுகின்றன என்பதைக் கூறட்டும் என்பதற்கும் அடையாளமாக ஒரு சிலுவையை நட்டுத் திரும்பிப் போனாள்.

சூரியன், மனிதர்களின் கொடுமைகளையும், அட்டூழியங்களையும் கண்டு வெட்கி மறைந்தான். இயற்கையைப் போர்த்தி விட இருளையும் அமைதியையும் இழையோட்டி, ஒரு ஆடை நெய்தபடி மெல்ல வந்தது மாலை

மேலே வானத்தை உயர நோக்கினேன். என் கைகளை கல்லறையின் பின்பக்கம் விரித்தபடி என்னை அறியாமல் கூவினேன்: "அந்தோ வீரமே! உன் வாள் மண்ணில் கிடக்கிறது! ஓ, காதலே! உன் மலர்கள் கனலால் வாடி துவண்டு கிடக்கின்றன! நாசரத்தின் ஏசுபிரானே! இதோ, உன் சிலுவை இருளில் அமிழ்ந்தே விட்டது!"

●●●

வேண்டுகோள்...?

விடிய விடிய சீட்டாடிக் கொண்டிருக்கும் வழக்கம் கொண்ட நண்பர்கள் சிலர், ஒரு நாள் இரவு ஹாஸ்டல் அறையில் அந்தக் காரியத்தைத் துவங்கி விட்டார்கள்.

ஆட்டத்தில் கலக்காத ஒரு நண்பருக்கு இது மிகவும் தொல்லையாக இருந்ததோடு அவரது தூக்கமும் கெட்டுக் கொண்டிருந்தது. ஆகவே அவர் கெஞ்சும் தோரணையில் மற்றவர்களைப் பார்த்து, "ஐயோ, தயவு செய்து ஆட்டத்தை நிறுத்தி விடுங்களேன்!" என்றார்.

ஆட்டத்தின் உச்சகட்டத்திலிருந்த குழுவில் ஒருவர், "அது மட்டும் முடியாது! இந்த நேரத்தில் வேறு எதை வேண்டுமானாலும் செய்யச் சொல்; உடனே நிறைவேற்றுகிறோம்; ஆமாம்!" என்றார்.

அதைக் கேட்ட அந்த நண்பர் இப்படி வேண்டுகோள் விடுத்தார்:

"அப்படியானால் விளக்கை அணைத்துவிட்டு நான் தூங்குவதற்கு வழி செய்யுங்கள்!"



நிழலும் நெப்போலியனும்!

எதிரேயிருக்கும் படம் ஒரு கைத்தடியினுடையது என்று தானே எண்ணுகிறீர்கள்! அது சாதாரணக் கைத்தடியல்ல; ஒரு உலகப் புகழ்பெற்ற மாவீரனின் உருவத்தைக் கொண்டிருக்கும் கைத்தடி!

பக்கத்திலேயே அதன் நிழல் தெரிகிறதல்லவா; அதை நன்ருக உற்றுப்பாருங்கள்; அதிலே நெப்போலியனின் உருவம் தெரியும்!

போர்பன் வம்சத்தவர்கள் ஆட்சிக்கு வந்ததும் யாரும் நெப்போலியனது படத்தை வைத்திருக்கக் கூடாது என்று உத்திரவிட்டார்கள்.

ஆனுல் நெப்போலியனை ஆதரிப்பவர்களுக்கோ இந்த உத்தரவு பேரிடியாக இருந்தது.

உரிமையுணர்ச்சியைச் சட்டத்தால் தடுத்து நிறுத்த முடியுமா?

அதற்காக புதிய கைத்தடிகள் பிரான்சிலே விற்பனைக்கு வந்தன.

அந்தக் கைத்தடியின் தலையை வெளிச்சத்தில் காட்டினுல் சுவற்றிலே நெப்போலியனது திருவுருவம் நிழலாகத் தெரியும்.

அந்தக் கைத்தடிகள் ஆயிரக்கணக்கில் நடமாட்டத்துக்கு வந்தன.

நெப்போலியனது படங்கள் தடை செய்யப் பட்டன. ஆனுல் அரசாங்கத்தால் அந்தக் கைத்தடிகளை ஒன்றும் செய்யமுடியவில்லை.

★ கண் பாதுகாப்பு ★

நமது மொத்த அறிவில் நூற்றுக்கு எண்பத்தைந்து கூறு கண்வழி வருவது. நமது தசை நார்த் தொழில் செயல்களில் நூற்றுக்கு எண்பது பங்கும் அதனால் ஆளப்படுகின்றன.

கண் மிகவும் அற்புதமாய் அமைந்த ஓர் உறுப்பு. கண்கள் தாம் பார்க்கின்ற பொருள்களைப் படமாக வரைந்து, மூளைக்கு அனுப்புகின்றன. அவைகளுக்கு ஆபத்து மிக எளிதாய் உண்டாகலாம். இதனால்தான் கண்கள் மண்டையின் முன் பாகத்திலுள்ள இரண்டு குழிகளில் அமைக்கப்பட்டு, இமைகளாலும், புருவங்களாலும நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

குழந்தையின் கண்களை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து வரவேண்டும். குழந்தை பிறந்ததும், அதன் கண்களைப் பொராசிக் திராவகத்தால் கழுவவேண்டும் குழந்தை தூங்கும் பொழுது, ஈக்கள் வந்து கண்களில் உட்காராதபடி, அக்குழந்தையைச் சிறிய கொசுவலைத் துணியைக் கொண்டு மூடவேண்டும். உஷ்ணக் காலங்களில் குழந்தைகளது கண் நோயால் வருந்துவதையும், அவர்களது கண்களில் நிறைய பீளை கட்டியிருப்பதையும் பார்க்கிறோம். இதற்தக் காரணம் என்ன? ஈக்கள் நோயுள்ள கண்களில் உட்கார்ந்து நாறுகிற பீளையைத் தின்பதோடு, அதைத் தங்கள் கால்களில் அப்பிக் கொண்டு பறந்து சென்று, கண்ணோய் இல்லாத குழந்தைகளின் கண்களில் உட்காருவதே! இவ்வாறு கண்ணோய் மிக விரைவாய்க் குழந்தைகளுக்குப் பரவுகின்றது.

குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூட அறைகள் போதுமான வெளிச்சம் உடையனவாயிருக்க வேண்டும். அவர்கள் கால்கள் நிலத்தில் படுமாறு பெஞ்சுகள் தாழ்ந்திருக்கவேண்டும். மேசை மேல் புத்தகத்தை வைத்து. நிமிர்ந்து உட்கார்ந்து படிக்கும் பொழுது, கண்ணுககும் புத்தக எழுத்துக்கும் இடையே உள்ள தூரம் ஒரு அடி இருக்க வேண்டும். மேசை அவ்வளவு தாழ்ந்து இருக்க வேண்டும். படிக்கும் புத்தகத்திலுள்ள அச்செழுத்துக்கள் பெரிதாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். சின்ன அம்மையாவது, வைசூரியாவது கண்டு சுகமான குழந்தையைச் சில வாரங்களுக்குப் பாடசாலைக்கு அனுப்பக கூடாது. இந்நோய்கள் அவர்கள் கண்களைக்கெடுத்துப் பலவீனமாக்குகின்றன.

புகையிலை உபயோகிப்பதும், மதுபானம் செய்வதும் கண்களுக்கு அதிகத் தீங்கு உண்டாக்கும். கள் குடிப்பவன் கண்கள் சிவந்திருப்பதும், சுருட்டு குடிப்பவன் கண்கள் மஞ்சளாயிருப்பதும் நீங்கள் பார்த்திருக்கலாம். புகையிலையும் கள்ளும் அதிகம் உபயோகிப்பவர் பார்வை மங்கலாக இருக்கும்.

குறைந்த வெளிச்சமுள்ள அறைகளில் உட்கார்ந்து புத்தகங்களைப் படித்தலும், நுட்பமான சித்திரத்தையல் போன்ற வேலைகளைச் செய்தலும் கூடாது. வெளிச்சத்துக்கு எதிரே உட்கார்ந்து படிக்கக் கூடாது பின் பக்கத்திலிருந்து வெளிச்சம் தோள் மேலாக வந்து, புத்தகத்தின்மீது விழுமாறு உட்காருவது நல்லது.

படிக்கும் பொழுதும், உற்றுப் பார்க்க வேண்டிய வேறு வேலைகளைச் செய்யும் பொழுதும் சில முறை கண்ணுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். இதற்காக இரண்டு கண்களையும் சில விநாடிகள் மூடிக்கொள்ளலாம். அல்லது ஜன்னல் வழியாக வானத்தையாவது பச்சைமரத்தையாவது பசும் புல்லையாவது சில நிமிடங்கள் பார்க்கலாம். கண்களில் தூசி விழுந்தால் தேய்க்கக் கூடாது. போராசிக் திராவகம் கலந்த நீரால் கழுவி தூசியை எடுக்கவேண்டும். சுத்தமான வெந்நீரையும் உபயோகிக்கலாம் பிறர் உபயோகித்த சவுக்கங்களையும் சோப்புகளையும் தொட்டில்களையும் குளியில் உடைகளையும் உபயோகிக்கக் கூடாது.

பின் வரும் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வது மிகுந்த பயனை அளிக்கும்:

1. ஒரு சவுக்கம் அல்லது கைக் குட்டையைக் குளிர்ந்த நீரில் தோய்த்து, நன்றாகப் பிழிந்துவிட்டு இரண்டு மூன்று நிமிஷம் கண் மேல் போட்டு வைத்திருங்கள். தினமும் நித்திரைக்குப் போகுமுன் இவ்விதம் செய்வது கண்களுக்கு ஏற்படும் களை தீர்ப்பதற்குச் சிறந்த மார்க்கம்.

2. கண்ணினுள் ஒருபொட்டு வெளிச்சமும் போகாதபடி உள்ளங்கையால் கண்களைக்கெட்டியாகப் பொத்திக் கொள். சில நிமிடம் அப்படியே இரு கண்ணைப்பற்றிக் கொஞ்சமும் நினையாதே. கிட்டக் கேட்கும் சத்தத்தைக் கவனி. பிரகாசமான வெளிச்சத்தால் கண்ணுக்குக் களை எப்படி ஏற்படக்கூடும்? இருட்டின் மேல் கருத்தைச் செலுத்தாதே. கண்ணுக்குப் பூரணமான ஓய்வு கிடைக்கட்டும். வெகு நுணுக்கமான எழுத்துக்களை வாசிப்பதினாலும்

வெகு நுட்பமான வேலைகளைக் கூர்ந்து பார்த்துச் செய்வதினுலும், கடும் பிரகாசமான வெளிச்சத்தில் பார்ப்பதினுலும் ஏற்படும் கண் களையைப்போக்க இது சிறந்த முறை. ஒவ்வொரு நாளும் பல முறை இப்படிச் செய்யலாம்.

3. கண்களை மேலும் கீழும் உருட்டுவது வேருெரு பயிற்சி. கண்ணை மூடிக்கொண்டு, மெதுவாக வலப் பக்கமிருந்து இடப் பக்கமும், இடப் பக்கமிருந்து வலப் பக்கமும் பத்து முறை வீதம் உருட்டு. பின் மேலேயிருந்து பத்து முறை உருட்டு. இப்படிப் பக்கம் மாற்றி மாற்றி உருட்டு. முகத்தைச் சுளிப்பதனுலோ, கூர்ந்து பார்ப்பதனுலோ ஏற்படும் கண் களைப்புக்கு இது நல்ல பரிகாரம்.

நாம் களைப்பாறும் பொழுது நெற்றியைச் சுளிக்கவோ, கண்களை நெறித்துப் பார்க்கவோ அவசியம் இருக்காது கூடிய மட்டும் முகத்தைச் சுளிப்பு நெறிப்பு இல்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும். முகத்தில் சுறுக்கம் விழாதபடிக் காக்க இது நல்ல வழி. ஒரு பொருளை ஊன்றிப் பார்த்து விட்ட பிறகோ, அல்லது கூர்ந்து வாசித்த பிறகோ, சில நிமிஷங்கள் வானத்தை அண்ணுந்து பார். அல்லது தூரத்தில் எட்டிப் பார். இதைப் பழக்கமாக்கிக் கொள்.

எதையும் கண்ணை நெறித்துப் பார்க்காதே. வலிந்து பார்க்காதே. விஷயங்களே கண்ணில் படட்டும். கண் ஓர் அதியற்புதக் கண்ணுடி. அதன் முன் எதிர்ப்படும் விஷயங்கள் எல்லாம் தானே அதில் பிரதிபிம்பிக்கும். பிள்ளைகளின் கண்கள் தெளிவாயும் பிரகாசமாயும் இருப்பதற்கு இதுதான் காரணம். அவர்கள் எதையும் வலிந்து பார்ப்பதில்லை.

—" நல்வழி "

●●●

அச்சுப்பிழை 'எமன்' ஆயிற்று!

ஒரு சிறு அச்சுப் பிழை ஒரு கவிஞரின் உயிரைக் குடித்து விட்டது. 17-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் அந்த நாடகக் கவிஞர்.

கார்லோ அலெக்ஸாண்டிரோ கைடி என்னும் பெயர் படைத்த அந்த நாடகாசிரியர் 16-வது நூற்றுண்டில் வெளியான "நீதியுரைத் தொகுப்பு" என்னும் ஒரு ஆங்கில நூலை இலத்தீன் மொழியில் ஆக்கினுர். புத்தகம் அச்சாகி முதல் பிரதி கிடைத்தது தான் தாமதம்; போப்பாண்டவருக்குச் சமர்ப்பிப்பதற்காக அதனை எடுத்துக் கொண்டு அவர் விரைந்தார்.

செல்லும் வழியில் தற்செயலாக ஒரு பக்கத்தைப் புரட்டினுர். அதில் "சைன்" என்னும் வார்த்தை "சின்" என்று இருப்பதைக் கண்டதும் அவர் பயங்கர அதிர்ச்சியடைந்தார். அந்த அதிர்ச்சியே அவருக்கு எமனுயிற்று!

[குறிப்பு: "சின்" என்னும் வார்த்தைக்குப் 'பாவம்' என்று அர்த்தம் "சைன்" என்ருல் 'இல்லாமல்' என்று பொருள்.]

—இராலன்

காதல் என்பது உணர்ச்சிகளின் விளையாட்டு; உணர்ச்சிகள் அபூர்வமாகத்தான் அமைதியாக இருக்கின்றன—ராஜன் தனக்குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டான். மங்கிய விளக்கு வெளிச்சத்தில், அவன் முகம் விகாரமாக யிருந்தது. அமைதியின்றி அங்குமிங்குமாக அவன் நடந்து கொண்டிருந்தான், எங்கோ ஓடிக் கொண்டிருந்த தனது மனதை எட்டிப் பிடிக்க முடியாமல். பல நாட்களாகக் கண் விழித்திருந்தவன் பெறும் கரும் வளையங்களை அவன் கண்கள் பெற்றிருந்தன. குழி வீழ்ந்த அவன் விழிக்குள்ளே தேக்கி வைத்திருந்த கருத்துக்கள், அவன் இதயத்திலிருந்து நிரம்பி வழிந்த எண்ணங்களாகும். தூங்க முயன்றான் இதயப்பூர்வமாக! ஆனால் அவன் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த சோகச சுமையின் வலி அவனைத் தூங்க விடாமல் ஆக்கிவிட்டது. களையிழந்து இரத்தம் குன்றி பல நாள் படுக்கையிலே விழுந்தவனைப் போல் பரிதாபமாகக் காட்சியளித்த ராஜனைப் பார்த்து இரக்கமே இரங்கிற்று!

மாறிவரும் ராஜன், நண்பர்களுக்கு உருவாகி வரும் புதிரானான். “நாளுக்கு நாள் இளைத்துப் போகிறானே? பைத்தியம் போல அலைகிறானே? கலகலவென்று பேசுவானே; “கம்” மென்றாகிவிட்டானே?”—நண்பர்கள் பேசிக் கொண்டனர் இப்படி.

அவன் இல்லாத இடம் மகிழ்ச்சியற்ற சூன்யப் பிரதேசம் என்றிருந்த நிலை மாறி அவனே சூன்யப் பகுதியானான். அலுவலகத்தை விட்டு

வெளியே வந்தால் வெறிச் சோடிப்போன ஊர்க் கோடியின் மயான வெளிக்குப் போவான். ''சமரசம் உலாவுமிடமான'' அந்தப் பகுதியில் கடந்த காலத்தால் நீறுக்கப்பட்டவர்களின் புதை குழியின் பக்கத்தில் உட்கார்ந்து, நடு நடுவே சிதறிக் கிடந்து, செத்தாலும் மீதி வைத்து விட்டுத்தான் போனேன் என்று மறைந்தவர்களின் சார்பில் வாதாடும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து, தனது சிந்தனைப் பொறியைத் தட்டிவிடும் பொத்தானுகப் பயன்படுத்துவான்.

அமைதியற்ற அவன் உள்ளம் மயான அமைதி நாடிற்று! எவ்வளவு நேரம் அங்கிருப்பான் என்று அவனுக்கே தெரியாது. பொழுது பறக்கும்! சிலவேளை பொழுது விடியும் நேரத்தில் வீட்டுக்குத் திரும்புவான். நீண்ட நிசியின் அமைதியைக் குலைக்கும் கோட்டானின் கதறல், நரிகளின் ஊளை, மயான அமைதியோடு ஒன்றி விட்ட அவனைக் கலைக்க முடியவில்லை.

விசித்திரப் பிறவியாக உலவிக் கொண்டிருந்த ராஜன், அந்த ஊருக்கே ஒரு விசித்திரப் பிரச்னையானுன். யார் என்ன கேட்டாலும், ''நான் பைத்தியக்காரனும்!'' என்று மட்டும் பதில் சொல்வான். வேறு எந்த கேள்விக்கும் அவன் ஆண்டவனுனுன்; கேட்பவர்கள் பக்தர்களானுர்கள்!

ராஜன் நடுத்தர வகுப்பைச் சார்ந்த பட்டதாரி! மாதம் அவன் பெறும் சுமார் 150 ரூபாய் அவனது உழைப்பின் அத்தாட்சிப் பத்திரம். தனது 26-வது வயதில் திருமணம் பெற்றோர்களின் விருப்பப்படி முடித்துக்கொண்டான். வாழ்க்

அதுவும் குறிப்புதானே!

அமெரிக்காவில் 'குரியர் ஜர்னல்' என்று ஒரு பத்திரிகை இருக்கிறது. ஒரு காலத்தில் அதை ஹென்றி வாட்டர்சன் என்ற பிரபல ஆசிரியர் பதிப்பித்து வந்தார். அவருக்கு எப்போதும் பணமுடை! தேவையான போதெல்லாம் யாரையும் கேட்காமல் பணப்பெட்டியிலிருந்து தமக்கு வேண்டிய பணத்தை அவர் எடுத்துக் கொண்டுபோய் விடுவார். கணக்கு விவரம் தெரியாமல் குமாஸ்தா தவிப்பார்.

மானேஜர் ஒருநாள் அவரிடம் வந்து. ''ஐயா, நீங்கள் வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு போங்கள்; ஆட்சேபமில்லை. ஆனுல், இவ்வளவு பணம் எடுத்தேன் என்று ஒரு குறிப்பு எழுதிப் பணப்பெட்டியில் போட்டு விட்டுப் போங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

மறுநாள் ஆசிரியர், முன் போலவே பணப்பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துக் கொண்டு அவசரமாக வெளியே போனுர். குமாஸ்தாவும், மானேஜரும் பணப்பெட்டியை வந்து பார்த்தார்கள். அது காலியாக இருந்தது; ஒரு சல்லிக் காசுகூட இல்லை. ஆனுல், ஒரு குறிப்பு மாத்திரம் இருந்தது.

''அத்தனையையும் எடுத்துக் கொண்டேன்—வாட்டர்சன்'' என்று அதில் எழுதியிருந்தது.

கையின் எந்தப் பிரச்னையிலும் நீதி காணும் நீதிபதிகளாகத் தாய் தந்தையர்களைக் கொண்டவன்! கொஞ்சம் நிலபுலன்களுக்கும் அவன் அதிகாரி!

மணமேடையில்தான் அவன் தனக்கு வாய்க்கப்போகும் மனைவியைப் பார்த்தான். திகைத்து நின்றான்! தன் முன்னே அழகுலகம் உருக்கொண்டு திரண்டு நிற்பதாகக் கருதினான்! நல்ல அழகன் என்று அந்த ஊரரால் பாராட்டப்பட்ட அவனே, தன்னைக் கொஞ்சம் தரக்குறைவாகவே எடை போட்டான். தன்னை மறந்தான்! புது உணர்ச்சியின் உச்சிக்குப் போனான்! மயிர்க்கால் அணு ஒவ்வொன்றிலும் இன்பம், வெறிக் குழம்பைப் பூசிச் சென்றது.

தன்னை மறந்து தாய் தந்தையர்களைப் பாராட்டினான்! அவன் சிந்தனை சிறகடித்துப பறந்தது. சீதளப் பூஞ்சோலை—பாடிவரும் வானம்பாடி—சிரித்து சிறை வைக்கும் முல்லைக் கொடி! அதைத் தாங்கி நிற்கும் மாமரம்—அதன் பக்கத்தே அமைதியாக, ஆனால் காதலர்களின் உள்ளத்தில் நிச்சயமாக புயலைக் கிளப்பி ஓடிக்கொண்டிருக்கும் சிறிய அருவி! அந்த அருவியின் கரையருகில் கிடக்கும் வட்ட வடிவான, விரிவான கற்பாறை! அதன் மேலே ராஜனும், அவன் சொக்கழகி ராணியும். அவர்களுக்கு மேலே மலரை வாரி யிறைக்கும் முல்லைப் பந்தல்—அதற்கு மேலே முழுமதி!

அதற்கு மேலே ராஜனால் சிந்திக்க முடியவில்லை! இந்த சிந்தனையின் வேகத்தில், மாலை மாற்றிக் கொள்வதைக்கூட அவன் மறந்து விட்டான்!

"ராஜன்" திடீரென்று பல குரல்கள் ஏக நேரத்தில்! அவன் நினைவுலகத்திற்கு வந்தான். அவனை புதுப் பெண்ணானாள்! புதுப்பெண் அவனைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள்! இந்த சுவையான கட்டம், திருமணத்திற்குப் பிறகு, வாலிபர்களிடையே ஒரு ரசமான சம்பவத் தொடராகத் தொடர்ந்தது.

ராஜனின் வாழ்வில் புதுமை பிறந்தது! அதைக் கொண்டு வந்தவள், ராணி!

ஏற்கனவே நிர்மலமாக யிருந்த வானத்தில் இப்போது ஒளி உமிழும் முழுமதி! ராணியின் முகத்தில் அதை ராஜன் பார்த்தான்! சொக்கிப் போனான்! தன் முன்னே திடீரென்று திரை விலகியதும் காணும் இன்பக் காட்சியை ராஜன் பார்த்தான்!

உலகக் காட்சிகளை இப்போது ராஜன் நான்கு கண்களோடு, ஒரு இதயத்தின் துணையோடு பார்த்தான்! அழகு நிலப் பரப்பு, அடேயப்பா, எவ்வளவு விரிந்தது—என்று எண்ணி ஆச்சரியப்பட்டான்! காணுகின்ற ஒவ்வொரு பொருளும் கருத்துகளைச் சொல்லி நின்றன! அந்தக் கருத்துகளில் புதுமை உணர்ச்சிகள் பிரவேசிப்பதைக் கண்டான்!

ராணியை அவன் வழிபட்டான்—ஏன் கூடாது? அவள் பெண்மட்டுமா? மனைவி மட்டுமா? இதயம் கவர்ந்த மங்கை மட்டுமா? அதற்கெல்லாவற்றிற்கும் மேல் அவள் அழகி! அழகை ஆராதிக்கலாம்! தவறில்லை!

அதற்காகவே மலர் வாங்கி வருவான். கனிகளும், கற்கண்டு நிகர் பண்டங்களும் வாங்கி வருவான். தேவிக்குப் படைப்பான்! அவள் அதைப் புசிப்பாள்! பக்தனுக்கும் தருவாள்! அவன்

அதைப் பெரும் பசிக்காரனின் உணர்ச்சியோடு உண்பான்!

பக்தன் தவம் கிடந்தான்! தேவி வரம் தந்தாள்! ராஜனின் பக்தி வீண் போகவில்லை! அவன் தந்தையானான்!

இன்பம் விரிந்தது. பெருகியது. வான் முட்ட உயர்ந்தது! அது கால் வைத்த இடமெங்கும் ராஜன்—ராணி சென்றனர்; வென்றனர்! பெருக்கெடுத்தோடிய இன்ப வெள்ளம் அவர்கள் மூச்சுத் திணற வைத்தது!

வாழ்வுச் சகடம் சுழன்றது. சுழற்சியிலே அவர்களும் சுழன்றனர்! இன்ப வளையங்கள், ஒன்றன் பின் ஒன்றாக! அந்தச் சுழற்சி வேகம், இரண்டாவது குழந்தையை அந்த மகிழ்ச்சி நடமாடும் வீட்டுத் தொட்டிலில் விட்டெறிந்து விட்டு ஓடியது.

குழலினிது யாழினிது
என்பர் தம் மக்கள்
மழலைச் சொல்!
கேளாதவர்.

இந்தக் — குறளுக்கு விளக்கம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, மேற்கோளுரை இத்தனையும் தரப்பட்டன! விளக்கவுரைக்காரர்கள் ராஜன்—ராணி ஜோடிகள்!

நம்பிக்கை—வெறும் நம்பிக்கை — கண்மூடித்தனமான நம்பிக்கை—எப்போதும் ஆபத்தானதுதானு? வெறிகொண்டு நம்பி ஒரு பிரச்சினையிலே பிரவேசிப்பவன்; தான் விரும்புகிற நிலையை அதிலே காண விழைகிருன்! அதைவிட மேலாக ஒளியமசத்தையே காணத் துடிக்கிருன். அந்தவேகத்தில், இருள் பகுதி அவன் கண்களை மறைத்து விடுகின்றன!

இதயப்பூர்வமாக ராணியை நம்பினுன்! அவள் உள்ளத்தோடு தன்னைக் கோர்த்துக் கொண்டான்! அது ஒட்டிற்ரு? இணைந்ததா? இறுகிப் பிணைந்ததா? இதுபற்றியெல்லாம் அவன் சிநதிக்க முடியவில்லை!

அவளை மனமார நம்பினுன்!

அலுவலகத்தை விட்டு வீட்டுக்கு வருவான். எப்போது மாலை பிறக்கும்; தொழும்பு பறக்கும் என்றே எண்ணி வருவான், வாயிலிலே வழிமேல் விழி வைத்திருக்கும் தனது காதலியைக் காண்பதற்காக; ஒரு சொல் கூறுவதற்காக!

* * *

வழக்கத்திற்கு மாருக அன்று அலுவலகம் சென்ற அவன் சிக்கிரமே புறப்பட்டு விட்டான். யாரோ "பெரிய மனிதர்" ஒருவர் செத்தார் என்பதற்காக அனுதாபம் காட்டி, அலுவலகத்தின் கதவுகள் மூடிக்கொண்டன. செத்தவருக்கு வாழ்த்துத் தெரிவித்தான்! தற்காலிகமாக மூடிக்கிடந்த அவன் இதயக் கதவுகள் திறந்து கொண்டன. இன்ப உருவம் தலைகாட்டியது! தலைகால் தெரியாமல் நடந்தான். இல்லை; ஓடினுன்! எவ்வளவு உற்சாகம்! எவ்வளவு தெம்பு! இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனுன பிறகும்! ஒவ்வொரு நிமிடமும் விலை மதிக்கவொண்ணுத நேரமாயிற்றே! பறந்தான்! வீட்டின் முன்னே...

கதவு திறந்து கிடந்தது! அவளுக்குத் தெரியாமல் உள்ளே போகவேண்டும்! ஒரு வேளை, அந்தக் கட்டழகி கட்டிலிலே குழந்தையை அணைத்துக்கொண்டு பாதி விழி மூடி, பாதி விழியாலேயே சுற்றுச் சார்பை விழுங்கிக் கொண்டிருப்பாள். பின்னுல் சென்று, "ஓ"......வென்று கூச்சலிட வேண்டும். அவள் நடுங்குவாள். அதிலேயும் அழகு சொட்டும். அதைப் பார்க்க வேண்டும்; பூரிக்க வேண்டும்!

ஒரு வேளை, குழந்தைக்கு நடைபழகக் கற்பித்துக்கொண்டிருப்பாள். அதுபோது, நடைபிசகாக நடமாடும் நெறிகெட்டவர்களைப் பற்றிப் போதித்துக் கொண்டிருப்பாள். திடீரென்று முன்னேசென்று நிற்க வேண்டும். அவள் வியப்பிலே கண்களை அகலத் திறப்பாள்! அதனுள்ளே நான் உடனே புகுந்துவிட வேண்டும்! என் உள்ளச் சிறையில் அவளை நானடைப்பேன்!

என்னென்ன நினைத்தானே? திறந்து கிடந்த கதவைத் தள்ளி விட்டு உள்ளே நுழைந்தான். சந்தடியின்றி நடந்து கட்டிலறையின் பக்கம் போனுன். அங்கே...

ஆடவன் குரல்!...திடுக்கிட்டான்! காதல் பேச்சுக்கள்! தீயை மிதித்து விட்டான்!

"இச்"சென்ற ஒலி! காதுகளின் உள் நரம்புகள் அறுந்தே விட்டன!

"உன் புருஷன் ஒரு பைத்தியம்! இத்தனை வருடங்களாக நமக்குள்ள உறவை அவன் புரிந்து கொள்ளவேயில்லையே!"

இதுதான் நாகரிகம் !



—சொந்த வீட்டிலே புகுந்து கருநாகம் அலறியது.

"புரிந்தால்தான் அவரால் என்ன செய்துவிடமுடியும்?"—புகுந்த நாகத்திற்கு புற்றுஉரு வாக்கிய பசப்புக்காரி, வீரம் பேசினுள்!

"இத்தனை வருடங்களாக..." —ராஜனின் தலை சுழன்றது.

"நமக்குள்ளஉறவு..."-அவன் 'ஆத்மா' அலறியது. அடி கள்ளி, துரோகம் செய்து விட்டாயே!

"உன் புருஷன் ஒரு பைத்தியம்..."—இந்த வார்த்தைகள் அவன் இரத்தத்தைச் சூடேற்றி விட்டன!

கத்தி, தடி, அரிவாள்...மாறி மாறி அவன் கண்களுக்கு முன்னே தோன்றி மறைந்தன!

"புரிந்தால்தான் அவரால் என்ன செய்துவிட முடியும்?" —என் ராணியின் பதிலா? அவளா இப்படிக் கூறினுள்?

"என்னுல் ஒன்றும் செய்ய முடியாது..."—அவன் மனச்சாட்சி ஒப்புக் கொண்டது! வீட்டை விட்டு வெளியேறி விட்டான்.

"உன் புருஷன் ஒரு பைத்தியக்காரன்"—அதையே அவன் உதடுகள் முணுமுணுத்தன! அவன் அரைப் பைத்தியமாகவே ஆகிவிட்டான்!...மயானம் அவனது பொழுது போக்கு இடமாயிற்று!

வீட்டைவிட மயானம் அவனுக்குப் பிடித்திருந்தது!

* * *

ராஜன் அன்று மகிழ்ச்சியாகக் காணப்பட்டான்! அவன் வீட்டிலே ஒலி பெருக்கிகள் முழங்கின! திருமணக் கோலம்! ஏராளமான கூட்டம் உள்ளே திரண்டிருந்தது! வந்தவர்களை ராஜன் வரவேற்றுக் கொண்டிருந்தான்! மேளதாளங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன!

மணமகன் ராமுவின் கையில் மாலையை எடுத்துக் கொடுத்தான் ராஜன். ராஜனின் கரங்கள் ஆடின! உடல் படபடத்தது! உள்ளம் 'ஓ'வென்று கதறியது! சமாளித்துக் கொண்டே சப்தமிட்டான்!

புதுமணத் தம்பதிகள் ராமு—ராணி வாழ்க! மணமன்றம் அமைதியை அரசோச்ச விட்டது! ராஜனின் வாழ்த்தொலி மட்டும் அக்கம் பக்கத்திலே எதிரொலித்தது.

மீண்டும் ஒரு முறை...

வாழ்க, ராமு......ராணி! முழுமையும் சிரமப்பட்டுச் சொல்லி விட்டான். அவன் கண்கள் பக்கத்திலே நின்ற குழந்தைகளைக் கவனித்தன! அக் குழந்தைகளின் கண்கள், மூக்கு, உதடு—இத்தனையையும் பார்த்தன! கூர்ந்து கவனித்தன!

"இல்லை; என் குழந்தைகள் தான்!"—அவனை அறியாமல் ஆவேசம் கொண்டவனுகக் கத்தினுன்! குனிந்து குழந்தைகளிரண்டையும் தூக்கிக் கொண்டான்—பந்தலை விட்டு வெளியேறினுன். மணவீடு அவன் சென்ற திக்கையே நோக்கி நின்றது; அசைவில்லாமல்! ஃ

● ● ●

துயரப்படுவோர் அருகிலிருப்பது மகிழ்ச்சியில் திளைத்திருப்போருக்குப் பாரமாயிருக்கலாம்; ஆனுல் அதே நேரம் உவகையில் மூழ்கியிருப்போர் தம் அருகிலிருப்பது துயரப்படுவோருக்கு எவ்வளவு பாரமாக இருக்கும்!

—கதே

குளிர்காலத்து விருந்து!



மூலம் :
ஓ'ஹென்றி

தமிழில் :
ஆ. சு. மணியன் பி. ஏ.

மோடிசன் சதுக்கத்தில் சோயி ஒரு பெஞ்சில் அமைதியில்லாது புரண்டு கொண்டிருந்தான். இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு காட்டு வாத்துக்கள் கத்திக் கொண்டிருந்தன. பெண்கள் குளிர் காலத்திற்கேற்ற 'ஸீல்' என்னும் மீனின் தோலாலான ஆடையோடு குளிரைக் குறைப்பதற்காகத் தங்கள் கணவர்களுடன் நெருங்கிக் குழைந்து கொண்டிருந்தனர். இதெல்லாம் பனி காலம் நெருங்கிவிட்டது என்பதற்கு அறிகுறி!

பலா இலைச் சருகு ஒன்று அவன் தொடையில் விழுந்தது. அதுதான் பனி காலத்தை அறிவிக்கும் தூதுவன். மோடிசன் சதுக்கத்தை உறைவிடமாகக் கொண்டவர்களுக்கு அந்தப் பலா மரம் பருவத்தை அறிவிக்கும் 'பாரமாணி'யாகத் திகழ்ந்தது. நாற்சந்தியில் தனது அகன்ற பரந்த கைகளால் வடதிசைக் காற்றைத் தடுத்து, அதனால் தன் இலைகளை உதிர்த்து மக்களுக்கு பனி காலத்தின் வரவை அறிவிக்கும் அது!

வரவிருக்கும் சங்கடமான பனியின் முஸ்தீபிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கு வழி வகைகள் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என்

★ குளிர் தாங்கவில்லை. பனி கொட்டுகிறது. இதிலிருந்து தப்பிக்க எங்கு செல்வது ?

★ சிறை செல்வதுதான் சரி என்று பட்டது அவனுக்கு ! எப்படிச் சிறை செல்வது?—இந்தக் கேள்விக்குப் பதில்தான் இந்தக் கதை !

பதை உணர்ந்து விட்டான். ஏனெனில் அவனுக்கென்று ஒரு வீடு கிடையாது. வீடில்லாமல் கோடைக் காலத்தைக் கழித்துவிடலாம். ஆனால் பனிக் காலம் பொல்லாததாயிற்றே! அதனால்தான் அவன் அமைதியில்லாது பெஞ்சில் புரண்டு கொண்டிருந்தான். சோபியின் சோம்பலில் பிறந்த ஆசைகளெல்லாம் பிரமாதமானதல்ல. மத்திய தரைக் கடலில் கப்பல் பயணம் செய்ய வேண்டுமென்றோ; அல்லது வெசுவியியன் குடாவில் சுற்றித் திரிய வேண்டுமென்றோ அவன் ஆசை கொண்டானில்லை. மூன்று மாதம் தீவாந்திர சிட்சைக்குத்தான் அவன் மனம் ஏங்கியது. மூன்று மாதங்களுக்கு உணவுக்கும் உறைவிடத்துக்கும் உத்திரவாதமானதும், அவனை ஒத்த நண்பர் குழாம் நிறைந்ததும், வட திசைக் காற்றிலிருந்து தப்புவதற்கும் ஏற்றதுமான ஒரு இடம் தான் அவனுக்குத் தேவை. அவனைப் போன்ற நாடோடிகளுக்கு இதுபோன்ற வசதிகளை சிறைச்சாலைதான் தரமுடியும். முதல் நாள் இரவில் அந்தப் புராதன மோடிசன் சதுக்கத்தில் ஒரு நீரூற்றின் அருகிலுள்ள பெஞ்சில் படுத்திருந்தான். மூன்று செய்தித் தாள்களை, ஒன்றை உடலுக்கடியிலும், ஒன்றை காலுக்கு மேலும், மற்றதை உடம்பிற்கு மேலும் போட்டுப் படுத்தான். அந்தத் தாள்கள் குளிரைத் தாங்கக் கூடியதாக இல்லை, அதனால்தான் தீவிலுள்ள ஜெயிலை அவன் காலத்திற்கேற்ற மகத்தான இடமாகக் கருதினான். நகரத்தை நம்பி வாழ்பவர்களுக்கு தர்மத்தின் பெயரால் நடத்தப்படும் விடுதிகளை மனதாரத் திட்டினான். தமர்த்தைவிடச் சட்டம் சிறந்தது என்ற கருத்தைக் கொண்டவன் அவன். நகரத்திலுள்ள பல்வேறு தர்ம ஸ்தாபனங்களிலிருந்து உதவிபெற்று சாதாரணமாக வாழமுடியும். ஆனால் சோபியைப் போன்ற தற்பெருமை உணர்ச்சியுடையவர்களுக்கு தருமத்தின் பெயரால் கிடைக்கும் உதவிகள் ஒரு பெரும் சுமை, வில்லங்கம்! பரோபகாரிகளின் கையிலிருந்து பெறும் ஒவ்வொரு உதவிக்கும் பிரதியுபகாரமாக பணத்தைக் கொடுக்காவிட்டால் அது நம் அந்தஸ்தைக் குறைத்து அவமானத்துக்குள்ளாக்கி; அதற்கு ஈடு செலுத்த வேண்டியதாகிவிடும். இன்னோரன்ன பிற காரணங்களால் சட்டத்தின் விருந்தாளியாக இருப்பதே நல்லதெனப் பட்டது.

சோபி தண்டனைக்கு ஆளாவது என்ற முடிவு செய்ததும் அதை நிறைவேற்றுவதில் ஈடுபடலானான். அதைச் செய்வதற்கு அநேக எளிய வகைகள் இருந்தன. மிக இன்பமான வழி என்னவென்றால் உயர்ந்த ரக உணவுச் சாலையில் ஊதாரித்தனமாக உண்டுவிட்டு 'இன்ஸால்வென்ஸி' பேர்வழி என்

னால் ஒருவித சந்தடியுமில்லாமல் போலீசிடம் ஒப்படைத்து விடுவார்கள். மற்றக் காரியங்களை நீதிபதி கவனித்துக்கொள்வார்.

இந்த முடிவுடன் இடத்தை விட்டெழுந்து சதுக்கத்தை விட்டு வெளியே வந்தான். தார் ரோட்டைக் கடந்து, கடைகள் நிறைந்த 'பிராட்வே'யுக்குநடக்கலானான். பிராட்வேயில் ஒளி விட்டு மின்னிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய உணவு விடுதியின் முன் நின்றான். திராட்சை, பட்டுப்புழு—மற்றும் பலவகை உயர்ந்த பொருள்களால் தயாரித்த உணவுப் பொருள்கள் குவிந்திருந்தன, அங்கே!

சோபிக்கு தன்னுடைய இடுப்பிற்கு மேலிருக்கும் ஆடையில் நம்பிக்கை இருந்தது. அது அவனை எளியவன் என்பதைக் காட்டிக் கொடுக்காது. சவரம் செய்த முகம், கிழிசலில்லாத தூய்மையான கோட்டு, தோத்திரக் காணிக்கைத் தினத்தன்று மாதா கோவிலில் கன்னியாஸ்திரி ஒருவளால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட கருப்பு 'டை'—இப்படி இருந்தான் சோபி. யாரும் சந்தேகப்படாத முறையில் மேஜை ஒன்றை அடைந்து விட்டானானால் வெற்றி அவனுடையதுதான். மேஜைக்கு மேல் தெரியக் கூடிய அவனுடைய ஆடைகள் காவலாளியின் மனதிலே ஐயத்தை எழச் செய்தது. பிறகு வறுத்தக் காட்டு வாத்து ஒன்று, ஒரு பாட்டில் 'சோபிலிஸ்' என்ற வெள்ளைச்சாராயம், 'கேம்பர்ட்' என்ற பாலாடைக் கட்டி, ஒரு டாலருக்கு ஒரு சிகரட்டு—இவ்வளவு போதும். இதற்காகக் கொடுக்க வேண்டிய பணமானது கடுமையானத் தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஹோட்டல் முதலாளியின் மனதில் உண்டாக்கும். அதே நேரத்தில் இந்த உணவு அவன் வயிற்றை நிரப்புவதோடல்லாது குளிர் காலத்துக்குத் தஞ்சம் புகச் செல்லும் சிறைக்குப் பயணம் செய்யும் பொழுது ஆனந்தமாக இருக்கவும் உதவும்.

ஆனால் சோபி ஹோட்டலின் வாசலில் காலை வைத்ததும் அவனுடைய நைந்து போன கால் சட்டையிலும், தேய்ந்து போன பூட்ஸிலும் தலைமைக் காவலாளியின் கவனம் விழுந்தது. வலிமையான இரு கரங்கள் அவனைப் பிடித்து ஹோட்

காலமும் பேச்சும்!

பேச்சாளர் ஒருவர் அதிக நேரம் பேசிக் கொண்டேயிருந்தார். நேரமாகிக் கொண்டே இருந்தது. அவர் பேச்சை நிறுத்தியபாடில்லை.

கூடியிருப்பவர்கள் அனைவரும் பொறுமை இழக்கும் கட்டம் வந்தது. சிலர் வேண்டுமென்றே இருமினார்கள்; தும்மினார்கள்!

பேச்சாளர் விஷயத்தைப் புரிந்து கொண்டார்.

"நான் அதிக நேரம் பேசி விட்டேன்போல் தெரிகிறது. என்னிடம் கடிகாரம் இல்லை. எதிர்த்தாற்போல் சுவற்றிலும் கடிகாரத்தைக் காணோம்!" என்றார் அவர்.

உடனே கூட்டத்தில் ஒருவர் எழுந்திருந்தார்; இப்படிச் சப்தம் போட்டார்: "அது சரி: உமக்குப் பின்னால் காலண்டர் மாட்டியிருக்கிறதே—நீர் அதைக் கூடப் பார்க்கவில்லையா?"

டலை விட்டு வெளியே போவதற்கு உண்டான வழியை அமைதியாகக் காட்டின. சோபி உடனே பிராட்வேயை விட்டுப்புறப்பட்டான். சிறைத் தண்டனையை அடைவதற்கு அவனுடைய வழி எளிதானதல்ல — என்பதைக் கண்டு கொண்டான். அந்த கிடங்குக்குள் புகுவதற்கு வேறு வழியைத்தான் கையாள வேண்டுமென்று எண்ணினான்.

ஆறுவது கடைத் தெருவின் ஒரு மூலையில் ஒரு கடையில் சில அணிகலன்கள் ஒரு கண்ணாடி பீரோவிற்குள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு, மின் விளக்கால் கவர்ச்சிகரமாக விளங்கின. சோபி ஒரு கல்லை எடுத்து, அந்தக் கண்ணாடியின் மேல் எறிந்தான். கண்ணாடி தூள் தூளாக நொறுங்கிற்று. அக்கம் பக்கத்திலுள்ளோர் ஓடி வந்தனர். எல்லோருக்கும் முன்பாக ஒரு போலீஸ்தான் ஓடிவந்தான். பைக்குள் கையை விட்டுக் கொண்டு சோபி அமைதியாகக் கோட்டிலுள்ள பித்தளைப் பித்தான்களைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருந்தான்.

"இதை உடைத்தவனெங்கே?" என்று ஆத்திரத்தோடு போலீஸ் கேட்டான்.

"என்னைப் பார்த்தால் நான்தான் உடைத்தவனென்று தெரியவில்லையா?" — என்று கேட்டான். இதைக் கேலியான தொனியில் அவன் கூறவில்லை. நல்ல ஒரு 'அதிர்ஷ்டத்தை' வரவேற்பவனைபபோல் மகிழ்ச்சியுடன் கூறினான்.

போலீஸ் அவன் வார்த்தையை நம்பவில்லை. ஜன்னலை உடைத்தவன் சட்டத்தின் சொந்தக்காரனுடன் சமரசம் பேசமாட்டான். குதிகால் பிடரியில் பட ஓடியிருப்பான் என்று நினைக்கலானான். ஒருவன் சற்று தூரத்தில் ஒரு பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓடிக் கொண்டிருந்தான். அவன் தான் குற்றவாளி என்று அவனைத் துரத்திச் சென்றுவிட்டான் அந்தப் போலீஸ். இரண்டாம் முறையும் வெற்றி பெறாத சோபி மனமுடைந்து நடக்கலானான்.

எதிர்ப் பக்கத்தில் ஒரு சிறு ஹோட்டல் இருந்தது. அந்த ஹோட்டலில் குறைந்த விலைக்கு அதிகச் சரக்கை வாங்கலாம். அங்குள்ள உணவுப் பொருள்கள் மட்டரகமானவை. இந்த ஹோட்டலுக்குள் எவராலும் தடுத்து நிறுத்தப்படாமல் கிழிந்த ஆடையுடனும் தேய்ந்துபோன பூட்சுடனும் சென்றான். ஒரு மேஜையின் முன் உட்கார்ந்தான். மாட்டிறைச்சி, பயறு, மற்றும் அவன் விரும்பியதெல்லாம் சாப்பிட்டான். சாப்பிட்ட பிறகு பணமும் அவனும் அன்னியர்கள் என்று கூறிவிட்டு;

"உடனே போலிசைக் கூப்பிடுங்கள். ஒரு பெரிய மனிதனை அதிக நேரம் காக்க வைக்காதீர்கள்" என்றான்.

"உனக்கெல்லாம் போலீசா?" என்று கூறிவிட்டு அந்த ஹோட்டல்காரன் இரண்டு ஆட்களைக் கூப்பிட்டான். அவர்கள் சோபியைத் தூக்கி, அவன் 'உடலைப்பிடித்து விட்டு' துணிமணிகளிலுள்ள தூசிகளைத் 'தட்டிவிட்டனர்'! இரண்டு கடைகளுக்கு அப்பால் ஒரு போலீஸ் இதைப் பார்த்துச் சிரித்துவிட்டு அவன் வழியே நடக்கலானான். கைதியாவது என்பது வெறும் கனவாகிவிட்டது சோபிக்கு.

சோபி மீண்டும் நடக்கலானான். மனதை தைரியப்படுத்திக் கொண்டான். இந்தத் தடவை அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அழகும் அடக்கமுமுள்ள இளம் பெண் ஒருத்தி ஒரு கடையின் முன் நின்று கொண்டு அங்குள்ள பொருள்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து இரண்டு கெஜத் தூரத்தில் ஆஜானுபாகுவான பயங்கரத் தோற்றமுடைய ஓர் போலீஸ் நின்று கொண்டிருந்தான்.

சோபி ஒரு'காவாலிப் பயலை'ப் போல் வெறுக்கத்தக்க முறையில் அவளிடம் நடக்கத் தீர்மானித்தான். அவன் குறிவைத்தவளின் எடுப்பானத் தோற்றமும் அண்மையிலுள்ள போலீசும், அவன் எண்ணத்தை ஊக்குவித்தன. கண்டிப்பாகத் தான் அந்த போலீசால் பிடிபடுவோம் என்றும், அதனால் குளிர் காலத்து உறைவிடத்தை 'இன்ஷியூர்' செய்யமுடியுமென்றும் எண்ணலானான். 'டையை' செம்மை செய்து; சட்டையை இழுத்து விட்டு, தொப்பியை சரி செய்து கொண்டபின் அந்தப் பெண்ணை நோக்கி மெதுவாக நடக்கலானான். அவன் அவளைப் பார்த்தான். இருமினான், தும்மினான். ரௌடிகளுக்கே உரித்தான ஆபாச நடையுடன் அவளை நோக்கிச் சென்றான். அவ்வாறு நடக்கும் பொழுதே ஓரக் கண்ணால் தன்னை அந்தப் போலீஸ் கவனிக்கிறானா?-என்பதையும்பார்த்துக் கொண்டான். அந்தப் பெண் சற்று நடந்து சென்று வேறு ஒரு பொருளைப்பார்த்துக் கொண்டிருந்தாள். சோபி தைரியமாகப் பின் தொடர்ந்து

விசித்திரம்!

தென் அமெரிக்காவில் சில பூர்வகுடிகள் விசித்திரமான வழிகளைக் கையாளுகிறார்கள்.

அமேசான் பகுதியிலுள்ள 'கராயா இந்தியர்கள்' உதடுகளை அசைக்காமல், மூக்கால் பேசுகிறார்கள்! நாக்கு வாய்க்குள் அசையும்; சப்தம் மூக்கு வழியாக வெளி வரும்! அது மட்டுமின்றி அங்கு ஆண்கள் ஒரு மொழியும், பெண்கள் வேறு ஒரு மொழியும் பேசுகிறார்கள்!

பெரு பகுதியில் உள்ள 'கேம்பா இந்தியர்கள்' தலை கீழாக எந்தப் பொருள்களையும் பார்ப்பதற்குத் தங்கள் கண்களைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்! நாம் அவர்களிடம் ஏதாவதொரு படத்தைக் கொடுத்தால் அதை அவர்கள் தலை கீழாகத் தான் பார்ப்பார்கள்!

சேன் இந்தியர்கள் என்பவர்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிப்பதில்லை. அதற்குப் பதில் சோளத்தில் ஒருவித 'பீர்' தயாரித்துச் சாப்பிடுகிறார்கள்!

சென்று தொப்பியைக் கழற்றிக் கொண்டு;

"என் கண்ணே! என்னுடன் கொஞ்சிக்குலவ வருகிருயா?" என்ருன்.

அந்தப் போலீஸ் இதைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். அவள் சோபிக்கு போலீஸ் நிற்பதை சைகையால் தெரிவித்தாள். அவள் காட்டும் சைகை அவனுக்கு சொர்க்கத்துக்கு வழிகாட்டுவதாகவே பட்டது. அதற்குள்ளாகவே அவன் 'லாக்கப்'பில் இருப்பது போலவும், அந்த அறை கதகதப்பாக இருப்பதாகவும் கற்பனை செய்து விட்டான். அவன் கோட்டைப் பிடித்துக் கொண்டு அவள்;

"கண்ணுளா? உண்மையாக என்னை இன்பக் கடலில் தள்ளப் போகிருயா?" என்று மகிழ்ச்சி நிறைந்த குரலில் கூறிவிட்டு மெதுவாக,

"நம்மை அந்தப் போலீஸ் பார்க்கிருன். நாம் வேறிடம் செல்வோம்"; என்று கூறி அவனை இழுத்துக் கொண்டு ஓடிஞள். அந்தப்போலீஸ் இவர்களைக் கவனித்தும் அவனைக் கைது செய்யவில்லை. துக்கம் தோய்ந்த முகத்துடன் போலீசைப் பார்த்துக் கொண்டே சென்ருன். அந்தத் தெருவின் கோடிக்குக் சென்றவுடன் அவனை உதறித் தள்ளிவிட்டு ஓடிவிட்டான்.

இரவைப் பகலாக்கும் விளக்கு ஒளியில் ஆண்களும் பெண்களும் குளிர்கால கம்பளிஉடையணிந்து; குடித்துவிட்டு ஆனந்தமாக ஆடிக்கொண்டிருக்கும் ஒரு பகுதிக்கு வந்தான். அங்கே நின்ருன். ஒரு போலீஸ் ஹோட்டல் ஒன்றிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் சோபிக்கு ஒரு யோசனை ஓடியது. அவன் முன்னுல் குடிகாரன்போல் நடித்தால் பிடித்துக் கொள்வான் என்று எண்ணிஞன். உடனே தன்னுடைய கனத்தத் தொண்டையில் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் கொச்சைமொழிபேசிக்கொண்டும் நடக்கலாஞன்.

அந்தப் போலீஸ் கையிலுள்ள பிரம்பை வேகமாகச் சுழற்றிக் கொண்டு சோபி பக்கம் திரும்பிஞன். பிறகு அருகிலிருந்த ஒருவனிடம்;

"இன்று இளைஞர்களுக்கான ஓர் விழா நாள். அதில் ஒரு பகுதியே இது. இது வெறும் சப்தம்தான். இதனுல் தீங்கு ஒன்றும் இல்லை. அவர்களை விட்டு விடும்படி எங்களுக்கு உத்தரவு வந்துள்ளது"— என்று கூறி விட்டு தன் வழியே நடக்கலாஞன்.

இந்த முயற்சியிலும் தோல்வி கண்ட சோபி மிகவும் மனம் ஒடிந்து போஞன். ஒரு போலீசும் அவன் மேல் கை வைக்க மாட்டாஞ—என்று ஏங்கலாஞன். சிறைக்குப் போவதென்பது அடையமுடியாத ஓர் லட்சியமாகவே அவனுக்குத் தோன்றியது.

ஒரு சிகரெட் கடையில் நன்ருக உடையணிந்த ஒருவன் சிகரெட் ஒன்றை பற்றவைத்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் ஒரு பட்டுக்குடை இருந்தது. சோபி அந்தக் குடையை எடுத்துக் கொண்டு பதட்டமில்லாமல் மெதுவாக நடக்கலாஞன். அந்த மனிதன் இவனை வேகமாகப் பின்தொடர்ந்தான்.

"என்னுடைய குடை இது" என்று உறுதியுடனும் கோபத்துடனும் கூறிஞன்.

"ஓ! இது உன்னுடையதா?" என்று நக்கலாகக் கூறிவிட்டு சரி நீ ஏன் ஒரு போலீசைக்கூப்பிடக் கூடாது?" அதோ அந்த மூலையில் ஒருத்தன் நிற்கிறான்; கூப்பிடு" என்றான்.

அந்தக் குடைக்கு உரியவன் நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டான். மீண்டும் நல்வாய்ப்பு அவனுக்கு எதிராகத்தான் இருக்கும் போலிருக்கிறது என்ற எண்ணத்துடன் சோபியும் மெதுவாக நடக்கலானான்.

"அது சரி! உங்களுக்குத்தெரியும் இப்படிப் பட்டத் தவறுகள் எப்படி நடக்கின்றன என்று. இது உங்களுடைய குடையானால் என்னை மன்னித்து விடுங்கள். இன்று காலையில் ஒரு ஹோட்டலில் இதைத் திருடினேன். உங்களுடைய குடைதான் இது என்று அடையாளம் கண்டு கொண்டால் வைத்துக் கொள்ளுங்கள். என்றான் அவன்.

"ஆமாம் அது என்னுடையதுதான்" என்றான் சோபி. மாஜிக் குடைக்காரன் 'வாபஸாக' விட்டான். சோபி கிழக்கு முகமாக நடக்கலானான். குடையைசோபி கோபத்துடன் ஒரு குழியில் சுழற்றி எறிந்தான். அவன் கைதியாக வேண்டுமென்று முயன்றான். ஆனால் போலீஸ்காரர்கள் அவனை ஒரு தீங்கும் செய்யாத அரசன் என்று எண்ணிக் கொண்டார்கள். அவன் போலீஸ்காரர்களை மனம் குளிரத் திட்டினான், தன்னைக் கைதியாக்காததற்காக.

இறுதியாக சோபி சந்தடியும் வெளிச்சமும் குறைவான ஒரு கடைத் தெருவிற்கு வந்தான். தலையைத் தொங்க விட்டுக் கொண்டு நடக்கலானான். ஒரு மூலையில் பழைய நூதனமான மாதா கோயில் ஒன்றிருந்தது. 'வயலட்' நிறமுள்ள ஜன்னல் ஒன்றிலிருந்து கண்ணுக்கினிய ஒளி தென்பட்டது. கோயில் இசைக் கருவியை வாசிப்பவன் ஒருவன் ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டிற்கான பாடல் ஒன்றை ஒத்திகைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இன்னிசையின் அலைகள் அவனை மெய்

சுயநலவாதி!

இங்கிலாந்தை ஆண்ட முதலாம் ஜார்ஜ் பச்சை சுயநலவாதி; தன் மகனுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமே என்று கனவிலும் கருதாதவர்!

எப்படியென்று கேட்கிறீர்களா? அவர் நீண்ட நாட்கள் ஆண்டு வந்தார். பேரப்பிள்ளைகள் பிறக்கிற வரையில் உயிர் வாழ்ந்தார்! அவருக்கு முன்பு 343 ஆண்டுகளில் எவரும் அவரைப் போல அவ்வளவு காலம் உயிர் வாழ்ந்ததில்லை!

மறக்கச் செய்தன. அங்கேயே கோயிலைச் சுற்றிப் போடப் பட்டுள்ள கம்பி வேலியின் அருகிலேயே நின்றுவிட்டான்.

பூர்ணச் சந்திரன் வானத்தின் உச்சியில் அழகான ஒளிப் பிழம்பாக பவனிவந்து கொண் டிருந்தது. சாலையில் ஆள் நடமாட்டமும் வண்டிகளும் குறைந்துவிட்டன. தூக்கத் தில் குருவிகள் கூட்டில் முண கிக் கொண்டிருந்தன. நாட்டுப் புறத்தில் இருக்கும் மாதா கோயிலைப் போல அந்த நேரத் தில் அது காட்சியளித்தது!

அந்த இசை அவனுக்கு மிக வும் பழக்கப்பட்ட இசை. சிறுவனாய் இருந்து எதிர் காலத்தைப் பற்றிய ஆசைக் கனவுகள், மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டு வாழ்ந்த காலத்தில் அவனுக்கு இந்தப் பாட்டு மிகவும் பிடித்தமானது. அவனுடைய இளமைக் கால நினைவும் மாதாக் கோயிலும் அவன் மனதில் ஒரு புத்துணர்ச் சியை உண்டாக்கிவிட்டது. பயனற்ற நாட்கள், பயனற்ற ஆசைகள், உயிரற்ற நம்பிக்கை கள், கெட்ட எண்ணங்கள்— ஆகியவைகளால் நிறைந்த பயங்கர குழியில் இதுநாள் வரை உழன்றதை அவன் முதன் முதலாக உணர்ந்தான்.

ஒரு விநாடியில் அவன் உள் ளம் அந்தப் புத்துணர்ச்சியில் ஈடுபட்டது. இந்தப் புத்து ணர்ச்சி அவனுக்கு மனசாட்சி யுடன் போராடக் கூடிய வலுவை அளித்தது.

"சகதியிலிருந்து நான் மீள வேண்டும். மீண்டும் நான் மனிதனாக வேண்டும். என்னைப் பிடித்தாட்டும் தீய எண்ணங்களை வெல்ல வேண் டும். அதற்கு இதுதான் தக்கத் தருணம். நான் இன்னமும் இளைஞன்தான். என்னுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். நாளைக்கு நான் நகரத்திற்குச் சென்று வேலை தேடவேண்டும். முன்பு ஒரு ஆட்டு ரோமக் கடைக்காரன் வண்டி ஓட்டும் வேலை தருவதா கக் கூறினான். அவனைத் தேடிப் பிடித்து வேலை கேட்க வேண் டும். இந்த உலகில் நான் ஒரு மனிதனாக இருக்க வேண்டும். கண்டிப்பாக நான் மனிதனாக இருக்க வேண்டும்" — என்ற எண்ணத்தை, புரட்சியை அவன் உள்ளத்தில் உண்டாக் கியது அந்த இனிய அமைதி யானது இசை. 'எப்படியாவது திருந்த வேண்டும்; உழைக்க வேண்டும்; சாப்பிட வேண் டும்' — என்கிற நிலைமையிலே இருந்தான் அவன்!

அவன் கையில் அன்னியர் கை ஒன்று படுவதை உணர்ந்து திரும்பினான். அவ்வாறு திரும் பியவன் ஒரு போலீசின் முரட்டு முகத்தைக் கண்டான்.

"இங்கேஎன்ன செய்கிறாய்?" —போலீஸ் கேட்டான்.

"ஒன்றுமில்லை"—சோபி பதி லுரைத்தான்.

"அப்படியா? வா என்னு டன்" — என்று அழைத்துச் சென்றான்.

அந்த மாதா கோவிலில் சில வாரங்களாக மெழுகுவர்த்தி கள் காணாமல் போய்க்கொண் டிருக்கின்றனவாம். அதற்கா கத்தான் சந்தேகப்பட்டுக் கொண்டு அவனைக் கைது செய் தார்கள்!

மறுநாள் நீதிமன்றத்தில் நீதி பதி கீழ்க்கண்டவாறு கூறினார்.

"மூன்றுமாதம் கடுங்காவல் தண்டனை சோபிக்கு." ஃ

புகழேந்திகள் :

இலக்கியக் கோபுரத்தின் கலசம்

'உடுமலையான்'

"எதற்குமே, பயன்படாத உதவாக்கரைப் பயலாகி விடுவான்" என்றார்கள் பெற்றவர்களும் உற்றவர்களும்.

"இந்த வயதில் இப்படிச் சீட்டாடுவதும் ஊர் சுற்றுவதுமாக இருந்த இவனா விளங்கப் போகிறான்" என்று சிலர் முன் கூட்டியே மறைமுக சாபமிட்டனர்.

"அந்தத் துஷ்டனுடைய சகவாசமே கூடாது" என்று மற்ற இளைஞர்களும் தூர விலகி ஓடினர்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற முதுமொழியைப் பொய்ப்பிப்பது போல, முளையில் எல்லோராலும் வெறுக்கப்பட்ட பயிர் நன்றாக விளைந்தது. விளைந்த பிறகு உலகத்தின் கவனத்தையே ஈர்த்தது. விலகி ஓடிய சமூகம் விரும்பிப் பணிந்தது.

பிறந்தது முதல் இறக்கும் வரை, மற்ற உலகமேதைகளுக்கு இருந்தது போலவே வாழ்க்கையே போராட்ட மயமாக இருந்தது. வாழ்க்கையில் எத்தனையோ திருப்பங்கள், அதிர்ச்சிகள், கனவுகளைச் சந்தித்து பின் அமைதி பெற்றார்; நிரந்தர அமைதியை சாவின் 'சந்நிதி'யில் அடையும்வரை, அணையாத விளக்காக ஒளி பரப்பி, அணைந்த பிறகும் உலகத்திற்குத் தன் அனுபவங்களை பெருங் கதைகள் மூலமாகத் தந்துவிட்டுப் போன லியோ டால்ஸ்டாயை இலக்கியம் உள்

★ திருமணத்திற்கு முன் அந்த வாலிபன் தன் காதலியிடம் தனது காமச் சேட்டைகள் அடங்கிய 'டைரி' யைக் கொடுத்தான்!

★ காதலியும் படித்தாள்; இருந்தாலும் திருமணம் தடைபடவில்லை—இதுதான் பெண்மனம் போலும்!

ளளவும் உலகம் மறக்க முடியாது.

1828-ல் யஸ்னயா போல்யானு என்ற இடத்தில் பெரும் நிலப்பிரபுவான கவுண்ட் டால்ஸ்டாய்க்கு மகனுகப் பிறந்தும் கூட, இவர் மேற்கொண்ட சூதாட்டத்தில் ஏற்பட்ட கடன் தொல்லை இவரை வாட்டிற்று. பார்க்கும் இடங்களிலெல்லாம் கடன்காரர்களுடையவிசாரணை மயமாக இருந்தது. கடன் கொடுத்தவர்களின் 'கெடுபிடி' பொறுக்க முடியாமல், மாஸ்கோவைவிட்டு ஓடி, காகஸஸ் போர் முனையில், 'டார்டர்' கொரில்லாக்களோடு போர் புரியும் ஒரு படையில் சேர்ந்து கொண்டார். இந்தச் சூழ்நிலைகளின் படப்பிடிப்பாகத்தான், ஐம்பது வருஷங்களுக்குப்பிறகு இவர் எழுதிய 'காஸக்குகள்' என்ற நாவல் விளங்கிற்று.

1853–ல் கிரீமியா யுத்தம் ஆரம்பமானதும் முன்னணிப் போர்ப்படைக்கு டால்ஸ்டாய் மாற்றப்பட்டார். ஆபத்துக்களை எதிர் நோக்கி சமாளிப்பதில் அலாதி ஆர்வம் கொண்ட டால்ஸ்டாய்க்கு இந்த வேலை மிகவும் பிடித்திருந்தது. இந்தப் போர்வீர வாழ்க்கையை வைத்து பின்னுல் எழுதிய சிறு கதைகளில் ரஷ்யத் துருப்புகளின் வீரத்தையும், மேலிடத் தலைவர்களின் இரக்கமற்ற முட்டாள் தனத்தையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டினுர் டால்ஸ்டாய். இப்படி நாலரை வருஷகாலம் வாழ்க்கை நடத்தி விட்டு, நிறைந்த அனுபவத்தோடு இன்பகரமான வாழ்க்கையின்வாயிலில் அடியெடுத்து வைத்தார். பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளிலெல்லாம் சுற்றிப் பார்த்தும் அவர் தேடிய அமைதியான இன்பம் கிட்டவில்லை. பிறந்த இடமான யாஸ்யானு போலியானு பகுதியில் தான் அந்த இன்பத்தைக் கண்டார். பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தன என்று சும்மாவா சொன்னுர்கள்?

இப்போது போல்யானுவில் டால்ஸ்டாய்தான் 'ஏகச் சக்கராதிபதி'. புதுரகமான பிரபுவைப்போல் காலங்கடத்தினுர். பொறுப்பும், அப்பாவித் தனமும் நிறைந்த கிராமவாசிகளின் ஆசாபாசங்களில் தானும் பங்கு கொண்டு, அவர்களின் ஏழ்மைக்கும் மதிப்பளித்து, அலட்சியப்படுத்தாமல் பணிவான வாழ்க்கையில் டால்ஸ்டாய் இன்பம் கண்டார். அந்தக் குடியானவர்கள்து குழந்தைகளின் கல்வி வசதிக்காக ஒரு இலவசப் பள்ளிக்கூடம் துவக்கினுர். நன்

கொடைகளைத் தாராளமாக வழங்கினார். அவருடைய கொள்கைகளும் கோட்பாடுகளும், ஆசைகளும் கனவுகளும் தனிமையும் பழக்க வழக்கங்களும் அவருடைய நடவடிக்கைகளுக்கு உயிரூட்டமாக அமைந்தன.

இந்தச் சமயத்தில் ஒரு டாக்டருடைய வீட்டிற்கு டால்ஸ்டாய் அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தார். டாக்டரின் மூன்று பெண்களிலே, இரண்டாவது பெண்ணின் மேல் லியோவுக்கு 'ஒரு கண்' இருந்தது. இந்தக் குடும்பத்தைத்தான், 'போரும் சமாதானமும்' என்ற தன் நாவலில் ரோஸ்டோவ் குடும்பத்தினராகச் சித்தரித்திருக்கிறார், அவர். முப்பத்திநான்காவது வயதில் இந்த மேதை ஒரு நாள், இரண்டாவது பெண்ணான சோன்யாவிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். அழகு அறிவைத்தான் நாடும் என்பதுபோல் அவளும் உடனே ஏற்றுக்கொண்டாள். பதினெட்டு வயதிய சோன்யாவுக்கு இல்லறத்தில் இருக்கும் சுகதுக்கங்களோ, சிக்கல்களோ தெரியாது. சுய சந்தேகத்தால் புழுமனதாய்த் தவித்துக் கொண்டிருந்த டால்ஸ்டாய், தன் இறந்தகால 'லீலை'களைப்பற்றி மனைவியாக வாய்த்தவளுக்கு தெரியப்படுத்தவேண்டியது கடமை என்று எண்ணி தன் கடந்தகால களியாட்டங்கள் வரிசையாக; தேதி வாரியாக எழுதி வைக்கப்பட்டிருந்த 'டைரி'யை அவளிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

அந்தப் பருவமங்கை படித்துப் பார்த்ததும் பெரும் அதிர்ச்சியடைந்தாள். அதிர்ச்சி உறுதியான காதலாக உரு

சூரப்புலி!

"நேற்று உனக்கும் உன் மனைவிக்கும் நடந்த சண்டையில் யார் தோற்றது?"

"என் மனைவிதான்! அவள் தான் என்னிடம் மண்டியிட்டு வந்தாள்!"

"அப்படியா? வந்து என்ன சொன்னாள்?"

"கோழையே; கட்டிலுக்குக் கீழேயிருந்து மேலேயிருந்து வா—என்று என்னைப் பார்த்துக் கத்தினாள்!"

வெடுத்து இருவரையும் பிணைத்தது. தன் கணவன் செய்த நடவடிக்கைகளை அந்தப் பைங்கிளி மன்னித்து விட்டாளா, அல்லது மறந்து விட்டாளா என்பது தெரியாத புதிராகவே போய் விட்டது. இதுதான் பெண்மனம் என்பது போலும்!

இந்தப் பிணைப்பு—பரஸ்பரம் காதலும் போராட்டமும் நிறைந்த இல்லற வாழ்க்கை தொடர்ந்து நாற்பத்து எட்டு ஆண்டுகள் நீடித்தது.

சோன்யா, எந்தப் பிரச்சினையையும் பிரத்தியட்சக் கோணத்தில் நின்று கவனித்து முடிவு கட்டுபவள். லியோவோ இதற்கு நேர்மாறாக, 'பட்டப்பகலினிலே பாவலர்க்குத் தோன்றும் நெட்டைக் கனவுகளிலே' ஆழ்ந்து காலங்கழிப்பவர். நகர வாழ்க்கையின் பலதரப்பட்ட வசிகரங்களில் மனதை அலைக்கழிக்க விட்ட சோன்யா, தனது கிராமப்புறத்து வீட்டையே அடியோடு மறந்து விட்டாள். தன் கணவன் ஈடுபாடு கொண்டிருந்த 'பாவ' காரியங்களை நினைத்த போதெல்லாம் சோன்யாவுக்கு 'என்னமோ மாதிரி' தான் இருந்தது. இருந்தாலும்

மனைவி என்ற உன்னதமான இடத்திற்கு இலக்கணமாகவே நடந்து கொண்டாள். டால்ஸ்டாயோடு வாழ்ந்து பதிமூன்று குழந்தைகளுக்குத் தாயாகி, கணவனுடைய சகல காரியங்களையும் திறம்பட நிர்வகித்து வந்தாள். கணவன் செய்த இலக்கியப் படைப்புகளுக்கும் தன் சக்திக்கியன்ற வரை உதவியும் வந்தாள்; டால்ஸ்டாயின் பெரும் நாவலான 'போரும் சமாதானமும்' என்ற புத்தகத்தை ஏழு தடவைகள் திருத்தித் தன் கையாலேயே நல்ல முறையில் எழுதியும் கொடுத்தாள்.

லியோ இந்தப் பெரும்நாவலை எழுதிமுடிப்பதற்கு ஏழு ஆண்டுகள் பிடித்தன. *1812*-ல் ரஷ்யா மீது நெப்போலியன் படையெடுத்ததை பின்னணியாகத் தீட்டி, அழியாத புகழ்பெற்றார். அந்தக் கதையில வரும் சுமார் ஐநூறு பாத்திரங்களின் தனிக் குணம்சங்களையெல்லாம் அந்தப் போர் பாதித்த விதத்தையும் அருமையாகச் சித்தரித்திருக்கிறார். அந்த நாவலில் வர்ணிக்கப்பட்டிருக்கும்கொலைக்களக்காட்சிகள், படை வரிசைகளின் முன்னேற்றத்தின் படப்பிடிப்புகள், அவர்கள் காட்டிய வீரம், மாஸ்கோ நகரம் வெந்தழலுக்கு இரையான விவரம், பிரெஞ்சுப் படையினர் பின் வாங்கிய வரலாறு—ஆகியவை எல்லாம் மிக அருமையாக, 'போரும் சமாதானமும்' என்ற நாவலில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார், அவர்! வாசகர்கள் போர்க்களத்திலேயே நின்று பார்ப்பது போன்ற உணர்வு தோன்றும் விதமாகவார்த்தைகளில் வார்த்துத் தந்துவிட்டுப்போன எழுத்தாளன் டால்ஸ்டாயைப்போல் அதற்கு முன்னும் இருந்ததில்லை, பின்னும் பிறக்கவுமில்லை. இந்தக் காட்சிகளின் இடையிலே இழையோடவிட்டிருக்கும் நெஞ்சுருக்கும் கதையின் அமைப்பும் போக்கும், காலத்தால் சாகாதது, காலத்தின் ஏலத்தால் அழியாதது மாகும். கதாநாயகி நடாஷாவை எந்த இலக்கிய ரசிகனும் லேசில் மறந்துவிட முடியாது. இதுவுமல்லாமல் அன்னுகரீனு என்ற வேறொரு புகழ்பெற்றநாவலில் கிராமாந்திர எளிமையான திருமண வாழ்க்கையையும், நகர நாகரிகத்தின் நெறிகெட்ட வாழ்வின் விளைவுகளையும் ஒப்புமைப் படுத்தி, பாத்திர அமைப்பை சிருஷ்டித்து கதை தீட்டிய அழகு, படித்துப் படித்து இன்புற்று சிந்திக்கத் தக்கதாகும்,

தன் வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு தோல்விகளுக்காகவும் மனம் புழுங்கும் பண்பு இவரிடம் இருந்தது. அதைவிட மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தும் குணம் வெகு அதிகமாகவே இருந்தது. ஜார் காலத்திய ரஷ்யாவைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. 'இம்' என்றால் சிறைவாசம், 'ஏன்' என்றால் சைபீரியா பாலைவனம் என்றிருந்த காலமது. மற்றவர்களின் உரிமைக்காகக் குரலெழுப்பி, அதனால் ஏற்படும் எவ்விதத் துன்பங்களையும் தாங்கிக் கொள்ள டால்ஸ்டாய் தயாரானார். பேச்சுரிமைக்காகப் போராடினார். "சர்க்காரைக் குறை கூறுவது 'அரசியல் குற்றம்' என்றால் அதைவிடப் பைத்தியகாரத்தனம் வேறொன்றுமில்லை. குறைகூற முன் வருவதே, மக்களிடம் விழிப்பும் போறப்

புணர்ச்சியும் எழுகிறது என்ற நல்ல ஆரோக்கியமான அறிகுறி தான்"-என்பது டால்ஸ்டாயின் பொன்மொழிகள். இந்தப் பொன்மொழிகள், இந்தக் காலத்திய சர்க்கார்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டிய விஷயம். மக்களின் நியாயமான குறைகளை நாகரிகமாக எடுத்துச் சொன்னாலும் குற்றம் கூறுபவர்கள் மீது தேவையற்ற பொருந்தாத மாசு கற்பித்து மகிழுகிற இக்காலத்திய சர்க்கார்களின் அரசியல் அநாகரிகத்தை என்னென்பது?

தென்னகத்தில் பகுத்தறிவு இயக்க நாடகங்களுக்கும், ஏடுகளுக்கும், சினிமா வசனங்களுக்கும் தடை விதிப்பது போலவேதான், அந்தக் காலத்திலும் டால்ஸ்டாயின் புதுமைக் கருத்துக்கள் கொண்ட நாடகங்களுக்கும், கதைகளுக்கும் ஆட்சியாளர்கள் தடை விதித்துப்பார்த்தார்கள். ஆனால் மக்களின் புதுமை வேட்கைக்கும், உரிமை எழுச்சிக்கும் தடை விதித்துத் தடுக்க எந்த சக்தியாலும் முடியாது என்பதை காலம் நிரூபித்துக் கொண்டுதான் வருகிறது. டால்ஸ்டாய் இந்தச் சமயங்களில் எழுதிய புதுமைக் கருத்துகள் சகல ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டன. ஆயிரக் கணக்கான ரஷ்யர்கள் தங்கள் கையாலேயே அவற்றை எழுதி ரகசியமாக விநியோகிக்கவும் செய்தார்கள்.

குடிக்கும் தண்ணீருக்கும் சுவாசிக்கும் காற்றுக்கும் தவிர மற்றை எல்லாவற்றிற்கும் இந்தக் காலத்தில் வரி விதிக்கிறார்கள். பெரும் நிலப்பிரபுக்களையும் ஆலை அரசர்களையும் பாதிக்காத விதத்தில் தான் சர்க்கார்கள் நடந்து கொள்கின்றனவே தவிர, வேறு இல்லை. இதே நிலைமைதான் ரஷ்யாவிலும் அந்தக் காலத்தில்

அவரது பெருமை!

மான்சிங் ஜெய்பூர் மகாராஜாவாக இருந்தவன். அக்பருக்கு மிகவும் பிடித்தமானவன். அக்பரது சைன்யத்திற்குத் தளகர்த்தனாகவும் இருந்திருக்கிறான்.

ஆனால் மான்சிங்குடைய சிறப்பு இதிலெல்லாம் இல்லை. நீங்கள் திகைப்படைய வேண்டுமென்றால் கீழ்க்கண்ட தகவலைப் படியுங்கள் :

மான்சிங் *1500* மனைவிகளைத் திருமணம் செய்து கொண்டான்.

அவனுக்கு மொத்தம் *4,500* குழந்தைகள் உண்டு!

நல்ல வேளை! ஜனநெருக்கடி மிகுந்திருக்கும் இந்த நாட்களில் மான்சிங் இல்லையே என்று மகிழ்ச்சியடைவோமாக!

இருந்தது. பெரும் நிலப் பிரபுக்கள் 'தலைகால் தெரியாமல்' ஆர்பாட்டம் செய்ததைக் கண்ட டால்ஸ்டாய், நிலவரி என்ற ஒரு வரியை மட்டுமே விதிக்க வேண்டுமென்று யோசனை கூறினார். அந்த வரி விதித்தால், நிலப் பிரபுக்கள், நிலங்களைப் பிரித்து நிலமில்லாதவர்களுக்கு விற்க ஆரம்பிப்பார்கள். நில முடக்கம் ஓரளவு தீரும் என்றும் டால்ஸ்டாய் நினைத்தார். இந்த யோசனையைக் கேட்டு ஜார் அரசாங்கம் சினந்தெழுந்தது.

மதங்கள் கற்பிக்கும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தாகத்தில் சில காலம் டால்ஸ்டாய் முயன்றார். மாதா கோவிலுக்குப் போய்ப் பார்த்தார். கொழுந்துவிட்டெரியும் மெழுகு வர்த்திகளைப் பார்ப்பதிலோ, மந்திரங்கள் ஜெபிப்பதைக் கேட்பதிலோ, ஆலய மணி ஒலிப்பதிலோ, பூசாரிகளின் மௌனத்திலோ கடவுள் இல்லை என்பதை உணர்ந்தார். பூஜாரிகளின் கம்பீரத் தோற்றத்திற்கும் மர்மமான மௌனத்திற்கும் பின்னணியில் அநாகரிகமும் அறியாமையுமே புதைந்து கிடப்பதாக உணர்ந்தார். 'கடவுளின் சாம்ராஜ்யம் நம்முள்ளேயே பரவிக் கிடக்கிறது. அன்பும் அறிவும் தான் உண்மையான கடவுள் உணர்வு'—என்ற பேருண்மையை விண்ணதிர முழக்கினார் டால்ஸ்டாய்.

கிறிஸ்து போதித்துச் சென்ற பொன் மொழிகளை வரிக்கு வரி பின்பற்றுவதுதான் தன் கடமை என்பதை உணர்ந்து, அவ்வாறே செயல்பட்டார். உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் இந்த மேதையைக் கண்டு போதனை பெற, மக்கட் கூட்டம் புறப்பட்டது. அதில் மகாத்மா காந்தியும் இருந்தார். டால்ஸ்டாயிடமிருந்தும் அவரது போதனைகளிலிருந்தும், அகிம்சை, சத்தியம் ஆகியவற்றின் தார்மீக வலிவை மகாத்மா நன்குணர்ந்து கொண்டார். நாளாக, நாளாக வாழ்வின் இன்பங்களிலேயே ஆசை இல்லாமல், எதையுமே கவனிக்காமல் டால்ஸ்டாய் காலங் கடத்தினார். இவர் எவ்வளவுக் கெவ்வளவு 'பற்றற்ற' தன்மையில் இருந்தாரோ, அவ்வளவுக் கவ்வளவு சோன்யா உலக பந்தங்களின்பால் சென்று கொண்டிருந்தாள். தன் ஆண் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைப்பதும், பெண்களை சமூக அந்தஸ்து உடையவர்களாகச் செய்ய வேண்டும் என்பதும், கணவனுடைய காரியங்களை சரிவர கவனிக்க வேண்டும் என்பதிலும் சோன்யா வெகு அக்கறை காட்டினாள்.

எங்கும் எதிலும் எளிமையையே நாடிச் சென்ற இவரது உள்ளம் தனக்கென எவ்வித சொத்தும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணியது. நிலங்களையெல்லாம் குடும்பத்தில் உள்ளவர்கள்மீது எழுதி வைத்துவிட்டு, எழுத்துரிமைகளை பெருந் தொகைக்கு விற்று பொதுக்காரியங்களுக்கு பணத்தைத் 'தானம்' கொடுத்து விட்டார். ஒன்றும் தனக்கென இல்லாத நிலையில், முதிர்ந்த வயதில் செருப்புத் தைத்து அதில்வரும் கூலியைக்கொண்டு வாழ்க்கை நடத்தினார். இதைக் கண்ட சோன்யா கண்ணீர்விட்டுக் கதறினாள். கண்டித்தாள். கணவனது போக்கைக் கண்டு வெகுண்டாள். இல்லறத்தில்

★★★

கொடுந்தண்டனை!

★★★

சாம்ராஜ்ய ஆசையிருக்கிறதே அது சாமான்யமான தல்ல; அந்த மண்ணாசைக்கு முன்னே உண்மையான தாய்ப் பாசம்; பிள்ளைப் பாசம்—இவையெல்லாம் மண்தான்!

—இது போன்ற சாம்ராஜ்யப் பித்தர்கள் புரிந்த விபரிதங்களுக்கு இந்திய வரலாறு பல உதாரணங்களைத் தருவதாய் இருக்கிறது.

மொகலாயச் சக்கரவர்த்தி ஜகாங்கிர் தனது மூத்த புதல்வன் குன்ஸ் ரூவை தனக்கெதிராக புரட்சி செய்ததாகக் குற்றம் சாட்டி, அவனைச் சிறையில் அடைத்தார். அதோடு அவன் தனது கண் பார்வையை இழக்க வேண்டுமென்றும் உத்திரவிட்டார்.

ஆனால் இளவரசரோ இந்த தண்டனையைத் தானே நிறைவேற்றிக் கொள்வதாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

அதன்பேரில் ஒரு கூர்மையான எஃகு ஊசி அவரிடம் கொடுக்கப்பட்டது. இளவரசர் அதைக் கொண்டு, தனது பார்வை தெரியாதபடி, இமைகளைத் தைத்துக்கொண்டார்!

இப்படியே ஒரு ஆண்டு ஓடிற்று. பிறகுதான் ஜகாங்கிரை புத்திரபாசம் ஆட்கொண்டது. உடனே ஓடிச் சென்று தனது புதல்வனின் இமைகளைத் திறக்குமாறு உத்தரவிட்டார்.

பிரபல வைத்தியர்கள் வரவழைக்கப்பட்டார்கள். மிகவும் ஜாக்கிரதையாக அவர்கள் தையலைப் பிரித்தார்கள்.

நல்ல வேளை! இளவரசனின் விழிகள் கெடாமல் இருந்தன! சில காலத்திற்குப் பிறகு அவரால் சரியாதப் பார்க்கவும் முடிந்தது!

இளவிரசர் குன்ஸ்ஸே தாஜ்மகாலைக் கட்டியவருடைய சகோதரர்!

'நரகம்' காணப்பட்டது. மனைவியுடன் கூடி வாழமுடியாத நிலை ஏற்பட்டு, நிலைமையை சமாளிக்க முடியாமல் தனக்கு ஆப்த நண்பரான ஒரு டாக்டரோடு குளிர் காலத்தில் ஒரு நாளில் வீட்டை விட்டு வெளியேறி விட்டார், பிறகு அவரது மகள் அலெக்ஸாண்ட்ராவும் கூட சேர்ந்து கொண்டாள். மூவருமாக ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று டால்ஸ்டாய் நிமோனியாக் காய்ச்சலால் தாக்கப்பட்டார். அஸ்டபோவா என்ற இடத்தில் இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரின் வீட்டில் தங்கவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. செய்தி அறிந்த சோன்யா ஓடோடியும் வந்தாள். ஆனால் கணவனை உடனே பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

உள்ளே கணவனுடைய இருமலும் முனகலும் ஓயாமல் கேட்டுக் கொண்டே இருந்தன. இதை அறைக்கு வெளியே நின்றபடியே கேட்டுக்கொண்டு சோன்யா மௌனமாகக் குமுறிக் கொண்டிருந்தாள். அந்த நிலையில் தம்பதிகளின் சந்திப்பு, கணவனுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவிடும் என்ற எண்ணத்திலேயே சோன்யா அப்படி அறைக்கு வெளியிலேயே தடுத்து நிறுத்தப்பட்டாள்.

உள்ளே இருமலும் முனகலும் ஓய்ந்தது. பலருடைய அறிவுக் கண்களை தன் எழுத்துக்களால் திறந்து விட்ட மேதையின் கண்கள் மூடின. உரிமையும் விடுதலை வேட்கையுமே வாழ்வின் உயிர் மூச்சு என்று அடங்கி ஒடுங்கிக்கிடந்த ரஷ்ய மக்களுக்கு தன் கதைகள் மூலம் உணர்த்திய இலக்கியப் பெருந்தகையின் மூச்சு அடங்கியது.

அயர்ந்து தூங்கிக் கிடந்த மக்களின் உணர்வை தட்டியெழுப்பிய எழுத்தாளன், யாருமே தட்டி எழுப்ப முடியாத நெடுந் தூக்கத்தில் ஆழ்ந்த பிறகுதான் மனைவி சோன்யா உள்ளே விடப்பட்டாள். பலம்கொண்ட மட்டும் கதறியழுதாள். உணர்வற்ற கணவனின் கைகளை எடுத்து மாறிமாறி முத்தமிட்டாள். அந்தக் கைகள் வழங்கிய அரும்பெரும் இலக்கியச் செல்வங்களை உலக மக்களெல்லாம் அப்போது படித்து அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். உயிரோடு இருக்கும் போது எடுத்ததற்கெல்லாம் கணவனைக் குற்றம் சொல்லிக் கொண்டிருந்த சோன்யா, மரணத்தின் வாயிலில்தான் மணாளனின் உண்மையான மதிப்பையும், மேதினி கணவனின் எழுத்தில் மயங்கிக் கிடந்த நிலையையும் உணர முடிந்தது. 1910 நவம்பர் 7-ம் நாளிலிருந்து இலக்கிய உலகம் அனாதையாகி விட்டது. அவருடைய விருப்பப்படியே சடலம் அவர்பிறந்தஇடமான யாஸ்னயா போல்யானாவில் அடக்கம் செய்யப்பட்டது.

எவ்விதமான தகனச் சடங்குகளும் செய்யப்படவில்லை. சத்திய நெறியையும், அன்பு மார்க்கத்தையும் வாழ்வில் கடைப்பிடித்துக் காட்டி, தன் இலக்கியப் பாத்திரங்களிலெல்லாம் இழையோட விட்டு, பெரும் நீதிகளை உலகுக்கு போதித்த டால்ஸ்டாயை ஒவ்வொரு இலக்கிய ரசிகனும் தன் மனச் சிறையில் அடைத்து வைத்திருப்பதில் வியப்பில்லை.

[ஆதாரம் : டைஜஸ்ட்.]

●●●

போகாத நாள்!

மூதல்வன்

வீணாகக் கழிந்த நாட்கள் பல! அன்புடையாளிடம் அகம் மலர அளவளாவியிருக்க வாய்க்கவில்லை சமயம். நிதமும் அவள் இல்லம் செல்வான; மீள்வான் சோர்ந்து! அந் நங்கையின் தாயும் தந்தையும் வீட்டிலேயே இருந்தனர். அதுவே தடையாய் நின்றது இவர்களது சந்திப்பிற்கு. 'இன்றேனும் அவள் பெற்ருேர் வெளியே சென்றிருக்க மாட்டாரோ' என்று நப்பாசை கொண்டு தான் அவனும் நாள்தோறும் வந்தான். ஆனல் அம் முதுகுரவர் இருவரும் தம் இருக்கை விட்டுப் பெயர்ந்தார் இல்லை. எனவே காதலரிருவரும் வாடினர்!

மீனவர் குடும்பம் அது! ஒரு நாள் அலை கடலில் மீன் தேடிச் சென்ருர் அவள் தந்தை. அவர் எதிரே தோன்றியது ஒரு சுரு மீன்! தமிழ் மறவர் வழி வந்த அவரும் அஞ்சிஓடுவாரா? எதிர்த்தார் — போராடினர். படகு கவிழ்ந்தது! உடன் வந்தோர் உயிர் பிழைக்க எண்ணி புறம் காட்டி நீந்தினர். மீனிற்கும் மனிதருக்கும் நடந்த போரிலே வென்றது யாரோ? அது எப்படியாயினும் அவளுடைய தந்தை மீண்டும் வந்துவிட்டார் கரைக்கு. சுருமீன் வாய்ப்பட்டு அவர் மேனியெங்கும் புண் பட்டுப் போயிருந்தது. அவளுடைய அன்னையும் அலறினள். ஆபத்தொன்றுமில்லை என்று கூறினர் அருகிலிருந்தோர். பச்சிலை அரைத்து அவர் மேனி முழுதும் பூசி அவருடைய உடல் தேறும்வரை அவரை விட்டு அரை நொடியும் அகலேன்—என அம் மாதாவும் கூறிவிட்டாள். அதனல்தான் காதலரின் சந்திப்பு தடைபட்டது.

இன்ருே அன்னையும் ஐயனும் வீட்டில் இல்லை. 'ஆணழகன் அவன் இன்று வந்துவிட்டால் இன்பம் கொள்ளை...கொள்ளை' என்று மனம் கூத்தாடியது.

நீண்டு வளர்ந்திருந்த அவள் கூந்தலிலே பொன்னிறமான கொன்றை மலர்களை வாழை மடல்போல் பின்னியிருந்தாள். மாலைச் சூரியனின் ஒளியிலே அக் கொன்றை மலர்கள் தங்க ஆபரணம்போல் மின்னியது. உண்மையிலேயே சிலர் அம் மலர்களைப் பொன் என்றெண்ணி, "பொன் நகை கொண்டு கூந்தல் முடித்திருக்கும் இவள் மீனவர் பெற்ற மீன் விழிச் செல்வந்தானே; அன்றி

சீமானின் சீருடைப் புதல்வியோ" என்று ஐயங் கொண்டனர். மயிலின் தோகைபோல் காட்சி தரும் காயாம்பூவை பிறைபோல் சூட்டியிருந்தாள். அக் காட்சி தோகை விரித்து நிற்கும் மயில்போல் இருந்தது. அதனால்தான் அவனும் தோகை விரித்து நிற்கும் இந்த மயில் ஆடாதோ என ஏங்கினான்!

இவள் உள்ளத்தே எண்ணினாள்; அவன் உள்ளபடியே வந்து விட்டான்! ஆனால் அவள் அருகே வர பயம்! அவள் பெற்றோர் வீட்டில் இல்லை என்பதை பாவம், அவன் எப்படி அறிவான்? எனவே தூரத்திலேயே நின்றுவிட்டான். அருங்கலைப் பாவை இவளும் அவனைக் கடைக் கண்ணால் கண்டு விட்டாள்.

ஆனால் அவளும் அஞ்சினாள்! வழக்கம்போல் இன்றும் தன் தாய் தந்தையர் வீட்டில் இருப்பர் என நினைத்து அவன் போய் விட்டால் என்ன செய்வது என்றெண்ணித்தான் வஞ்சியவளும் அஞ்சினாள்! நேரிடையாகத் தானே கூறவும் நாணினாள். எனவே குறிப்பால் உணர்த்த நோக்கங் கொண்டாள். துணைக்குத் தோழியை நாடினாள்.

"தோழி! தூது நீ சொல்லி வாராயோ?"

"எவரிடம்?"

" அவரிடந்தான் "—நாணத்தால் முகம் கவிழ்ந்தாள்.

"புரிகிறது; ஆயின் எங்ஙனம் நான் அவரிடம் செல்லுவேன்? அவர் இருக்கும் வீடு வெகு தூரம் என்பதை நீ மறந்தனையோ?" என்று வினவினாள்.

"அன்புத் தோழி! தொலை தூரம் என்பதை நான் மறக்கவில்லை. எனினும் அவரிடம் செல்லுதற்குத் தேர் வேண்டாம்; தேரை இழுக்கப் புரவி வேண்டாம்; அப் புரவிகளும் காடு பல கடந்து களைப்படைய வேண்டாம்; அக் களைப்பு நீங்க அவை இளைப்பாறவும் வேண்டாம்!"

தூரத்தே நின்றிருந்த அவன் காதுகளில் இவள் கூறுவது முழுதும் விழுந்தது. அவன் சிந்தித்தான், "தேரின்றி அவள் நம் இல்லம் வருதல் இயலாதே" என்று. ஆனால் மறுகணமே அவனுக்கு உண்மை விளங்கி விட்டது. தன் வரவை தன் காதலி அறிந்து கொண்டதை உணர்ந்தான். எனவே அவள் தனக்காகவே அங்ஙனம் மொழியலுற்றாள் எனத் தேர்ந்து, அவள் கூறப்போகும் சேதிதனை செவி மடுக்க ஆவலுடன் நின்றான்.

இது ஏதும் அறியாத தோழி வியப்பு மிகுதியினால் அவளது பேச்சின் இடையே புகுந்தாள். ஆயினும் அவள் தன் காதலர்க்கு தான் உணர்த்தும் சேதிதனை நிறுத்தினாள் இல்லை.

"சுறு மீன் தந்த புண்ணினால் இது காறும் இல்லத்தே படுத்திருந்த எந்தைக்கு நோய் நீங்கி விட்டது. எனவே, தன் கடமையைச் செய்ய அலறும் நீலக் கடலிலே மீன் தேடிச் சென்று விட்டார். எந்தையின் அருகே இருந்து இதுநாள்வரை அவருக்குப் பணிவிடை செய்து வந்த அன்னையும் உப்பு விற்று நெல் வாங்கிவர உப்பு விளையும் கழனிக்குச் சென்றனள். இப்போது எமக்குத் தடையேதுமில்லை. அவர் வரின் அவருடன் மகிழ்ந்திருக்க இதுவே சமயம் என்று தோழியே, தூது நீ சொல்லி வாராயோ?"

எனப் பாகுமொழியாள் பகர்ந் திட்டாள். இது கேட்டு அவ னும் தனியே தூரத்தே நின்றி டல் தகுமோ? மேலும் நடந்த தென்னை என்று சாற்றிடத் தான் போதுமோ?

''சேயாறு சென்று துணை
பரி அசாவாது
உசாவுநர்ப் பெறினே
நன்று மற்றில்ல
வயச் சுறு எறிந்த புண்
தணிந்து எந்தையும்
நீல் நிறப் பெருங் கடல்
புக்கனன் யாயும்
உப்பை மாறி
வெண்ணெல் தரீஇய
உப்பு விளை கழனி
சென்றனள் அதனால்
பனியிரும் பரப்பிற்
சேர்ப்பதற்கு
இனி வரின் எளியள்
என்னும் தூதே.''

(குறுந்தொகை—கல்லாடனார்)

●●●

'பிறை'யின் சாதனை!

இளவயதிலே சிலர் அபாரத் திறமைசாலிகளாய் இருப் பார்கள். அவர்களில் ஒருத்தியைப் பற்றிய கதை இது:

1910-ம் ஆண்டு பென் மாதாகோவிலில் உள்ள பழைய கடிகாரம் ஒன்று நின்று விட்டது. *195*-ஆண்டுகளாக விடாமல் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்த கடிகாரம் திடீரென்று நின்று விட்டது அந்த ஊர்க்காரர்களுக்கு வேதனையாக இருந்தது.

15-ஆண்டு காலம் அந்தக் கடிகாரத்திற்கு 'ரிப்பேர்' வேலைகள் நடைபெற்றன. ஐரோப்பாவின் தலைசிறந்த கடிகார ரிப்பேர்க்காரர்கள் அனைவரும் வந்து—பார்த்து—முயன்றனர். கடிகாரத்தை ஓடவிட முடியாமல் திரும்பி விட்டனர்.

முடிவில் ஒருநாள் பதிமூன்றே வயது நிரம்பப் பெற்ற சிறுமியொருத்தி முன் வந்தாள். அவள் பெயர் பத்ரீஷியா சுத்போட என்பது அவளே அந்தக் கடிகாரத்தைக் கடைசியில் சரியாக ஓடவிட்டவள்.

அன்றுமுதல் இன்றுவரை நில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் அந்தக் கடிகாரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அந்தச் சிறுமியின் நினைவு வருகிறதாம், மக்களுக்கு!

* * *

ஏ, மனித மனமே! ரோஜாச் செடியில் முள் இருக்கிறதே என முறையிடாதே! அந்த முட் செடியிலேயும் மலர் இருககிறது என்று சாந்தி பெறு!

—ஆவ்பரி

அசோகன் மனைவி!

காட்சி : 1

இடம் : நந்தவனம்.

காலம் : முன்னிரவு.

சூழ்நிலை : [விண்ணின்மீது கண் சிமிட்டும் ஒளித் தாரகைகளுடன் போட்டி போடுவது போல், அந்த நந்தவனத்தின் வண்ண மலர்கள் செடித்தாயின் மேலிருந்தபடி சிரித்துக் கொண்டிருந்தன. ஓய்வுக்குப் பிறகு அப்போதுதான் தனது மாலைக் குளியலை முடித்துக் கொண்டு ஈரக் கூந்தலுடன் எழிலார் மலர்களுடனும் காருவகி தனது தோழியோடு தளர் நடை போட்டபடி நடந்து கொண்டிருந்தாள். கொடி மலர்க் குவியலுக் கிடையே வனத்தின் ஒரு மூலையில் சிறிய கோபுரத்தோடு அழகான ஒரு பளிங்கு மண்டபம். கோபுரத்தின் உச்சிக் கலசத்தை முத்தமிட முயன்று கொண்டிருந்தது, அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருந்த முழு நிலவு. நெஞ்சை உலுக்கும் இந்த நிசப்தத்தைக் கலைத்தபடி பளிங்கு மண்டபத்தினுள்ளிருந்து மதுரமான இசையோடு நாட்டியமாடும் சலங்கையின் சத்தமும் சேர்ந்து அந்த வனம் முழுவதும் மிதந்தது.]

காருவாகி : சோபனா! என்ன சத்தம்?

சோபனா: வேறென்னவாயிருக்க முடியும்? நமது சிறிய ராணியார் நடனமாடிக் கொண்டிருக்கலாம்.

காரு : உம்! எப்போதும் இதே வேலைதானா? நேற்றிரவெல்லாம் கூட இதேமாதிரி நகைப்பும் நையாண்டியும் குதூகலமும் கொம்மாளமும் தான். மகாராஜா என்றால் கொஞ்சமாவது பணிவு இருக்க வேண்டாமா? என்ன சோபனா, நான் சொல்வது?

சோப : இல்லை மகாராணி! இந்த ஆடல் பாடல் எல்லாம் மகாராஜாவின் மகிழ்ச்சிக்காகத்தான்.

நாடகப் பாத்திரங்கள் :

அசோகன்	—	மன்னன்
மகேந்திரன்	—	அசோகன் தம்பி
சங்கமித்திரை	—	அசோகன் தங்கை
ஞானமித்திரன்	—	சங்கமித்திரையின் கணவன்
காருவகி	—	அசோகனின் இரண்டாவது மனைவி
திஷ்யரட்சிதை	—	அசோகனின் மூன்றாவது மனைவி
சோபனா	—	பணிப் பெண்.

காரு: இல்லே! அவரது தனிமையும் தியானத்தையும் பாழ்படுத்துவதற்காகத்தான் இந்த சாகசத்தை செய்கிருள் திஷ்யா! அவளது உள்ளத்தையும் உணர்ச்சியையும் என்னுலும் மகாராஜாவாலும் புரிந்து கொள்ளவே முடியவில்லை. பாவம்! ஓய்வின்றித் தவிக்கிருர் மகாராஜா.

சோப: அப்படியென்ருல் அவரை எப்போதும் தங்களருகிலேயே வைத்துக்கொள்ளுங்களேன்......

காரு: உஸ்...மெதுவாகப் பேசு. மகாராஜா திஷ்யாவின் இந்த தொந்திரவைத் தாங்கமுடியாமல்தான் அடிக்கொருதரம் கயாவிற்குப் போய் வருகிருர், போதி விருட்ச பூசைக்கென்று சொல்லிக்கொண்டு.

சோப: அப்படியா? சரி, சரி, அந்தப் போதி மரத்துக்கு ஆயுள் கெட்டியாக இருக்க வேண்டும்.

காரு: சீ...குறும்புக்காரி! வா, வா......

(சிரித்துக்கொண்டே போகிருர்கள்.)

காட்சி 2.

இடம்: நந்தவனத்தின் மறுபக்கம்.

காலம்: அதே இரவு.

சூழ்நிலே: [திஷ்யரட்சிதை-பொன்னவிர் அழகு மேனி, பூத்துக் குலுங்கும் இளமை விரிந்த நெற்றி, விறுவிறுப்பாய் அங்குமிங்கும் அலேபாயும் விழிகள், குவிந்து சிவந்த கோவைக் கனி உதடுகள், கொடி இடை-அந்த அழகுப் பெட்டகம் நடனம் முடிவடைந்து களேப்போடு வருகிருள். மகேந்திரன் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு விட்டு ஒரு செடியின் மறைவில் ஒளிந்துகொள்ள, மகேந்திரன் கவனியாமல் அவள்மீதே தண்ணீரை ஊற்றி விடுகிருன். திஷ்யா சிரித்துக் கொண்டே எழுந்து...]

திஷ்:—மகேந்திரா! என் மேல் ஏன் நீர் ஊற்றிஞய்? விளேயாட்டுக்குத்தானே?

மகே: (வியப்புடன்) நீ ஏன் இங்கு வந்தாய்?

திஷ்: ஏன் வந்தேனு? எல்லாம் உனக்காகத்தான். உனது சுட்டிளமையும் சௌந்தர்ய வனப்பும்தான் என்னே இவ்வளவு நேரமாக இந்த மண்டபத்தில் வந்து இருக்கச் செய்தது. இங்கே இருப்பவையெல்லாம் உயிரற்ற சிலேகள்! ஒன்றுக்காவது உயிரில்லே—உணர்ச்சியில்லே! என் நடனக் கலேயைக்கண்டு பாராட்டும் திறனுமில்லே; உன்னேத் தவிர! மகேந்திரா! நீயும் கல்லாகி பேசாமலிருந்து விடாதே! பேசு மகேந்திரா; பேசு!

மகே: தப்பு, தப்பு; இப்படியெல்லாம் நீ என்னேடு பேசுவதே மகா தப்பு. நீயோ மகாராணி; இம்மாதிரி யெல்லாம் பேசாதே.

கன்னட மூலம். பேராசிரியர் வேங்கடசுப்ப ராவ் எம். ஏ.

தமிழில். ப. செல்வராசன்

திஷ்: மகேந்திரா! ஐந்து வருடங்களுக்கு முன் நீ என்மீது எவ்வளவு காதல் கொண்டிருந்தாய்? எவ்வளவு நேசித்தாய்? அதையெல்லாம்...

மகே: மறந்து விட்டேன் அடியோடு! எனக்கு இப்போது புத்தனைத் தவிர வேறு யார் மீதும் ஆசையில்லை. உன்னையும் கேட்டுக் கொள்கிறேன்; உனது சகோதரி சந்திமித்திரையைப் போல நீயும் புத்தனின் திருவடியில் சேர்ந்து "மகா நிர்வாணம்" பெற்றுக் கொள்.

திஷ்: மகா நிர்வாணமாவது: மண்ணாவது! எல்லாம் வெறும் வாய் ஜாலம். அசோகனின் இளமைத் துடிப்பு அவ்வளவையும் அனுபவித்தவள் சந்திமித்திரைதான்; அதை மறந்து விடாதே! தளிர்க்கொடிகள் வாடி விடுமென்ற கவலையோடு தண்ணீர் ஊற்றும் நீ, உனக்காக தவித்துக்கொண்டிருக்கும் இந்தப் பூங்கொடியை—திஷ்யாவை மறந்து விடாதே! உனது சூடேறிய உதடுகளைச் சுவைக்க என் உதடுகளும் துடித்துக்கொண்டிருக்கின்றன. மகேந்திரா...

மகே: சீ, சீ! மகா பாபம். நீ அசோகனின் பட்டமகிஷி—பாராளும் மகாராணி!



நானே அவரது தம்பி...

திஷ்: ஆனாலும் என் முதற் காதலன்.

மகே: திஷ்யா! நீ அறியாமை இருட்டில் வீழ்ந்து தடுமாறுகிறாய்.

திஷ்: அதற்குத்தான் சொல்கிறேன். உனது வதனத்தில் ஒளி வீசும் காந்தியை என் மீது திருப்பி அந்த இருளைப் போக்கி விடு என்று. மகேந்திரா, மனதைத்திறந்துசொல்கிறேன்; மகாராஜா என் இளமைக்கேற்றவரல்ல; அவர் தொண்டு கிழவர். நாடு—நாட்டு மக்களின்சுபிட்சம் என்பதைப் பற்றித்தான் எந்நேரமும் சிந்திக்கிறாரே தவிர, என்னைப் பற்றி—என் இளமைக் கனவுகளைப்பற்றி அவர் எள்ளத்தனையும் எண்ணிப் பார்ப்பதில்லை. பார்க்கவில்லையே என்று குற்றஞ் சாட்டவில்லை; பாவம்! பார்க்க முடியாதவர்; பழுத்து நரைத்து உலக ஆசைகளை வெறுத்து ஓய்வு வேண்டி நிற்பவர். அவர் எப்படி என் ஆசைக்குப் பதில் கூறமுடியும்?

மகே: அதற்காக?...

திஷ்: என் இளமைக்கேற்ற இன்ப மன்னன் நீதான். அன்றும் சரி; இன்றும் சரி; என்றுமே உனக்காகத்தான் ஏங்கித் தவிக்கிறேன்.

மகே: திஷ்யா! நீ மிகவும் கலங்கிப் போயிருக்கிறாய். போதி விருட்ச பூசைக்கென்று போயிருக்கும் மகாராஜா இன்று இரவே அரண்மனைக்குத் திரும்புகிறார். அவரிடமே உன் குறையைக்கூறிக்கொள். ஆத்ம சாந்தியைத் தேடிக் கொள். நான் வருகிறேன்.

(வேகமாகப் போய்விடுகிறான்.)

திஷ்: ஆத்ம சாந்தி...? அந்தப் படுகிழவனிடமா? ஹூம்... இந்த ஜென்மத்தில் அது இல்லை!

காட்சி : 3

இடம் : சங்கமித்திரையின் மாளிகை.

காலம் : பின்னிரவு தொடங்கும் நேரம்.

சூழ்நிலை : [புத்த தேவனின் சிலையின் முன் சங்கமித்திரை நடனமாடுவதை அவள் கணவன் ஞானமித்திரன் ரசித்துக் கொண்டிருக்கிறான். திஷ்யா வந்து மறைந்து நின்று அந்த சதிபதிகளின் சந்தோஷத்தைப் பார்த்துப் பார்த்து பெருமூச்சு விடுகிறாள். நடனம் முடிந்தவுடன் கை தட்டிக் கொண்டே வெளியே வருகிறாள்.]

திஷ்: அருமையான ஆட்டம்! ஆடற்கலையின் அர்த்தமும் பாவமும் உன் அங்கமெல்லாம் பளிச்சிடுகிறது. ஆனால் ஒரு சந்தேகம்; ஆடல்,உன்னை ஆளப்பிறந்த ஞானமித்திரனுக்கா? அல்லது ஆட்கொண்ட பெருமான்—உனது புண்ணியமூர்த்தி புத்ததேவனுக்கா? யாருக்காக இந்த நடனம்?

சங்க: யாருக்காகவுமில்லை; இந்த உலகைமறப்பதற்காக!

திஷ்: உலகம் உனக்கென்ன கேடு செய்தது?

சங்க: எனக்கென்று தனியாக வேறு செய்ய வேண்டுமா? எங்கு பார்த்தாலும் போட்டி—பொறாமை—பொச்சரிப்பு—அசத்யம்-அசூயை-ஆணவம்! இவைகளால்தான் உலகம் வளைக்கப்பட்டிருக்கிறது

என்று சொல்லியிருக்கிறுர் புத்த பகவான்.

திஷ் : சொல்லிய அந்தப் புண்ணியமூர்த்தியும் இந்த உலகத்தில் பிறந்தவர்தான்.

சங்க: அதனுல்தான் அந்தத்தீங்குகளைக் கண்டறிந்தார்; பின் அவைகளைக் களைய பாடு பட்டார்; உபதேசித்தார்.

திஷ் : புத்தன் ஒரு வேதாந்தப் பித்தன். உலக வாழ்க்கையை அனுபவிக்கக் கற்றுக்கொள்ளாத கோழை! அப்படியிருந்தும் நீ அவன் முன்னல் ஆடுகிறுயென்றுல்......

சங்க: இல்லை மகாராணி! இந்த ஆடல் என் மனச் சாந்திக்காக.

திஷ் : ஒகோ......இந்த மனச் சாந்தி அர்த்தராத்திரிக்குமுன்னுல் ஏற்படுவதில்லையோ?

ஞான : ஆமாம்; மகாராணி! அர்த்த ராத்திரிக்குப் பிறகு தான் புத்தபகவான் இங்கு அவதரிக்கிறுர் என்பது சங்க மித்திரையின் நம்பிக்கை.

திஷ் : அப்படியென்றுல் அர்த்த ராத்திரிவரை உன்னேடும், அதற்குப் பிறகு அந்த நிஷ்காமி புத்தனேடும் இவள் ஐக்கியமாகி விடுகிருளோ?

சங்க: மகாராணி! மகா புருஷர்களைப் பற்றி அநியாயமாகப் பேசவேண்டாம். நான் வருகிறேன்.

(கோபத்தோடு போய் விடுகிருள்.)

திஷ் : பார்த்தாயா ஞானமித்திரா! உன் மனைவிக்கு என்னிடத்தில் எவ்வளவு அலட்சியம்! பேருக்குத்தான் அவள் உனக்கு மனைவி; ஆனுல் முழுக்க முழுக்க அவள் புத்த

ஊமைகளின் நாடகம்!

ஊமைபோல் நடிப்பது கடினமான கலை; ஆனுல் ஊமைகளே நடிக்கும் விசித்திர உண்மையைக் கீழே படியுங்கள்:

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு மாஸ்கோவில் ஒரு புதுவகை நாடக மன்றம் துவக்கப் பட்டது. அதில் நடிக்கும் கலைஞர்கள், அதன் நாடகங்களைப் பார்க்கும் ரசிகர்கள்—இவர்கள் எல்லோருமே ஊமைகள்! சைகைகள், பாவனைகளின் மூலமாகவே நாடகம் நடித்துக் காட்டும் இம்மன்றம் ஆற்றல் மிக்க நடிகர், நடிகைகளையும் நாடகத் தயாரிப்பாளர்களையும் பெற்றிருக்கிறது. ஷேக்ஸ்பியர், ஆஸ்டிரோவ்ஸ்கி, டால்ஸ்டாய், ஷீலர் முதலியோரின் நாடகங்களை இது தயாரித்து நடிக்கிறது.

இம்மன்றத்தைச் சேர்ந்த ஒரு நடிகையான விதியாஸ்டிபனேவா, ஊமைகளைக் கொண்டு 'சைகை கோஷ்டிக் கானக் குழு' ஒன்றை சமீபத்தில் துவக்கியுள்ளார். இக்குழுவினர் சைகைகள் மூலம் பாட்டுகளை 'சித்தரித்துக்' காட்டுகிறுர்கள். பாட்டின் தாளத்தையும் உட்பொருளையும் சைகைகளின் வாயிலாக வெளியிடுகிறுர்கள்.

மாஸ்கோவிலுள்ள ஊமைகளிடையே இந்த நாடக மன்றம் மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கிறது.

—'சோவியத் நாடு'

னுக்கு உரியவள். புத்தனின் சரணடியில் தனது சகல உணர்ச்சியையும் தத்தம் செய்து விட்டவள்.

ஞான : நான்...வருகிறேன்!

திஷ் : நில் ஞானமித்திரா! இது வரை சங்கமித்திரையின் ஆடலைக் கண்டாய். இப்போது நான் ஆடுகிறேன்; அதையும்தான் பாரேன்.

(தன்னை மறந்து ஆடுகிறாள். ஞானமித்திரன் மெய் மறந்து ரசிக்கிறான். ஆடல் முடிவடைந்த பின்...)

ஞான : ஆகா! அருமையான நடனம்! அற்புதமான ஆடல்! ஆடற்கலைக்கென்றே பிறந்த அழகு ராணி நீங்கள்.

திஷ் : அப்படியென்றால் என்னை நீ......

ஞான : மகாராணி!

திஷ் : ஞானமித்திரா! என் அழகு உனக்கு......

ஞான : நீங்கள் பட்டத்து ராணி. அசோகரின் மதிப்பிற்கும் அந்தஸ்திற்கும் தகுந்த மகாராணி. நீங்கள் என்னை விரும்புவது......

திஷ் : என் ஆத்ம திருப்திக்காக ஞானமித்திரா!

ஞான : மன்னிக்க வேண்டும். அதற்கு நான் அருகதையுள்ளவனல்ல. அப்படி நினைக்கும் போதே......எனக்கு பயமாயிருக்கிறது! பயமாயிருக்கிறது...!

(வேகமாகப்போய் விடுகிறான்.)

திஷ் : முட்டாள்! இருதயமும் அந்த இருதயத்தில் பெண்ணாசையுமில்லாத கோழை! பேடி!! உலகத்திற்கு பாரமாக உலவும் உணர்ச்சியற்ற மரக்கட்டை! ஞானமித்திரா, ஆழமில்லாத கடற்கரையில் அடிக்கடி தோன்றி உடைந்து விடும் நீர்க்குமிழி நீ. உன்னை நம்பிப் பயனில்லை.

காட்சி : 4

இடம் : அசோகனின் பூசை அறை.

காலம் : நடுநிசி.

சூழ்நிலை: [அறை முழுவதும் புத்தனின் சிலைகள் இருக்கின்றன. அசோகன் புத்த பகவானின் காலடியில் உட்கார்ந்து தியானித்துக் கொண்டிருக்கிறான். திஷ்யா மெதுவாக வந்து அவன் கண்களை மூடுகிறாள்......]

அசோ : திஷ்யா!

திஷ் : என்னவாம்?

அசோ : நான் பூசையிலிருக்கும் போது நீ இப்படியெல்லாம் செய்யலாமா?

திஷ் : ஆமாம், எப்போது பார்த்தாலும் பூசை—பூசை—பூசை! இப்போதுதானே போதி விருட்ச பூசையை முடித்துக் கொண்டு வந்தீர்கள்? அதற்குள் மறுபடியும் இங்கென்ன பூசை? நான் எவ்வளவு நேரமாக தங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? அதுவும் இந்த இரவு நேரத்தில்— பௌர்ணமி நிலவில்!

அசோ : நீ இன்னும் சிறு குழந்தையாகவே இருக்கிறாய்— திஷ்யா! நேரமாகி விட்டது, நீ போய் படுத்துக் கொள்.

திஷ் : நீங்கள் வராமல் இன்று நான் போகப்போவதில்லை.

அசோ : சேச்சே! புத்தபிரான் நம்மையே பார்த்துக் கொண்டிருக்கிறார். நீ அவர் முன் இப்படி யெல்லாம் பேசக் கூடாது.

ஐயா
தருமராசா...
நான் இல்லேப்பா!
பக்கத்திலே கேட்டு
பாருப்பா!
???

திஷ் : அப்படியானல் அவர் கண்களை மூடிவிடுகிறேன்.

(கீழே கிண்ணத்திலிருந்த எண்ணெயைத் தொட்டு புத்தனின் சிலையின் கண்களில் தடவி விடுகிருள்.)

அசோ : அய்யோ! மகாபாவம்; அபராதம்! திஷ்யா, நீ வரவர துஷ்டப் பெண்ணுகி விட்டாய். (கதவு தட்டப்படுகிறது.) யாரென்று பார்?

(திஷ்யா கதவருகே சென்று திறக்க, பணியாளொருவன் நிற்கிருன்.)

பணி : வித்யானந்த சுவாமிகள் மன்னரைப் பார்க்க வேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிருர்.

திஷ் : மகாராஜா இப்போது யாருக்கும் தரிசனம் தரமாட்டார் என்று சொல்லிவிடு. போ!

(பணியாளை அனுப்பி விட்டு கதவைத் தாளிட்டுக் கொண்டு அசோகனிடம் வருகிருள்.)

அசோ : திஷ்யா, யார் வந்தது?

திஷ்: பணியாள் வந்து, நமது மலர்ப் படுக்கை சித்தம் என்று சொன்ஞன். நான் பன்னீரும் சந்தனமும் தோய்த்த பட்டு விரிப்பை படுக்கையில் விரிக்கச் சொன்னேன். மகாராஜா...இன்று பௌர்ணமி...அதோ பாருங்கள்; அந்த முழு நிலவை. நம்மிருவரையும் பார்த்துப் பார்த்து கண் சிமிட்டி கேலி செய்கிறது.

அசோ: இல்லை; இல்லை; திஷ்யா, இன்று நான் ஏகாந்தமாக இருக்க வேண்டும்.

திஷ்: என்றைக்குத்தான் நீங்கள் ஏகாந்தமாக இருக்கவில்லை? அந்த மட்டில் அக்கா அதிருஷ்டக்காரி! இந்த மதப் பித்து உங்களைப் பிடிப்பதற்கு முன்பே வாழ்க்கை இன்பத்தை-வையகத்துப் பெருஞ் சுவையை சலிக்கச் சலிக்க அனுபவித்து விட்டாள். ஆனல் நான்? என்று இந்த அரண்மனையில் நுழைந்தேனே அன்றே நீங்களும் மதப் பித்துக்கு பலியாகி என்னை மறந்து விட்டீர்கள். நெஞ்சில்கைவைத்துச் சொல்லுங்கள், நிஜமாகவே நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?

அசோ: நிச்சயமாக நேசிக்கிறேன்.

திஷ்: இந்த புத்தனை?

அசோ: அவரையும் நேசிக்கிறேன்.

திஷ்: இங்கே எதற்காக இவ்வளவு புத்தன் சிலைகள்?

அசோ: என் மனச்சாந்திக்காக

திஷ்: சிலைகளைப் பார்ப்பதிலா சாந்தி?

அசோ: ஆமாம்.

திஷ்: என்னையும் பாருங்கள்; சாந்தி கிடைக்கும்.

அசோ: இல்லை! இந்தச் சிலைகளைப் பார்ப்பதால் சிந்தனையும் நிம்மதியும் தானுக வருகிறது. ஆனல் உன்னைப் பார்த்தால் மனம் அலை மோதும் படகாகித் தள்ளாடுகிறது! அவதியுறுகிறது!! ஆசைச் சேற்றில் விழுந்து புரளும் எருமையாகி விடுகிறது!!!

திஷ்: சுருக்கமாகச் சொல்லுங்களேன், நான் நச்சு நிறைந்த நாகப் பாம்பென்று. சரி! வருகிறேன். (போகும்போதே ஒரு சிலையை வேண்டுமென்றே உதைத்துவிட அது தூள் தூளாகிறது.) மன்னிக்க வேண்டும் மகாராஜா; பார்க்கவில்லை. இன்

ஞென்று சொல்ல மறந்து விட்டேன். இரவு முழுவதும் இந்தச் சிலைகளின் கால்களை வருடியபடி தூங்குங்கள்— நிம்மதி கிடைக்கும்.

(போய் விடுகிருள்.)

அசோ: எவ்வளவு கோபம் இவளுக்கு என்மீது? மகா ஞானி! புத்த பகவானே! அறியாமையை அகற்றி திஷ்யாவுக்கு ஆத்ம சாந்தியைக் கொடு. அறிவைக் கொடு.

(வணங்குகிருன்.)

காட்சி 5.

இடம்: திஷ்யாவின் அந்தப்புறம்.

காலம்: விடியற்காலை.

சூழ்நிலை: [அறை முழுவதும் புத்தனின் உடைந்த சிலைத் துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. திஷ்யா கையில் ஒரு சிறு கத்தியோடு ஒரு அரச மரக் கிளையை ஆவேசத்தோடு சீவுகிருள். கிளையிலிருந்து துண்டிக்கப்பட்ட இலைகள் காற்றில் பறந்தபடி ஜன்னல் வழியாக வெளியிலும் தரையிலும் விழுகின்றன. தோழி வருகிருள்.]

தோழி: தேவி! மகாராஜா இப்போது ஒரே கோபமாகஇருக்கிருர்.

திஷ்: சக்தியில்லாத ராஜாவின் கோபமும் சந்நியாசியின் கோபமும் இரண்டும் ஒன்றுதான். பசி கோரமாக இருந்த போதும் அதை வெளியே சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு உபவாசமிருந்தால் ஏன் அவருக்குக் கோபம் வராது?

தோழி: இல்லை, மகாராணி! அரசவைப் பிரமுகர்கள் அனைவரையும் அழைத்துவைத்துக் கொண்டு ஏதோ ஒரு விருட்சத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிருர் கோபத்தோடு.

திஷ்: நிஜமாகவா? அப்படியென்ருல் அவருக்கு எல்லாம் தெரிந்துவிட்டிருக்க வேண்டும்.

தோழி: என்ன மகாராணி?

திஷ்: கேள், நான் சொல்வதை வேறு யாரிடமும் சொல்லிவிடாதே! அரசர் பூசித்து வரும் போதி விருட்சத்தை அடியோடு நாசம் செய்து விடவேண்டுமென்று நான் தான் இந்த ஏற்பாடு செய்தேன். ஆனுல் அது முழுதாகப்பலிக்கவில்லை. அந்த விருட்சத்தை பூசிப்பதற்காகத்தான் மன்னர் அடிக்கொரு தரம் போய்க்கொண்டிருந்தார்.

தோழி: அந்த மரத்தில் ஏதோ ஒரு சக்தி இருக்க வேண்டும் தேவி.

திஷ்: சக்தியாவது, ஞானமாவது! எல்லாம் பைத்தியக்காரத்தனம்! அந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தபோது தான் அந்த புத்தனுக்கு ஞானேதயம் ஏற்பட்டதாம்! ஆனுல் இவருக்கென்ன ஏற்

மூன்று விதம்!

புத்திசாலி பிறரைப் பற்றி உங்களோடு பேசுவான்; முட்டாள் தன்னைப்பற்றியே உங்களிடம் பேசுவான்; ஆனுல் பேச்சாளி உங்களைப்பற்றியே உங்களிடம் பேசிவிடுவான்.

—மெர்சன்.

பட்டிருக்கிறது தெரியுமா? குழப்பம்—கொந்தளிப்பு—அமைதியில்லாத வாழ்வு—இவைதான் ஏற்பட்டிருக்கிறது.

தோழி: அது சரி! நீங்கள் ஏன் அந்த விருட்சத்தை நாசப் படுத்த வேண்டும்?

திஷ்: நாசப்படுத்தினுல் தான் நாட்டு மக்கள் தத்தம் மனைவி மக்களோடு நல்வாழ்வு நடத்துவார்கள். இல்லையென்ருல் ஒவ்வொருவரும் மனைவியை மறந்து—மக்களைத் துறந்து புத்த பிட்சுவாகி "நிர்வாண" நிலை அடைய வேண்டுமென்று ஊர் ஊராகச் சுற்றுவார்கள். ஜீவ ஹிம்சையே கூடாதாம் ... மண்டூகங்கள்! மனைவியும் மக்களும் இவர்களது பிரிவால், பேதமையால் எவ்வளவு துடிக்கிருர்களென்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

தோழி: உங்களுக்குத்தான் மகேந்திரர் இருக்கிருரே!

திஷ்: இருக்கிருரே தவிர, எள்ளத்தனையும் பயனில்லை.

(மகேந்திரன் திடீரென்று நுழைகிருன்.)

மகே: மன்னிக்க வேண்டும் மகாராணி! உனது உத்தரவு இல்லாமல் உள்ளே நுழைந்து விட்டேன். போதி விருட்சத்தை நாசமாக்கும் வேலையில் உனக்கும் போதிய பங்குண்டு என்பதை அறிந்து மன்னர் கடுங் கோபத்துடன் இருக்கிருர். ஆ...இதோ! இங்கேகூட ஒரு கிளை...இலைகள்! சரி; சந்தேகப்பட்டது சரியாகி விட்டது. உன்னை உடனே அழைத்து வரும்படி மகாராஜா என்னை அனுப்பியிருக்கிருர்.

திஷ்: நான் வரமுடியாது.

மகே: இது மன்னரின் கட்டளை.

திஷ்: இது மகாராணியின் கட்டளை; போ வெளியே.

மகே: தாமதமானுல் மன்னருக்கு இப்போதிருக்கும் கோபத்தில் தாமே இங்கு வந்து விடலாம்.

திஷ்: அவ்வளவு அவசரமோ என்னைப் பார்க்க?

மகே: மக்கள் கொதிப்படைந்து நிற்கிருர்கள். மகன் குணளனின் கண்கள் பிடுங்கப்பட்டதற்கும் நீதான் காரணமென்றறிந்து கோபத்தால் துடித்துக் கொண்டிருக்கிருர்கள்...

திஷ்: குணளன் எனக்குக் கோபுரக கலசம். அவனை நான் அங்கீனுக்க மாட்டேன்!

மகே: அப்படியானுல் மகாராஜாவை...?

திஷ்: அவரையும் நோய் வாயிலிருந்து நான்தான் காப்பாற்றி யிருக்கிறேன். ஏன் உனக்கே அது தெரியுமே!

மகே: அது தெரிகிறது! ஆனுல் இதுதான் புரியவில்லை; உனக்குக் குணளன்மீது காதலா? மன்னரின்மீது காதலா?

திஷ்: ஒன்று மாத்திரம் உண்மை! உன்னைப் போன்ற உணர்ச்சியற்ற கற்சிலைகளை மட்டும் நான் காதலிக்க மாட்டேன்.

மகே: உனது வலையில் விழ மறுத்துவிட்டதற்காக குணளன்மீது வீண் பழி சுமத்தி வெளியேற்றி விட்டாய். அவனது அழகு விழிகளையும் பறித்துவிட்டாய். இதெல்லாம் மன்னருக்குத் தெரிந்து

விட்டது. அதோடு இப்போது அவரது அன்புக்கும் பக்திக்கும் உரித்தான புனித போதி விருட்சத்தையும் நாசப்படுத்தியிருக்கிறாய். ஒருக்கால் அரசர் உனக்கு மரணதண்டனையே விதிக்கலாம்.

திஷ்: மெத்த சந்தோஷம்! அப்போதாவது நான் மற்றவர்களைப்போல அழியாத அலங்காரச் சிலையாக இந்த அரண்மனையில் என்றென்றும் நிலைத்திருப்பேனல்லவா?

மகே: ஆனால் உலகம் உன்னை என்றென்றும் தூஷித்துக் கொண்டேயிருக்கும்.

திஷ்: பலவீன இதயமுள்ள மானிடர்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் இந்த அநியாய உலகம் என்னை தூஷிக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை! ஜீவஹிம்சை வேண்டாமென்று உபதேசிக்கின்ற சித்தர்களே! மதப் பித்தர்களே! இதற்கு பதில் கூறுங்கள்; எனக்கு மரண தண்டனை விதிக்கிறீர்களே, அதுமட்டும் ஜீவஹிம்சை இல்லையா? உங்கள் புத்தனுக்கு பொறுக்குமா இது? உங்கள் மதப் பித்திற்கு இந்நாட்டு இளம் மங்கையரெல்லாம் தத்தம் ஆசை அபிலாசைகளை அடகு வைத்து விட்டு, கை கட்டி, வாய் பொத்தி, வணங்கி நின்று, "மகா உபதேசம்" பெற்று பிட்சுணியாக "நிர்வாண" நிலை பெறத்தான் வேண்டுமோ? மதமாம் மதம்! மடையர்களின் பிதற்றல் தான் மதம் என்ற சொல்!

மகே: (காதைப் பொத்திக் கொண்டு) அப்பப்பா! நீ மிகக் கடின சித்தமுடையவள். நிச்சயம் உனக்கு மன்னர் மரண தண்டனை விதிக்கத்தான் போகிறார். திஷ்யா! அதை மறந்துவிடாதே!

(சொல்லிவிட்டு வாசலருகே போகிறான். திஷ்யா திடீரென்று அங்கிருந்த வில்லொன்றை எடுத்து அம்பைப் பொருத்தி மகேந்திரனின் முதுகில் பாய்ச்சுகிறாள். மகேந்திரன் "அம்மா" என்று அலறிக் கொண்டே கீழே விழுகிறான். பணிப் பெண்கள் மகேந்திரனை அப்புறப் படுத்துகிறார்கள். திஷ்யா தரையில் உறைந்து கிடக்கும் மகேந்திரனின் இரத்தத்தை கையால் தொட்டுப் பார்த்து கோரச் சிரிப்பு சிரிக்கிறாள்.)

காட்சி 6.

இடம்: மன்னன் அசோகனின் அரசவை.

காலம்:—காலை.

சூழ்நிலை: [மகேந்திரன் காயக் கட்டுடன் ஒரு தூணில் சாய்ந்து

ஒரு நாள் வருமானம்...?

நோபல் பரிசை ஏற்படுத்திய பெருந் தனக்காரர் ஆல்பிரட் நோபலிடம் வேலை பார்த்து வந்த ஒருத்திக்குத் திருமணம்.

ஆல்பிரட் நோபல் அவளைப் பார்த்து; "உனக்கு என்ன திருமணப் பரிசு வேண்டும் கேள்" என்றார்.

அவள் தயங்கினாள். "தயங்காதே; நினைப்பதைக் கேள்" என்றார்.

அவளோ "தங்களது ஒரு நாளைய வருமானம் வேண்டும்" என்றாள்.

நோபல் சிரித்துக்கொண்டே 1,40 000 ரூபாய்களுக்கு ஒரு 'செக்' எழுதிக்கொடுத்தார்.

நின்று கொண்டிருக்கிறான். வேதியர்களும், வெளிநாட்டிலிருந்து வந்துள்ள சீனர்களும் அவரவர் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். உயர்ந்த பீடத்தில் புத்தனின் சாந்தி தவழும் பெரிய பளிங்குச் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. திஷ்யா சிலையின் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறாள். அவையோர் அத்தனை பேரும் திஷ்யாவையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அசோகன் மட்டும் அமைதியற்று அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருக்கிறான்.]

அசோ: குணாளன் உனக்கென்ன முறையாக வேண்டும்? (திஷ்யா மௌனமாகவே இருக்கிறாள்.) திஷ்யா! உன்னைத்தான் கேட்கிறேன்; பதில் சொல்.

திஷ்: எனது கணவரின் மூத்த மனைவியின் குமாரன்.

அசோ: சுற்றி வளைக்காமல் சுருக்கமாக ஒரே வார்த்தையில் பதில் சொல்.

திஷ் : சமூக-சாஸ்திர--சம்சார விதிப்படி புதல்வன்!

அசோ : புதல்வனென்றால் சத்தியப்படி உனக்கு...

திஷ் : மகன்!

அசோ : மகனை மாதா காதலிக்கலாமா?

திஷ் : காதலித்ததாக சொன்னவர்கள் யார்?

அசோ : சொன்னவர்களைப் பற்றிக் கேட்காதே! சொல்லியிருக்கும் விஷயத்தைப்பற்றி மட்டும் பேசு! மகனை ஒரு மாதா காதலிக்கலாமா?

திஷ் : கூடாது!

அசோ : (கோபத்தோடு) கூடாது...! பிறகு நீ ஏன் குணாளனைக் காதலித்தாய்?

திஷ் : ஆசைப்பட்ட பொருளை அடைந்தே தீரவேண்டுமென்பது என் சொந்த அபிப்பிராயம்.

அசோ : அப்படியானால் என்னை ஏன் மணந்து கொண்டாய்?

திஷ் : நான் மகாராஜாவை மணந்து கொள்ளவில்லை; மகாராஜாதான் என்னை மணந்து கொண்டார், தனது அந்தஸ்தையும் அதிகாரத்தையும் உபயோகித்து.

அசோ : நீ இந்த நாட்டு மகாராணி என்பதையாவது புரிந்து கொண்டிருக்கிறாயா?

திஷ் : ஆமாம்! மகாராணிதான் மன்னர் நேசித்தவரை! அதற்குப் பிறகு நான் அபலை; சாதாரணப் பெண்.

அசோ : இப்படியெல்லாம் பேசுவது உனக்கு அகௌரவமாகயில்லை?

திஷ் : வாழ்க்கையே கசந்துவிட்டபின், ஆசையெல்லாம் அஸ்தமித்து விட்டபின் கௌரவம்-அகௌரவம் என்பதைப்பற்றியெல்லாம் அக்கறை கொள்வதில் லாபமில்லை.

அசோ : நீ திமிர் பிடித்துப்பேசுகிறாய்; உனக்குத் தண்டனை சிரச்சேதம்.

திஷ் : மகா பிரசாதம்; மகாராஜா! மதத்தைக் காப்பாற்ற புறப்பட்டிருக்கிறீர்கள்; அதனாலெல்லாம் உங்களுக்கு மதிப்பேற்படா விட்டாலும் வழி தப்பியவள் மகாராணி என்றறிந்தும், தன் மனைவி என்று தெரிந்தும், அவளுக்கு மரண தண்டனை வழங்கியதற்காக இந்த மாநிலம் நிச்சயம் உங்களைப் போற்றும். வருகிறேன், வாழட்டும், உங்கள் நீதி!

(புறப்படுகிறாள்.)

அசோ : நில்! வேதியரே! ஹூம்......

(வேதியனொருவன் திஷ்யாவிடம் வந்து...)

வேதி : போதி விருட்சத்தை எதற்காக நாசமாக்கினாய்?

திஷ் : உங்கள் மதத்தை நாசப்படுத்த வேண்டுமானால், முதலில் அந்த விருட்சத்தைத்தான் நாசப்படுத்த வேண்டும்.

வேதி : எங்கள் மதம் உனக்கு செய்த தீங்குதான் என்ன?

திஷ் : மதம் தனிப்பட்டவருக்கு தீங்கு செய்வதில்லை என்பது உண்மையானாலும் சமூகத்திற்கு தீங்கு செய்யத் தவறுவதேயில்லை.

வேதி : அதைச் சமூகமே கேட்கட்டுமே!

திஷ்: வேடிக்கை வேதியரே உங்கள் கேள்வி. சமூகமென்றால் அதற்கு உருவமுண்டு—உடலுண்டு - உயிருண்டு என நினைத்தா இப்படிக் கேட்டீர்கள்! சமூகத்திற்கு வாய் கிடையாது விற்பன்னரே! ஆதலினால்தான் அந்த சமூகத்தின் ஒரு அங்கமாக நான் முன் வந்து கேட்டேன். புனிதர்களே! புத்தமத சித்தர்களே! கேளுங்கள். நான் "மதம்" என்று ஒன்றைச் சாராமல் வாழவிரும்பியவள். இதற்குக் காரணம் என் அந்தரங்க வாழ்க்கை. அந்த அந்தரங்க ரகசியத்தைப் பற்றி விசாரிக்க இங்கு யாருக்கும் அதிகாரமில்லை, மன்னர் ஒருவரைத்தவிர! கேளுங்கள். மகாராஜா அசோகர் தனது மூத்தமனைவி இறந்த நான்கு வருடங்களுக்குள் என்னை

மணந்து தனது இளமை அழியாதவரை என்னேடு இன்பமாக வாழ்ந்தார். கலிங்கத்தை வென்ற பிறகு தனது தேசத்தை சைன்ய பலத்தால் காப்பாற்ற முடியாது என்பதைக் கண்டறிந்தார். அதனுல்தான் புத்த மதத்தைத் திடீரென 'தத்து' எடுத்துக் கொண்டு, ஜீவஹிம்சை கூடாது—இரத்த வீழ்ச்சி கூடாது என்று ஊருக்கெல்லாம் உபதேசித்தார். இந்த திடீர் மதப்பற்றுக்குண்டான அஸ்திவாரத்தை ஆராய்ந்தால், எல்லை விரிந்து பெரிதாக வளர்ந்துவிட்ட தன் நாட்டை வேறு வழியில் காப்பாற்ற முடியாததுதான். வெளிப்படையாகவே சொன்னுல் இது அவ்வளவும் மன்னரின் சிந்தனையில் உருவான கபட நாடகம். இந்த நாடகத்தை கடைசிவரை நல்லபடியே நடித்து முடிக்க—நாட்டு மக்கள் தன்னை நம்ப வேண்டுமென்பதற்காக மன்னர் தமது மனைவியர்களை அரண்மனைக்குள்ளேயே அடைத்து—அவர்களின் ஆசாபாசங்களை ஒடுக்கி கைதியைப்போல நடத்திஞர். அவருக்கு முதுமை; ஆனுல் எங்களுக்கோ இளமை! உலக சுகம் அவருக்கு அலுத்துவிட்ட போதை; ஆனுல் எங்களுக்கு அது அவசியம் தேவைப்பட்ட அமுதம்! இதை யெல்லாம் மன்னர் மறுக்க முடியாது. இந்தத் தவிப்பிலே பிறந்ததுதான் எனது மதத் துவேஷம்.

அசோ : போதும்; நிறுத்து உன் புலம்பலை!

திஷ் : உண்மை என்ருவது ஒரு நாள் வெளியாகித்தானே தீரும்! ஒரு வேளை அந்த உண்மையை உணர்ந்து கொள்ள உங்களில் சிலருக்குக் கஷ்டமாயிருக்கலாம். ஆனுல் காலம் அதை கண்டிப்பாக உலகத்திற்கு உணர்த்தியே தீரும். நான் குணுளனை காதலித்தது உண்மை. மன்னர் அசோகரின் கட்டிளமையும் கண் வீச்சும் மந்தகாசமும் மகன் குணுளனிடத்திலும் ஒளி வீசக் கண்டு என் உள்ளத்தை அவனிடம் ஒப்படைத்து விட்டேன். குணுளன் இங்கேயே இருந்தால் அவனை நெருங்க முடியாது என நினைத்து அவனை வெளியேற்றினேன். ஆனுல்......(அழுது கொண்டே சொல்கிருள்)... அவனது அழகு விழிகளைப் பறித்தது நானல்ல. சத்தியமாக நானல்ல; குணுளன் குருடாகிவிட்டால் எனக்கும் இந்த உலகம் இருண்டுவிடும்! என் உள்ளத்தின் எதிரொலியை இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள். உங்களைப் போன்ற உணர்ச்சியற்ற சிலைகளின்முன் நான் வாழ முடியாது. உங்கள் மதம் தேசத்தை சாஸ்வதமாக மயான பூமியாக்கப் போகிறது. எனது தனி மதம் என்னேடு மடியட்டும்.

(பக்கத்திலிருந்த தூணை ஆவேசமாக உதைக்க தூணின் மேலிருந்த கற்சிலை திஷ்யாவின் தலைமீது வீழ்ந்து அவளைப் பிணமாகச் சாய்த்து விடுகிறது.)

அசோ: (பெருமூச்சு விட்டு) இவள் விரோதித்தது என்னையா — என் மதத்தையா என்பது தெரியவில்லை!

சீன யாத்திரிகர்கள்: நிச்சயமாக அவள் உங்கள் மதத்தைத் தான் வெறுக்கிருள்; மகாராஜா. ஃ

நான் கள்வனு?

பொழுது விடியும் நேரத்தில் பெய்து கொண்டிருந்த மழை நின்றுவிட்டிருந்தது. கொதித்து எழும் புரட்சி வீரனைப் போன்று உதிக்கத் தொடங்கிவிட்டான் உதய சூரியன். நனைந்து கிடக்கும் நிலத்திலும், கலைந்து கிடக்கும் மேகக் கூட்டங்களின்மீதும் உதய சூரியனின் பொன் நிறக் கதிர்கள் பாய்ந்து பளபளப் பாக்கிக் கொண்டிருந்தது. மங்காத ஒளி வீசும் உதய சூரியனின் எழுச்சி கலந்த காலை வேளை மனதிற்கு மகிழ்ச்சியும், உயர்வான உற்சாகத்தையும் கொடுத்தது.

அப்பொழுது மணி ஒன்பது இருக்கும். 'சந்தி மண்டப'த்தில் சாய்ந்து கொண்டு 'ஹுக்கா' பிடித்துக் கொண்டிருந்த பினோத் சட்டர்ஜி தன் பேரனுக்காகக் காத்திருந்தார். பல மைல்களுக் கப்பால் இருக்கும் ஒரு கிராமத்திற்கு அவர் போக வேண்டியிருந்ததால் அவர் அவருடைய பேரனைக் கடைத் தெருவுக்குச் சென்று ஒரு பத்து ரூபாய் நோட்டுக்குச் சில்லறை மாற்றிக் கொண்டு வர அனுப்பினுர். அவர் பேரன் சென்று ஏறக்குறைய ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். ஏன் இன்னும் அவன் திரும்பி வரவில்லை? ஹுக்கா பிடித்துக் கொண்டிருந்தாலும் அவர் மனம் ஒரு நிலையிலில்லை.

அவரால் பொறுமையுடன் உட்கார்ந்து கொண்டிருக்க முடியவில்லை. எழுந்து இங்கும் அங்குமாக உலவிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் பேரன் வெளுத்த முகத்தினனுய், கலைந்த கூந்தலுடன், நிலையிழந்த தன்மையில் தள்ளாடிக் கொண்டு வந்தான். தட்டுத் தடுமாற-திக்கித் திணறி ரூபாய் நோட்டைத் தொலைத்து விட்டதாகக் கூறினுன்.

ஒன்றும் தோன்ருதவராய் வாயைத் திறந்தபடி நின்றிருந்த தன் பேரனை சுட்டெறிக்கும் பார்வையில் நோக்கினுர்.

கொந்தளிக்கும் கோபத்தால் உந்தியவராய் சிறுவன்மீது பாய்ந்து வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டே அடித்தார்.

"தாய் தந்தையை இழந்த தறுதலையே! பணத்தைப் பாழடித்தாயா? நோட்டைத் தொலைத்துவிட்டாயா? அந்த நோட்டின் அருமை உனக்குத் தெரியுமா? அனுதை நாயே!" என்றெல்லாம் திட்டியவாறு பையனை அடித்தார்; உதைத்தார்.

வங்காள மூலம் : பினய் சவுத்ரி

தமிழில் : இரா. மதனகோபால், பி. காம்.,

வலி தாங்க முடியாத சிறு வன் கதறி யழுதான். கண்ணீர் வெள்ளம் பெருக்கினன். அவன் அழ அழ அவனுடைய தாத்தா வின் கோபம் பெருகிக் கொண்டே சென்றது.

"போடா, போக்கற்ற பயலே! போய் அந்த நோட்டைக்கண்டு பிடித்துக் கொண்டு வா......" என்று கூச்சலிட்டார்.

இந்த சப்தத்தைக் கேட்ட அவர் மனைவி உடனே வெளியே வந்தாள்.

"என்ன சொல்கிறீர்கள்? அடித்துக் கொன்றுபோட உத்தேசமா பையனை? என்ன செய்தான் அவன்? எதற்காக அவனை அப்படிப் போட்டுஅடிக்கிறீர்கள்?" என்று உரக்கக் கேட்டாள், தன் கணவனை நோக்கி.

"அவனையே கேள்..." என்று கூறிய சட்டர்ஜி தன் வேஷ்டியை இறுகக்கட்டிக்கொண்டு உட்கார்ந்தார். தன் தலையை இரு கைகளாலும் பற்றியவாறு பேசினர்.

"ஒன்றல்ல; இரண்டல்ல; பத்து ரூபாய்! இது என்ன சாதாரணமான விஷயமா? பத்து ரூபாய்......!"

சட்டர்ஜியின் மனைவி தன் கணவனின் முகத்தை ஓரிரு வினடிகள் கேள்விக் குறியுடன் உற்று நோக்கிவிட்டு தன் பேரனைப் பார்த்தாள். "என்னடா செய்தாய் அந்தப் பணத்தை?" என்று கேட்டாள்.

நடுங்கும் குரலில், கண்ணீர் விட்டவாறு சிறுவன் நடந்த கதையைக் கூறினன் தன் பாட்டியிடம். அவன் வீட்டை விட்டுக் கிளம்புமுன் தன் இடுப்பில், வேஷ்டியின் மடிப்பில் ரூபாய் நோட்டைச் சொருகிக் கொண்டானும். பின் அவன் கடைத் தெருவுக்கும் மற்ற இடங்களுக்கும் சென்று சில்லறை கேட்டானும். எங்கும் கிடைக்கவில்லையாம். அந்தக் கிராமத்தின் மற்றொரு கோடியில் வசிக்கும் மதிபால் என்பவரின் வீட்டில் சில்லறை இருந்ததாம். சில்லறையை வாங்கிக் கொண்டு நோட்டைக்கொடுக்க இடுப்பைத் தடவியபொழுது அங்கு ரூபாய் நோட்டு இல்லையாம். பின் தான் வந்த வழியே திரும்பி வந்து ஒரு இடம் பாக்கியிலலாமல் தேடிக்கொண்டு வந்தானும். ஆனல் எங்கும் கிடைக்கவில்லையாம் ரூபாய் நோட்டு.

"அடப் பாவி மகனே! எத்தகைய அவமானம்! என்மகள் என்னவோ செத்து விட்டாள்; அவள் மகன்-இந்த முட்டாள் சிறுவன் உயிரோடிருந்து என்னை ஏன் வாட்டி வதைக்க வேண்டும்? ஏனடா நீயும் அவளோடு மடிந்து என்னை நிம்மதியாக விட்டு வைத்திருக்கக் கூடாது?" என்று சிறுவன் பேசி முடித்ததும் அவன் பாட்டி கத்தினள்.

இந்தச் சமயத்தில் பக்கத்து வீட்டு, அடுத்த வீட்டு ஜனங்கள் அவர்கள் வீட்டருகே கூட்டங் கூடி என்ன விஷயம் என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டனர்.

இந்தச் சிறு விஷயம் ஊர் வம்பு பேசும் அவர்கள் வாய்க்கு நல்லதொரு விருந்தாகஆயிற்று. அரை மணி நேரம் அங்கு பேசி விட்டுச் சென்றுவிட்டனர்.

பமன்தாஸ் கட்டாக் மட்டும் இருந்தார். அவர் ஹுக்கா பிடித்துக் கொண்டிருந்தார்.

புகை பிடித்துக் கொண்டே பேசலானார்.

"என்ன விந்தையாக உளதே! சிறுவனிடம் நோட்டு இருந்ததை நான் கண்டேன், அவன் என் வீட்டு வழியாகச் செல்லுகையில். இந்தக் கிராமப் பாதையொன்றும் அப்படி அதிக ஜன நடமாட்டம் உள்ளது இல்லை. அதை யாரும் எடுத்துக் கொண்டு சென்றிருக்க மாட்டார்கள். ரூபாய் நோட்டும் மாயமாக மறைந்திருக்காது. சட்டர்ஜி! நான் சொல்கிறேன்; இந்தக் கிராமத்தில் உள்ளோரில் யாராவது ஒருவர்தான் எடுத்திருப்பார்கள்!"

"எடுத்திருந்தாலும் யார் கொடுப்பார்கள்? கழுதை போன்று வளர்ந்திருக்கும் இவன் இவ்வளவு கவனக் குறைவாகவா யிருப்பான்! என்ன ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா? பத்து ரூபாய் நோட்டு!" என்று கூறினார் சட்டர்ஜி.

சிறிது நேரம் அமைதி நிலவியது. திடீரென்று தோன்றிய எண்ணத்தில் உந்தப்பட்டவராய் கட்டாக் ஒரு மூலையில் யாரும் கவனியாத வண்ணம் அமர்ந்திருந்த ஒரு வயதான ஆளை நோக்கி, "என்ன குஞ்சா, நீ இந்தக் கிராமப் பாதையில் சிறிது நேரத்திற்கு முன்-அதாவது ஏறக் குறைய ஒரு மணி நேரத்திற்கு முன்னால் போகவில்லையா?"

அக் கிழவன் போனதற்கு அடையாளமாக தலையை ஆட்டினான்.

"அப்படியானால் நீதான் அந்த நோட்டை எடுத்திருக்க வேண்டும்," என்று கத்தினார் கட்டாக். மேற்கொண்டு, 'நான் கூர்ந்து கவனிக்கவில்லை. ஆனால்

ஒரு ஆள் குனிந்து எதையோ எடுத்ததைக் கவனித்தேன். என்னுடைய வீட்டிற்கு மேல் சிறிது தூரத்தில்தான் அப்படி ஒருஆள் எடுத்தான். இப்போது தான் எனக்குநினைவு வருகிறது. உன்னிடம் இருக்கும் கூடை யைப் போன்றுதான் அவன் முதுகிலும் ஒரு கூடை யிருந் தது. நீ தான் அந்த நோட்டை எடுத்திருக்கவேண்டும். அதைக் கொடுத்துவிடு, கிழஆந்தையே! இல்லையேல் நான் உன்னை போலீசில் பிடித்துக் கொடுத்து விடுவேன்!''

"என்னை ஏன் போலீசில் பிடித்துக் கொடுப்பது? என் னிடம் அந்த ரூபாய் நோட்டு இல்லையென்று நான் சொன் னேன்? என்னிடம் இருக்கி றதா என்றுகூட யாரும் இது வரை கேட்கவில்லை. நீங்க ளெல்லோரும் ஏதோ ரூபாய் நோட்டைப்பற்றி பேசுவதைக் கேட்டேன். எதைப்பற்றி, ஏன் என்றெல்லாம் எனக்கென்ன தெரியும்? தெரியாமல் நான் என்ன செய்யமுடியும்? உங்க ளுடைய பேச்சை நான் கேட் டுக் கொண்டிருக்கையில், நான் மனதில் எண்ணிக் கொண் டேன்—அவர்கள் பேசி முடிக் கட்டும்; பின் நாம் விஷயத் தைச் சொல்லலாம் என்று...''

"உன்னிடம் நோட்டு இருக் கின்றதா, இல்லையா?'' என்று உரக்கக் கேட்டார் பினேத் சட்டர்ஜி.

அவர் கேட்ட கேள்விக்கு குஞ்சா உடனே பதில் சொல்ல வில்லை. சிறிது நேரம் மௌன மாக நிலத்தை நோக்கியவாறு அமர்ந்திருந்தான் பின் அவன் மெள்ளத் தன் தலையில் போட் டிருந்த முடிச்சை அவிழ்த்தான். அதன் உள்ளிருந்து கசங்கிக் கிடந்த பத்து ரூபாய் நோட்டை எடுத்தான். அதைத் தன் கையில் வைத்தவாறு அதன் மீது கிடந்த கசங்கலைச் சரிப் படுத்த நோட்டைப் பிரித்து மெதுவாக அழுத்தினன். பின் னர் அந்த நோட்டை எடுத்து நீட்டியவாறே பேசலானுன்:

"இது உங்களுடையதாக யிருந்தால் எடுத்துக் கொள் ளுங்கள். பாதையில் கண்டெ டுத்தேன் இதை. இதைத் தொலைத்துவிட்ட ஆளை நான் கண்டால் இதைக் கொடுத்து விட வேண்டும் என்று நினைத் தேன்!''

"மூடு வாயை. இவர் பெரிய மனிதர். கண்டெடுத்ததைக் கொடுத்து விடுவாராம்,'' என்று கூறிய சட்டர்ஜி அவன் கையினின்று ரூபாய் நோட்டை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டார்.

சிறிது நேரம் கழித்து குஞ்சா கூறியது போன்று கேலிக் குரலில் "தொலைத்தவனிடம் கொடுத்து விடுவானும். ஏ, கிழத் திருடனே!'' என்று கூறி விட்டுத் தன் பேரனுடனும், மனைவியுடனும் உள்ளே சென் ரூர்.

"நானு திருடன்? என்னைத் திருடன் என்றல்லவா கூறினர்! நான் அந்த நோட்டைத் திருட வில்லை. வரும் வழியிலே கண் டெடுத்தேன். அது என் குற் றமா?'' என்று கட்டாக்கை நோக்கிக் கேட்டான் குஞ்சா.

பதிலேதும் கூருமல் எழுந்து சென்று விட்டான் கட்டாக்.

தனியாக விடப்பட்ட குஞ்சா சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். பின் மெள்ள எழுந்து தடுமாற்றத்துடன் வீட்டினுள் சென்ருன். அங்கு யாரும் இல்லை. சுற்றுமுற்றும் பார்த்த குஞ்சா வாயிலில் நின்ற

வாறு, "அம்மா, கூடை யேதும் வாங்குகின்றீர்களா?"

சட்டர்ஜியின் மனைவி சமைய லறையில் தன் பேரன் தலையில் எண்ணெயைத் தடவியவாறு தனக்குத்தானே பேசிக்கொண் டாள். குஞ்சாவின் குரலை அவள் கேட்டதாகத் தெரிய வில்லை.

மறுபடியும் குஞ்சா கேட் டான், சமையலறையை நெருங்கி.

பதிலேதும்வரவில்லை. ஆனால் சட்டர்ஜியின் மனைவி தன் பேரனைக் குளத்தில் குளிப் பாட்ட வெளியே அழைத்து வந்தவள், இன்னும் போகாமல் அங்கேயே நின்றிருக்கும் அக் கிழவனைக் கண்டதும் கடுங் கோபம் கொண்டாள்.

"ஏய், என்னுடைய சமைய லறைக்கு வந்துதான் உன் சாமான்களை விற்பாயா? கொஞ்சமாவது மூளை வேண் டாமா?" என்று கத்தினாள்.

ராஜா மீசை!

ஒருவன் வேறொருவனுடைய மீசையை வைத்துக் கொள்ளும் வேடிக்கையை நாடகத்தில்தான் கண்டிருப்பீர்கள். நிஜ வாழ்க் கையில் கூட அது நடந்திருக்கிறது!

மான்சி என்பவன் சிப்பாயாக 1793-ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின்போது சேவகம் பார்த்து வந்தவன்! ஒரு சமயம் அவ னது சேனை ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களது சமாதிகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் கைப்பற்றியது. ராஜ குடும் பத்தைச் சேர்ந்தவர்களது எலும்புகளையெல்லாம் எடுத்து வெளியே எறிந்தது.

அப்போது மான்சி நாலா வது ஹென்றி அரசனின் சமா தியைத் திறந்தான். அரசனின் உடலெல்லாம் அழிந்து விட் டது. ஆனாலும் அவனது நறுக்கு மீசை மட்டும் அப்ப டியே இருந்தது.

மான்சி அந்த மீசையை மட்டும் கத்தரித்து எடுத்துக் கொண்டான். பிறகு அவன் அதை எடுத்துத் தனது மீசை யாக ஒட்டிக்கொண்டான்.

பிறகு 21 ஆண்டுகள் மான்சி அந்த இரவல் மீசை யோடே வாழ்ந்தான்.

மான்சி ஏன் அப்படி வாழ்ந்தான் தெரியுமா?

உண்மையில் மான்சிக்கு மீசை வளரவில்லையாம்! அதனால் தான் அவன் 'ராஜமீசை'யை ஒட்டிக் கொண்டிருக்கிறான்!

தன் தவறைஉணர்ந்த குஞ்சா பின்னுலேயே நகர்ந்து வாச லுக்கு வந்தான். மறுபடியும் "கூடை வாங்குகிறீர்களா?" என்று கேட்டான்.

"உன் கூடையும் வேண் டாம்; ஒன்றும் வேண்டாம்! போ வெளியே!" என்று கூறிய வாறு தண்ணீர் ஊற்ற வேண் டிய சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவள் போய்க்கூட குஞ்சா அங்கிருந்து கிளம்பவில்லை. அவள் போனதும் சட்டர்ஜி மட்டும் உள்ளே யிருப்பார் என்று நினைத்துக் கொண்டு காத்திருந்தான்.

"ஒரு ரூபாய் கடனுகக் கொடுங்கள் ஐயா; திருப்பித் தந்துவிடுகிறேன். அதற்காகத் தான் காத்திருக்கிறேன்," என்று கேட்டான் குஞ்சா.

பலமுறை கேட்டுக் கொண்டி ருந்தான்; பதில் மட்டும் வர வில்லை.

அரை மணி நேரம் கழித்து சட்டர்ஜியின் மனைவி திரும்பி வந்தாள். இன்னும் போகா மல் அங்கேயே சுற்றிக் கொண் டிருக்கும் கிழவனைக் கண்ட தும் அவளுக்குக் கோபம் கொந்தளித்துக் கொண்டு வந் தது.

"இன்னும் நீ போகவில்லை? கீழ் ஜாதி புத்தி உங்களுக்கு எங்கிருந்து போகும். போ வெளியே!" என்று கத்தினுள்.

"ஏதாவது இனம் தருவீர்கள் என்றுதான் காத்திருக்கிறேன். நோட்டை நான் கண்டு பிடித் துக் கொடுத்தேனே..." என்று அவன் முடிக்குமுன்,

"நீதானு கண்டு பிடித்துக் கொடுத்தாய், திருட்டுக் கிழ வனே! உன்னைக் கையுங் களவு மாய் பிடிக்காதிருந்தால் பணத் துடன் கம்பி நீட்டியல்லவா இருப்பாய்! என்ன தைரியம் உனக்கு இனம் கேட்க," என்று கத்தினுள் சட்டர்ஜியின் மனைவி.

சிறிது நேரம் மௌனமா யிருந்தான் குஞ்சா. பின்னர் "அம்மா! பணம் கொடுக்கா விட்டால் பரவாயில்லை. சிறிது அரிசி தாருங்கள் அம்மா. மழை யின் காரணமாக ஒரு வாரமாக நான் வேலை செய்யவில்லை. வீட்டில் ஒரு மணி அரிசிகூட இல்லை. பட்டினியினின்று எங் களை விடுவிக்க கொஞ்சம் அரிசி கொடுங்கள்," என்று கெஞ்சிக் கேட்டான் குஞ்சா.

அந்த நேரத்தில் சட்டர்ஜி வந்தார். வெளியே செல்லு முன் அவர் ஒரு தாழ்ந்த வகுப் பானிடம் பேச விரும்பவில்லை. தன் மனைவியை நோக்கி "ஏன் இந்தக் கிழப் பிச்சைக்காரனை வெளியே அனுப்பாமல் இருக் கிருய்?" என்று கேட்டார்.

"என்ன சொல்லியும் அவன் போக மாட்டேனென்கிருனே. இனம் வேணுமாம் அவ னுக்கு!"

"இனமா? போடா போக் கற்ற பயலே! உன்னைப் போலீ சில் பிடித்துக் கொடுக்காதது என் தப்பு. போகிருயா, இல் லையா கிழத் திருடனே!" என்று கத்தினுர் சட்டர்ஜி.

நஞ்சு கக்கும் இச் சொற் களைக் கேட்ட குஞ்சா தலையை ஆட்டியவாறு வெளியே சென் ருன்.

அன்று ஆரம்பமே அவ னுக்கு மோசமாக இருந்தது. காலையில் கண் விழித்ததும் புகையிலை இல்லாததைக் கண் டான். புகை பிடிக்கும் வழக்க

இல்லாத குறை!

மனைவி: அனுவசியமா ஒன்னுமில்லாத துக்கெல்லாம் ஏன் கவலைப்பட்டுக்கிட்டு இருக்கிறீங்க?

★

கணவன்: ஏன்னு கேட்கிறே? பேங்கிலே என் பேருக்கும் ஒண்ணுமில்லை; அதுக்காகத் தான்!

முடையோருக்கு ஒரு நாளின் முதல் புகைக்கே வழியில்லை என்றால் எப்படியிருக்கும் அவர்கள் மனம்? அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருந்த குஞ்சாவிற்கு அவன் மனைவியின், "இன்னும் சிறிய நவாப் படுக்கையினின்று எழுந்திருக்கவில்லையா? வீட்டில் ஒரு மணி அரிசிகூட இல்லை என்பது அவருக்குத் தெரியாதா?" என்ற குரல கேட்டது.

கோபத்தால் கொந்தளித்துக் கொண்டிருந்த குஞ்சா தனியாக அந்தக் குடிசையில் கிடந்தான்.

அவனுடைய மனைவி அவனைத் தனியாகவிடாமல் நச்சரித்துக் கொண்டிருந்தால் வீட்டை விட்டு வெளியேறி, அவளது தொந்தரவு ஏதும் இல்லாதபடி ஒரு மரத்தடியில் அமர்ந்து சூரியனைப் பார்த்துக் கொண்டு, தன் வாழ்வைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பான், "வாழ்க்கை ஒரு பெரும் போராட்டமாக வுள்ளதே..." என்று!

ஏழ்மை நிலையோ, உணவின்மையோ குஞ்சுவை வருந்தச் செய்யவில்லை. ஏழ்மையிலேயே பிறந்து, ஏழ்மையிலேயே வாழ்பவன் அவன். சமுதாயத்தால் சாக்கடைப் புழு என்று கருதப்படும் இனத்தவன். குட்டக் குட்ட குனியும் பண்பு அவனிடம் இருந்ததே தவிர எதிர்த்துப் பேசும் ஆற்றல் அவனிடம் இல்லை.

ஏழ்மையைக் கண்டு கலங்கவில்லை குஞ்சா. காலம் எப்படி மாறிவிட்டது என்று எண்ணுவான். அவன் தந்தையிடமிருந்து கற்று சிறுவயது முதல் செய்துவரும் கூடை பின்னும் தொழில் இப்பொழுது எப்படி நசித்து விட்டது தெரியுமா? வயதாகி, எலும்பும் தோலுமாகக் கிடக்கும் அவனை யார் வேலைக்கு வைத்துக் கொள்வர்?

அவன் எண்ணச் சுழல் சுற்றியபடியே இருக்கும். கடந்து போன நிகழ்ச்சிகள் அவன் நினைவில் நடனம் புரிந்தன. அவனுடைய இறந்த மகனைப் பற்றிய எண்ணங்கள்... இருபது வயது நிரம்பிய இளைஞன். நல்ல வலுப் பெற்ற இள மூங்கிலைப் போன்ற அருமை மகன் இறந்துவிட்டான். ஒரு படகோட்டியிடம் அவனை வேலை கற்றுவர அனுப்பினன். ஒரு நாள் பாதாள நதியில் படகோட்டிச் சென்றவன் திரும்பவேயில்லை. அவன் அன்னை அழுது, அலறிப் புலம்பினுள். பயன் என்ன? பையன் மடிந்ததுதான்!

அதற்கடுத்து அவனுக்குக் குழந்தை பிறக்கவேயில்லை.

ஐம்பது ஆண்டுகள்வரை அவனுடன் வாழ்ந்து அவன் வாழ்க்கையில் சம பங்கேற்று வந்த அவன் மனைவி இப்பொழுது எப்படி மாறிவிட்டாள்! எத்தனை நாட்கள் அவர்கள் ஒன்றாகப் பட்டினியுடன் காலங்

கடத்தி வந்துள்ளனர். ஆனால் இப்பொழுது அவள் கிராமம் முழுதும் தன் கணவனைத் தூற்றியவாறு அல்லவா திரிந்து வருகிறாள்!

வாழ்க்கை ஒரு பெரும் போராட்டம் அவனுக்கு.

இரண்டு வாரமாக அவன் கூடையை யாரும் வாங்கவில்லை. வரும் வழியில் கண்டான் நோட்டை! நம் தொல்லை இனி தீர்ந்தது என்று நினைத்தான். ஆனால் அவன் நல்ல மனம் கிராமத்திலேயே தங்கி நோட்டைத் திருப்பிக் கொடுக்குமாறு தூண்டியது.

தள்ளாடியவாறே தன் வீட்டை யடைந்தான் குஞ்சா. எல்லாம் வீண்......ஏன், அவன் வாழ்க்கையே வீண் என்பதை உணர்ந்தான்.

மண் தரையிலே அவன் மனைவி படுத்துறங்குவதைக் கண்டான். சுற்று முற்றும் பார்த்தான். எங்கும் உணவு இருப்பதாகத் தென்படவில்லை.

பசியும், சோர்வும் வாட்டியது. அவன் மனைவியை எழுப்பி கேட்கக்கூட அவனுக்குத் தோன்றவில்லை. அந்தக் குடிசை கதவைப் பற்றியவாறு இறந்து போன சடலம் போன்று எலும்பும் தோலுமாகக் கிடக்கும் அவன் மனைவியின் உடலைக் கண்டான். அவன் மனம் கலங்கியது. சிறிது நேரம் சிந்தித்தான். அவனுடைய சுருங்கிய முகம் மெதுவாக-ஆனால் உறுதியாக ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தது.

★

அன்று மாலை மேகம் கருமையாக இருந்தது. மழை பெருமளவு பெய்தது. மின்னல் ஒரு பக்கத்தில் மின்ன, இடி ஒரு பக்கத்தில் ஓசை கிளப்ப, மழை நிற்காமல் பெய்து கொண்டிருந்தது. எல்லோரும் சீக்கிரமாகவே படுக்கைக்குச் சென்று விட்டனர்.

சட்டர்ஜி இன்னும் வீடு திரும்பவில்லை. அவர் மனைவி தன் பேரனுடன் தனியாக இருந்தாள் வீட்டில்.

நடு இரவில் காலடி சப்தம் கேட்டு அவள் கண் விழித்தாள். எழுந்து உட்கார்ந்து கொண்டு உற்றுக் கேட்டாள். யாரோ வராந்தாவில் நடப்பது மெல்ல கேட்டது,

அவள் மிகவும் பயந்தாள்.

அரிசி மூட்டைகளை மழை வருமுன் களஞ்சியத்திற்குள் கொண்டு செல்ல இயலவில்லை. அதனால் அவை சமையலறை வராந்தாவில் கிடத்தப்பட்டிருந்தன.

சன்னலைத் திறந்து பார்த்தாள். வெளியே ஓர் உருவம் வராந்தாவில் உலவுவது தெரிந்தது. கத்தலாமா என்று நினைத்தாள். கத்தினால் யார் துணைக்கு வருவார்கள்? ஒரு வேளை திருடனே உள்ளே நுழைந்து கொன்று விட்டால்? சிறிது நேரம் சும்மா யிருந்தாள். தன்னைச் சமாளித்துக்கொண்டு "யார் அது எங்கள் அரிசி மூட்டையைத் திருடிக் கொண்டு செல்வது?" என்று கேட்டாள்.

அவள் குரல் அந்த உருவத்துக்குக் கேட்கவில்லை.

மறுபடியும் கேட்டாள்.

மூட்டையைத் தூக்கிக் கொண்டு செல்லும் உருவம் "நான்தான் குஞ்சா" என்று கூறி விட்டு இருளினூடே மறைந்து விட்டது! ❀

★ கூனன் ★

★

நாவல் சுருக்கம்

★

பிரெஞ்சு மூலம்:
விக்டர் ஹ்யூகோ

தமிழில்: அ. ராஜா,
எம். ஏ., எம். எஸ்ஸி.

டிக்கன்ஸ், டூமாஸ், டால்ஸ்டாய் என்று நீளும் பட்டியலில் முக்கியமான இடத்திலே வீற்றிருக்கும் விக்டர் ஹ்யூகோவுக்கு அறிமுகம் தேவையில்லைதான். பிரான்ஸ் நாட்டின் இலக்கிய வரிசையிலே முதலிடம் பெறும் 'லே மிசரபிள்ஸ்' (ஏழை படும் பாடு), 'தி மான் ஹூ லாஃப்ஸ்' (இளிச்சவாயன்) என்ற அமர படைப்புகளோடு வைத்து கருதப்படுவதுதான் 'தி ஹன்ச்பாக் ஆஃப் நாட்டர்டாம்' என்ற இப்பெருங் கதை.

பாரிஸ் நகரத்தையும், அங்கே எழுந்தருளியிருக்கும் நாட்டர்டாம் ஆலயத்தையும் பின்னணியாக வைத்து தீட்டப்பட்ட இக் கதையில், குவாசிமோதோ என்ற கூனன், ரோலோ என்ற பாதிரி, எஸ்மெரல்டா என்ற நாடோடி மாது—இந்த மூவர்தான் கதைக்கு உயிரூட்டும் முக்கிய படைப்புகள்.

ஒருமுறை இக் கதையைப்பற்றி, ஒரு குருவானரிடம் அபிப்பிராயம் கேட்டபொழுது, அவர், "இதில் தவறென்ன இருக்கிறது? அந்நாட்டிலென்ன; இந்நாட்டிலேயே, இந்தக் காலத்திலேயே, நல்ல நிலத்தில் சில காளான்கள் முளைப்பது போல, கையில் ஜெபமாலையும், கக்கத்தில் கன்னக்கோலும் கொண்ட ஓரிருவர் இல்லையா? அதைப் போலத்தான் ரோலோ என்ற பாதிரியும். இப்படிப்பட்ட ஒரு பாத்திரத்தை உருவாக்கியதற்காக ஹ்யூகோவைப்பழிப்பவர்கள் 'லே மிசரபிள்ஸில்' கருணையே உருவாக, தஞ்சம் புகுந்த இடத்தில் திருடத் துணிந்தவனை மன்னித்துவிடும் பெருந்தகையாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் 'பிஷப்'பை எண்ணிப் பார்க்க வேண்டும்" என்றார்.

* * *

நாட்டர்டாம் ஆலயம்—நாகரிகத்திற்குப் பெயர் பெற்ற பாரீஸ் நகரத்தின் நடுவில் ஓங்கி வளர்ந்து நிற்கும் கிறிஸ்தவர் வழி படும் இடம். இயற்கையின் மாற்றங்களாலும், இரத்தப் புரட்சி களாலும் இன்று அவ்வாலயம் குற்றுயிராக ஆக்கப்பட்டிருக் கிறது. அதைப் பார்க்கும்பொழுது 'காலம் ஒரு குருடு. மனிதன் ஓர் முட்டாள்!' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. சிற்பியின் கைத்திறனும், சைத்ரிகனின் கிண்ணமும், பல வல்லுனர்களின் எண்ணமும் ஒன்று சேர்ந்த பெருங் காவியமாக நிற்கின்றதே இக் கல்மண்டபம்—என்று காலமாவது தன் கரங்களின் கொடு மையை அதில் காட்டாது இருக்க வேண்டும்; அல்லது மனித னுவது எப்படியும் காலத்தால் இது அழிந்துதானே போகப் போகிறது: இன்று என்னதான் அழகுக் கொலுவாக இதை ஆக்கினுலும் நாளை இது இடிந்து தகர்ந்துதானே போகப் போகிறது என்று அக் கட்டிடங்களை எழுப்பாது இருக்க வேண்டும். இரண்டும் நடைபெறுவதில்லை. அதனுல் நாட்டர் டாம் போன்ற ஆலயங்களும் இன்று சிதைந்து கிடக்கின்றன!

ஆனுல் இக்கதை நடக்கும் காலத்தில்—அதாவது பதினைந் தாம் நூற்றுண்டில்—இந்த நாட்டர்டாம் ஆலயம் பிரசித்திபெற்ற கோயில். வரலாற்று ஆசிரியர்களின் வார்த்தைகளில் வடிக்க வேண்டுமென்ருல் "பார்த்தவர்களை பீதியும் பிரமையும் கொள் ளச் செய்யும் பிரம்மாண்டமானதோர் வேலைப்பாடு." அதன் முகப்பிலே மூன்று மிகப் பெரிய வாசல்கள். அவ் வாயில்களுக்கு மேல் இரண்டடுக்கு மாடிகள். அதற்குமேல் முதல், மூன்ருவது வாசல்களுக்கு நேராக மேகத்தைத் தழுவும் இரண்டு கோபுரங் கள். கோபுரங்கள் என்ருல் ஊசி முனைபோல் கூராக முடிவ தில்லை அவை. தட்டையாக, சதுரமாக, எந்த அளவில் அவை ஆரம்பமாகின்றனவோ அதே சுற்றளவில் முடிகின்றன. கோயி லின் ஒவ்வொரு கல்லும் அந் நாட்டின் சரித்திரத்தை மட்டுமல்ல, அக்காலத்திய கலையின், விஞ்ஞானத்தின் நிலையையும் நிழலாகக் காட்டியது,

இப்பேர்ப்பட்ட நாட்டர்டாம் ஆலயத்தின் ஒரு பகுதியில் ஓர் மரத் தொட்டில் உண்டு. இந்தத் தொட்டிலில் ஆதரவற்றுக் கிடக்கும் அனுதைக் குழந்தைகளை கொண்டுவந்து வைப்பார்கள். பிள்ளையில்லா குறையுள்ளோரோ அல்லது கனிந்த இதயம் படைத்தோரோ அக் குழவியை ஆண்டவனின் அன்பளிப்பு என்று கருதி எடுத்துச் சென்று வளர்ப்பது வழக்கம்.

இந்த மரத் தொட்டிலில்தான் 1467-ம் ஆண்டில் ஓர் ஞாயிறன்று—'குவாசிமோதோ ஞாயிறு' என்று அழைப்பார்கள் கிறித்துவர்கள்—ஓர் சிறு குழந்தை கிடந்தது. குழந்தை என்று கூறுவதைவிட அதை குரூபமான ஓர் மாமிசப்பிண்டம் என்பது தகும். அதன் வலது விழியில் மாத்திரம்தான் ஒளி இருந்தது.

செ

இடது கண் இருக்க வேண்டிய இடத்தில் முட்டைபோன்ற உருண்டையான சதைப்பாகம்தான் வெளியே தள்ளிக்கொண்டிருந்தது. கழுத்தே இல்லேயோ என்று சந்தேகப்படும் அளவுக்கு தலேயும் தோளும் ஒன்ருக இணந்திருந்தன. முதுகு வளேந்து பெரியதோர் கூன்போல உருவெடுத்திருந்தது. நெஞ்செலும்புகளெல்லாம் வெளியே தள்ளி கூடு கட்டியிருந்தன. கால்களும் ஒழுங்கானபடி இல்லாமல், குட்டையும் நெட்டையுமாய் வளேந்து இருந்தன. மொத்தத்தில் சுருக்கமாகச் சொல்லப் போனல் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், அவலட்சணத்தின் வார்ப்படமாகவும் ஒரு சிறிய 'கொரில்லா'க் குரங்காகவும் காட்சியளித்தது அந்த அனுதைச் சிசு.

எவருமே அதன் அருகில் நின்று பார்ப்பதற்கு அச்சப்பட்டுக் கொண்டு நிற்கையில், "இதை நான் எடுத்து வளர்க்கிறேன்" என்று ஒருவர் முன்வந்தார். அவர்தான் நாட்டர்டாம் ஆலயத்தின் பாதிரி, கிளாதே ரோலோ.

●

கிளாதே ரோலோ சிறு வயதாக இருக்கும்பொழுதே அவரை மதத்திற்காக அர்ப்பணித்துவிட்டனர் அவர் பெற்ருேர். இளம் பிராயத்திலிருந்தே புத்தகமும் கையுமாய் இருந்த அப்பையன் தனது பத்தொன்பது வயதிற்குள்ளாகவே வேதப் புத்தகங்களேக் கரைத்துக் குடித்ததுமன்றி, கலே, விஞ்ஞானம், மருத்துவம் ஆகியவைகளோடு, லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு—மொழிகளேயும் கற்றுத் தேர்ந்த வல்லுனரானுர். இந்தச் சமயத்தில்தான் 1466-ல் ஏற்பட்ட கொடும் கொள்ளே நோயிற்கு அவரது தாயும் தகப்பனும் பலியானுர்கள், அவனுக்கோர் பச்சிளம் பாலகனேத் தம்பியாகக் கொடுத்துவிட்டு. வாழ்க்கையே புத்தகத்தின் ஏடுகளில்தான் இருக்கின்றன என்று கருதி வெளியுலகத்தைப் பற்றிச் சிறிதும் கவலேகொள்ளாது இருந்த அவருக்கு, பத்தொன்பது வயதிலேயே, தம்பியைக் காக்க வேண்டும் என்ற பணி சுமத்தப்படவே ஓர் புத்துணர்ச்சி ஏற்பட்டது. பால்மணம் மறக்காத அப்பாலகன் அவரை ஒரு புது மனிதனுக்கினுன். மனேவி மக்கள் இல்லாமல் வாழ்வு நடத்த வேண்டும் என்ற அவரது கொள்கை இப்பொழுது பலமான ஆணிவேருடன் பதிந்துவிட்டது தம்பியின் வருகையால். எனவே அக் குழவியை ஒரு வீட்டில் வளர்க்க விட்டுவிட்டு, மடத்தில் குருவானவராகச் சேர்ந்து, பட்டம் பெற்று, நாட்டர்டாம் ஆலயத்திற்குப் பாதிரியாக வந்துவிட்டார்.

இப்படிப்பட்டவரின் கண்களில்தான் சகலராலும் வெறுத்தொதுக்கப்பட்ட அவ் வேதனே பிம்பம் தென்பட்டது, 'குவாசி' என்ருல் 'அதைப்போல' என்று அர்த்தம். ஒரு வேளே மனிதனேப்போல, ஆனுல் முழு மனிதனுக இல்லாமல், பாதி மனிதனும்

பாதி மிருகமுமாக இருந்ததாலோ அல்லது 'குவாசிமோதோ' ஞாயிறன்று' அக் குழந்தை தனக்குக் கிடைத்ததாலோ, அதற்கு குவாசிமோதோ என்றே பெயரிட்டு, ஒரு காலத்தில் தான் இறந்துபோனல், இந்த வளர்ப்புக் குழந்தையாவது தன் தம்பியை நல்லவிதமாகக் கவனித்துக் கொள்ளட்டும் என்ற எண்ணத்தில் வளர்த்துவந்தார்.

இந்த குவாசிமோதோவின் வருகைக்குப் பின்னல் வளர்ந்திருக்கும் வரலாறு சுவையானதொன்ருகும்.

பக்குவதே என்றோர் பாவை பாரிசில். வனப்பும், வாலிபமான உடற்கட்டும் கொண்ட பெண். சட்டைகள் தைத்து அதில் அழகான பூவேலைப்பாடுகள் கோர்த்து, விற்று, வயிறை நிரப்பிக்கொள்வதுதான் அவள் தொழில். கணவனை இழந்த இவள், கலைப்பிம்பமாக அவதரித்த தன் மகளைச் சீராட்டி, பாராட்டி செல்லமாக வளர்த்துவந்தாள். தனது திறமையெல்லாம் ஒன்று கூட்டி எழில் காலணிகள் இரண்டு செய்து அதைத் தன் பெண்ணுக்குச் சூட்டி அழகு பார்த்தாள்.

இப்படி இருக்கும்பொழுதுதான் ஒரு நாள் பாரிஸ் பட்டணத்திற்கு ஒரு நாடோடிக் கூட்டம் வந்தது. ஜோசியமும், ஆருடமும் கணித்து, ஆடிப்பாடி, வருவாய் தேடிவரும் அந்த 'ஜிப்சி' கூட்டத்தாரிடம் சென்று தனது மகளின் எதிர்காலத்தைப் பற்றி, விசாரித்தாள் பக்குவதே. அவர்களும் இவளது மடமையை மூலதனமாகக்கொண்டு, அம் மழலையமுது பேரும் புகழும் பெற்று, சீரும் சிறப்புமாக செங்கோலேந்தும் என்று சொல்லி வைத்தனர். அன்றிரவு இதை அக்கம்பக்கத்தாரிடம் சொல்லி பெருமைபட்டுவிட்டு வீடு திரும்பிய அவளுக்கு இடியெனத்தகும் காட்சியொன்று காத்திருந்தது.

தொட்டிலிலே கிடத்தியிருந்த அவள் மகளைக் காணவில்லை! அதற்குப் பதிலாக அசிங்கமே உருவான பிறவி ஒன்று அங்கே புரண்டுகொண்டிருந்தது! அந்த நாடோடிக் கும்பலின் சதியாகத் தான் இருக்கும் என்று கருதி ஊருக்கு வெளியே கூடாரம் அடித்திருக்கும் அக் கூட்டத்தினரை நோக்கி ஓடினுள், பிள்ளையைப் பறிகொடுத்த அப்பேதை! ஆனல் அவர்களைக் காணவில்லை. அதற்குப் பதிலாக அங்கே நெருப்பை வளர்த்திருந்த அறிகுறியும், பாதி எரிந்துபோன தன் மகளின் சட்டைத் துணியும், அவளுடைய ஒற்றைக் காலணியும், சில இரத்தத் துளிகளும், எலும்புகளுமே இருந்தன! காடு, மலைகளில் எதையும் வேட்டையாடித் தின்று குடலை நிரப்பிக்கொள்ளும் அக் கும்பல் தன் மகவையும் பசிக்கு உணவாகக்கொண்டுவிட்டது என்பதை அறிந்துகொண்டு அலறினுள்.

இதற்குப் பிறகு உலகமே இருண்டுவிட்டது அவளுக்கு. ஊருக்கு ஒதுக்குப்புறத்தில்உள்ள ஓர் அறையில்-ரோலண்டு டவர் என்ற இடத்தில்—புலம்புவதே தொழிலாகக்கொண்டு காலந்

தள்ளி வந்தாள். அன்றிலிருந்து 'ஜிப்சி' கூட்டத்தைக் கண்டால் வயிறெரிந்து திட்டுவது அவள் வழக்கமாகிவிட்டது. சாலையைப் பார்த்திருக்கும் சன்னல் வழியாக போவோர் வருவோர் அவளுக்கு ஏதாவது உணவுப் பொருள்கள் அளிப்பது உண்டு. 'சிஸ்டர் கூடுல்' என்றே அவர்கள் அவளை அழைத்தார்கள்.

அவள் தனது வீட்டைவிட்டு ஓடிய பிறகுதான் அங்கே இருந்த அந்த 'கோணல் குழவியை' நாட்டர்டாம் ஆலயத்தில் சேர்த்தனர், பக்கத்து வீட்டார்!

●

இவ்விதம் வந்த குவாசிமோதோவைத்தான் தன் அருமருந்தன்ன மகனாக வளர்த்து, அவனுக்கு வயது பதினைந்தானவுடன், கோயிலில் மணியடிக்கும் பணியைத் தந்தார் பாதிரியார்!

இரண்டு பூதங்கள்போல் நிற்கும் அவ்விரு கோபுரங்களிலும் மொத்தமாக பதினைந்து மணிகள் உள்ளன. ஆனால் குவாசிமோதோவுக்கு 'மேரி' என்றழைக்கப்படும் எல்லாவற்றையும் விடப் பெரிய மணிமீதுதான் அளவு கடந்த காதல்!

'மேரி' குடிகொண்டிருக்கும் அந்தக் கோபுரம்தான், கூனனுக்குக் கூடு, குடித்தனம், வீடு வாசல், நாடு, உலகம் எல்லாம். அங்கேயே உண்டான், உறங்கினான், வளர்ந்தான். தன்னுடைய சக்தியின் கீழ் அக் கோயிலை அடிமைப்படுத்தி வைத்திருப்பவன் போலவும், அவனது ஒவ்வொரு அசைவுக்கும் அது வளைந்து கொடுப்பது போலவுந்தான் தோன்றும், சுவரில் பல்லி ஊர்வதுபோல் அவ்வளவு வேகமாக அதன்மீது அவன் தொத்திச் செல்லும்பொழுது!

காலப்போக்கிலே, மணியை அடித்து அடித்து, அவை எழுப்பிய சத்தத்திற்கு தன் செவிப் பறையை இரையாக்கி விட்டான் அவன்! ஆம்...அந்தப் 'பேய்'ச் சத்தம் அவனை செவிடாக்கிவிட்டது. உலகத்துக்கும் அவனுக்கும் தொடர்புகொண்டிருந்த அந்த ஒரு வாசலும் அடைக்கப்பட்டுவிட்டது. அவனது நெஞ்சமும் இருட்டுக் குகையாய் ஆகிவிட்டது. இதனால் வேதனையடைந்த அவன் எங்கே தன் செவிட்டுத்தன்மை வெளிக்குத் தெரிந்துவிடப் போகிறதோ என்று பேச்சையும் சுருக்கிக் கொண்டான்.

இந்த உலகத்திலே இரண்டின் மீதுதான் பக்தியும் பயமும் அவனுக்கு. ஒன்று நாட்டர்டாம் ஆலயம். மற்றொன்று அவனை ஊட்டி வளர்த்த பாதிரி. கோபுரத்தின் உச்சியிலிருந்து 'கீழே விழு' என்று அந்த குரு ஆணையிட்டால்கூட கண் இமைக்கும் நேரத்தில் அதை செய்து முடித்துவிடுவான், விளைவு கருதாமல்!

எதற்காக பல கஷ்டங்களைத் தன்மீது போட்டுகொண்டாரோ பாதிரி, அது நிறைவேறவில்லை. தம்பியை நல்லவனாக, அறிஞனாக ஆக்க வேண்டும் என்ற அவரது கனவு கனவாகவே

இருந்துவிட்டது. என்னதான் பன்றியைக் குளிப்பாட்டி பஞ்சணையில் படுக்கவைத்தாலும் அது சகதியைத்தானே தேடும்? அதைப்போலத்தான் அவர் தம்பி ஜேகனும்! சோம்பல், ஊதாரித்தனம், விபச்சாரம்—இம் மூன்றையும் கடைந்தெடுத்த சரக்குதான் ஜெகன்.

இதனால் மிகவும் மனமுடைந்துபோன பாதிரி தன் வாழ்நாளின் மிகுதியை, மீண்டும் படிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் செலவிடலானார். அவரது நடவடிக்கைகளைக் கண்ட பலர் அவர் ஒரு மந்திரவாதியென்றும், அவர் வளர்த்துவரும் குட்டிச்சாத்தான்தான் குவாசிமோதோ என்றும் பேசிக் கொண்டனர்!

அவருக்கும் நாடோடிக் கூட்டத்தைக் கண்டால் பிடிக்காது. கண்கட்டி வித்தை காட்டிக்கொண்டு, அக்கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் அவர்கள் வந்துவிட்டால், அவர்களை ஒழித்து விட்டுதான் மறுகாரியம் பார்ப்பார்!

சிறிது நாட்களாக அடிக்கடி பெருமூச்செறிவதும், ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதும், பயங்கரமாக சூன்யவெளியைப் பார்ப்பதும் அவருக்கு வழக்கமாகி விட்டன. அவருக்குத் துணிவெளுக்கும் தொழிலாளிகூட, அவரது உடைகளில் இரத்தக் கறைகளைக் கண்டு திகைத்திருக்கிறான்!

●

லா எஸ்மேரால்டா ஒரு நாடோடி நாட்டியக்காரி. ஒற்றை நாடி உடம்பு. ஒரு பிடியிலே அடங்கும் இடுப்பு. ஒய்யாரமான நடை; கருவண்டுகள் போன்ற இரு சிறுத்த கண்கள். அதில் குதித்தாடும் அலட்சியமும் குறும்பும் நிறைந்த பார்வை; காதுகளிலே இரண்டு வளையங்கள், கழுத்திலே பாசிகளால் ஆன சங்கிலி, அந்தச் சங்கிலியின் முனையிலே சிறு பை—அதுதான் அவளது 'தாயத்து': ஒரு கையிலே வட்டவடிவமான கொட்டு; மறு கையிலே ஒரு ஆட்டுக் குட்டி—இதுதான் அவளது தோற்றம்.

அவளது நடனத்தைக் கண்டவர் அது கடல் அலைகளா அல்லது பாம்பின் நெளிவுகளா என்று வியப்பர். ஆனால் அவள் ஆடும் இடங்களில் கூட்டம் அதிகமாக வருகிறதென்றால் அதற்குக் காரணம் அவள் அழகுமாத்திரமல்ல; அவளுடன் இருந்த ஆட்டுக் குட்டியின் அசாத்திய திறமைதான். அவள் என்ன சொன்னாலும் செய்யும், கணக்குப் போடும், ஆட்களை கிண்டல் பண்ணும், ஆடும், பாடும்—அவ்வளவும் அந்த நாட்டியக்காரியின் வார்த்தை நளினத்திலே! ஆனால் ஊர் மக்கள் இவள் மந்திரம் கற்றிருக்கிறாள்; மாயப்பிசாசின் வேலைகள் காண்பிக்கின்றாள் என்று பேசிக்கொண்டனர்.

அன்று நடந்த நாட்டியத்தில் அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர் இருவர். ஒன்று கிரிங்காய்ரே என்ற கவி; மற்றொருவர் நமக்கு அறிமுகமான ரோலோ பாதிரி!

கிரிங்காய்ரே என்பவன் வறுமையினுல் வேதாந்தியானவன். பசி கிள்ளும்போது பாட்டுகள் தானுகவே கிளம்பும். இந்த நாடோடியைக் கண்டவுடன் அவள்மீது மையல் பிறந்தது அவனுக்கு. நாட்டியம் முடிந்து கூட்டம் கலைந்ததும் அவள் பின் எங்கெங்கோ சுற்றினுன். இருள் சூழ்ந்து கொண்டும் அவன் அவளை விட்டபாடில்லை. இரண்டொருமுறை அவள் திரும்பி இவனை முறைத்துப்பார்க்கவே கொஞ்சம் தயங்கித் தயங்கிச் சென்ருன். ஒரு தெருவின் மூலையில் அவள் திரும்பியவுடன் 'ஆ' என்ற அலறல் சத்தம் கேட்டது. ஓசைவந்த திசைநோக்கி ஓடி வந்த கவி, அவளை ஓர் பேய் உருவம் பலவந்தமாகத் தூக்க முயற்சிப்பதையும், ஒரு ஓரமாகக் கருத்த உருவம் ஒன்று அதைப் பார்த்துக் கொண்டிருப்பதையும் கண்டான். பலவந்தத்தில் ஈடுபட்டிருக்கும் அப் பயங்கர உருவம் குவாசிமோதோ என்ற கூனன்தான்! அதனிடமிருந்து அவளை விடுவிக்க முயன்ற கிரிங்காய்ரேயின் முகத்தில் ஊமைக் குத்துகள் விழுந்தன; மயக்கமுற்றுச் சாய்ந்தான் சாலையோரத்திலே அந்தக் கவிஞன்!

கூனன் எஸ்மெரால்டாவைத் தூக்கி ஓட எத்தனிக்கும் சமயம் ஓர் குதிரை வீரன் அங்கு பாய்ந்து வந்தான்; அவளைப் பின் தொடர்ந்து பத்து பதினைந்து வீரர்கள்! கண நேரத்தில் கூனனுடன் வந்த கருத்த உருவம் மறைந்தது! குதிரை வீரர்கள் கூனனை வளைத்துக் கொண்டு கட்டிப் பிணைத்து விட்டனர். அவ்வீரர்களின் தலைவன்—காப்டன் போயிபஸ் என்பான்—அந்த நாட்டியக்காரியை விடுவித்துப் போக வழிசெய்தான். அப்பொழுது அவர்கள் இருவரும் பார்த்துக் கொண்ட குளிர்ப் பார்வை......?

●

மயக்கம் தெளிந்து எழுந்த கிரிங்காய்ரே அந்த இரவிலே பாதை தெரியாமல் தடம்புரண்டு சென்று கொண்டிருந்தான். இரண்டொரு பிச்சைக்காரர்கள் அவனைச் சூழ்ந்தனர், ஏதாவது கிடைக்கும் என்று கருதி. அவர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, தன் வழியே போய்க்கொண்டிருந்தவன், எங்கோ இறக்கமான ஓர் இடத்திற்குப் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்தான். தான் வந்தது தவருன பாதை என்று திரும்ப முயன்றபோது ஒரு பிச்சைக்காரக் கூட்டமே அவனைச் சூழ்ந்து, உள்ளே தள்ளிக் கொண்டு சென்றது. அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது, எப்பேர்ப்பட்ட அதளபாதாளப் படுகைக்கு வந்திருக்கிருேம் என்று!

அது ஓர் திருடர் முகாம்; கள்வர் குகை! களவு, கொலை, சூது புரிந்தோருக்கெல்லாம் புகலிடம் அளிக்கும் வீடு! இரந்து உயிர்வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருப்போர், கெட்டலைந்து போனேர், அங்கங்களை இழந்தோர், நாடற்ருேர்—அத்

தனே பேரும் தங்களுக்கென்று ஓர் அரசு ஏற்படுத்தி ஆட்சி புரிந்த இடம்தான் அது!

அந்த 'நீதிமன்றத்தின்' முன் குற்றவாளியாக நின்முன் கிரிங் காய்ரே. அவன் செய்த முதல் குற்றம் அனுமதி இல்லாமல் அவர் கள் நாட்டில் பிரவேசித்தது; இரண்டாவது அங்குள்ளோர்க்கு 'வாய்க்கரிசி' போட பணமில்லாமல் இருந்தது. இந்த மாபெரும் குற்றங்களுக்காக அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனே தூக்கு! அவர்கள் வழக்கப்படி எந்தப் பெண்ணுவது குற்றவாளியைக் கணவனுக ஏற்றுக் கொண்டால் தண்டனை ரத்து செய்யப்படும். ஆனுல் அன்றுடங் காய்ச்சியான.—அரைப்பட்டினியான இந்த கையாலாகாதவனே எவள் ஏற்றுக் கொள்வாள்?

இந்தச் சமயத்தில்தான் அங்கு வந்தாள் எஸ்மெரால்டா. அவ ளேக் கண்டாலே அடிபணிந்து விடும் அந்த மன்றம். கவி நின்று கொண்டிருந்த பரிதாபமான நிலையைக் கண்டு இரக்கப்பட்டு, 'இவனே நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்முள்.

கவியும் கன்னியும் கணவனும் மனேவியுமாயினர். கிரிங்காய் ரேயுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லே. சோற்றைக் காணுமல் சுருண்டு கிடந்தவன் முன்னுல், பழம், பாயசம், பத்துவகை கறி களோடு விருந்து படைத்தால்? தன் மனேவியோடு கொஞ்சப் போனுன், நெஞ்சத்திலே இன்ப நினேவுகளேத் தேக்கிக்கொண்டு. பொங்கி எழுந்த எஸ்மெரால்டாவோ, "என்னய்யா! நரிக்கு இளக் காரம் கொடுத்தால் நாட்டாண்மைக்கு நான் இருக்கிறேன் என்கு மாம்: அதைப்போல, போனுல் போகிறது; மனிதன் அநியாய மாகச் சாகப்போகிருனே, காப்பாற்றுவோம் என்று வேறுவழி யில்லாமல் மணந்து கொண்டால், மஞ்சத்துக்கு அழைக்கிறீரே— நீர் எனக்குக் கணவனுமல்ல, காதலனுமல்ல—வேண்டுமானுல் நண் பனுக இருக்கலாம்; தெரிகிறதா? இல்லேயென்முல்......" என்று மிரட்டினுள், நினேவுகளிலே போயிபஸின் உருவத்தைச் செதுக் கிக் கொண்டே.

கிரிங்காய்ரேயும் எங்கே மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்திலே ஏறிவிடப் போகிறதோ என்று 'கப்சிப்' என்று அடங்கி விட்டான்.

●

அரசாங்க வீரர்களிடம் கைதியான குவாசிமோதோ மீது நீதிமன்றம் மூன்று குற்றச்சாட்டுகளேத் தொடுத்து, தண்டனே விதித்தது. இரவு நேரத்தில் நகரில் குழப்பம் உண்டாக்கியதற் காகவும், தனித்தொரு பெண்ணே பலாத்காரத்தினுல் அபகரித் துச் செல்ல முற்பட்டதற்காகவும், காவலாளிகளேத் தாக்கியதற் காகவும் சித்ரவதைக் கூடத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கட்டளே பிறப்பித்தது.

பத்தடி உயரத்திற்கு ஒரு மேடை. அதன் நடுவிலே உள்ள ஒரு அச்சின்மீது ஒரு சக்கரம். இந்தச் சக்கரத்தின் நடுவே ஒரு

உயரமான கம்பம். சக்கரத்தின் மீது முழந்தாள் பணியவைத்து கைகளையும் கால்களையும் அக் கம்பத்தில் கட்டிவிட்டு, சக்கரத்தை சுழற்றுவார்கள். குழுமியிருப்போர் ஒவ்வொருவர்க்கும் குற்றவாளியின் முகம் தெரியட்டும் என்று. அப்படிச் சுற்றும் பொழுது சவுக்கடிகள் 'சரசர'வென்று விழும். இதுதான் சித்ர வதைக் கூடத்தின் அமைப்பும் செயல் முறையும்.

கூனனை அங்கே கொண்டுவந்து கட்டினார்கள். அதைச் சுற்றி திரளான பெருங்கூட்டம் வேடிக்கைப் பார்க்கக் காத்துக் கொண்டிருந்தது. இதெல்லாம் எதற்காக என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த கூனனின் முதுகிலே 'பளார், பளார்' என்று அடிகள் விழுந்தவுடன்தான் கனவுலகத்திலிருந்து மீண்டான், நெளிந்தான், துடித்தான். சிறிது நேரம் திமிறிப் பார்த்தான். ஆனால் தன் வலிமைக்குக் கட்டுகள் விட்டுக்கொடுக்காது என்று கண்டவுடன் சோர்ந்து விட்டான்.

மக்கள் கூட்டம் கிண்டல் ஈட்டிகளை வீசியது. காரி உமிழ்ந்தது. கற்களும், கேலிச் சொற்களும் மக்கள் எத்தகைய வரவேற்பிதழ் வாசித்தளிக்கிறார்கள் என்பதை உணர்த்திற்று, கூனனுக்கு. வேதனைக் கண்களோடு சுற்றுமுற்றும் பார்த்தபோது அவனுக்கு விருந்தொன்று கிடைத்தது!

ஆமாம்...கூனனது வளர்ப்புத் தந்தை, கோயில் பாதிரி, தூரத்தில் வந்து கொண்டிருந்தார், எப்படியும் இந்த நரகத்திலிருந்து மீட்டுவிடுவார் என்று ஆவலோடு, புன்சிரிப்பு கண்களிலே புரண்டோட அவர் வருகையை எதிர்பார்த்தான். அண்மையில் வந்த அவர் குற்றவாளியை அடையாளங் கண்டவுடன், முகத்திலே வெறுப்பு கொட்டிட, வந்த சுவடு தெரியாமல் திரும்பினார்!

ஏக்கமும் ஏமாற்றமும் சூழ்ந்தன கூனனை. யாருக்காக இந்தத் தண்டனையை அனுபவிக்கிறானோ, எவருடைய கட்டளையை சிரசில் தாங்கி அந்த நாடோடிப் பெண்ணை அபகரித்துச் செல்ல முயன்றானோ அந்த கருணாமூர்த்தி, கர்த்தரின் பிரதிநிதி, கண்கண்ட தெய்வம், ஒரு கடைக்கண் பார்வைக்குக்கூட பஞ்சம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்!

"தண்ணீர், தண்ணீர்" என்று கதறிய கூனனுக்கு, எச்சில்தான் பரிசாகக் கிடைத்தது, கூடியிருந்த ஏராளமான மக்களிடமிருந்து. அந்த சமயத்தில்தான் ஒரு ஆச்சரியம் நடந்தது. கூட்டத்தை விலக்கிக்கொண்டு கொட்டுடனும், ஆட்டுக்குட்டியுடனும் உள்ளே நுழைந்தாள் எஸ்மெரால்டா, கையில் வைத்திருந்த தண்ணீர்ப் பையுடன் மேலே ஏறினாள். திகைப்பால் கண்களை இமைக்கக்கூட மறந்துபோன கூனனின் வரண்ட தொண்டையைக் குளிப்பாட்டினாள், 'மன்னித்தோம், மறந்தோம்' என்ற பொன்மொழியை ஆபரணமாகக் கொண்ட அந்த மாதரசி!

இவ்வளவு நேரம் சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருந்த கூட்டம்கூட செயலிழந்து வெட்கி நின்று விட்டது.

அக்காட்சியைக் கண்டு, 'த்ச்! த்ச்!' என்று அனுதாபம்—சொரிந்தது.

பாதகம் புரியச் சொன்னவரோ, பாங்காக, பக்குவமாக வெளியேறி விட்டார், இச்சோகப்படலத்தை காணக்கூட சகிக்காமல்! ஆனால் பாதிக்கப்பட்ட பாவையோ, தனக்கு ஏற்படுத்திய இன்னலையும் மறந்து, ஈவு இரக்கத்திற்கு அடிமையாகி, ஈர நெஞ்சத்தின் இலக்கணத்திற்கோர் எடுத்துக் காட்டாகி விட்டாள்!

●

உருப்படாதவனாக, ஊதாரியாக, ஸ்திரீலோலனாக மாறி விட்ட ஜெகன்—பாதிரியின் தம்பி—அடிக்கடி தன் தமையனிடம் வருவது வழக்கம், பணம் கறந்து செல்ல. அப்படி ஒரு நாள் தன்னிடம் வந்த தம்பியைப் பின்தொடர்ந்த சுவாமியார் அவனும் கேப்டன் போயிபசும் குடித்து விட்டு பேசிக்கொண்டிருப்பதை ஒதுங்கி நின்று கேட்டார்.

அப்பொழுதுதான், போயிபசுக்கு அந்த நாடோடி எஸ்மெரால்டாவின் மீது ஒரு கண் உண்டு என்றும், இப்பொழுது இதே இரவு, அவளுடன் கொஞ்சி விளையாடுவதற்கு—தன் காதல் பசியைத் தீர்த்துக் கொள்வதற்கு—அங்கே போகிறான் என்றும் அவருக்குத் தெரியவந்தது.

'கும்பிடப்போன கடவுள் குறுக்கே வந்தாற்போல் ஆசாமி நம் கண்ணில் சிக்கியிருக்கிறான்' என்று நினைத்துக்கொண்டே தன் உடம்பை யெல்லாம் நன்றாகப் போர்த்திக் கொண்டு, முகம் வரை துணியையும் இழுத்து விட்டுக் கொண்டு, பாதிரி என்ற அடையாளம் தெரியாதவாறு போயிபசை பின் தொடர்ந்தார்.

எஸ்மெரால்டா போயிபஸை 'திருடர் குகை'யைத் தவிர்த்து வேறோர் இடத்திற்குத்தான் வரச் சொல்லியிருந்தாள். வாசலைக் காத்த கிழவிக்கு இரண்டு நாணயங்களைத் தள்ளிவிட்டு அவள் அறையை நாடினான் போயிபஸ். இரண்டு பேரும் ஆவி சேர்த்து அணைத்துக் கொண்டதையும், முத்தம் பரிமாறிக் கொள்வதையும் பார்த்த பாதிரிக்கு வெறி கரை புறண்டோடியது; தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதபடி தவித்தார். தங்கம் போல் மின்னும் அவள் மேனி இன்னொருவன் மார்பிலே புதைவதை, கரங்களில் துவளுவதை, அதரங்களில் பதிவதை அவரால் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆத்திரம் அவர் கண்களுக்குத் திரையிட்டது. ஆவேசம் அவர் அறிவைக் குழப்பியது. திடீர் என்று மறைத்து வைத்திருந்த கத்தியோடு உள்ளே பாய்ந்தார். 'சதக்' கென்று போயிபஸ் உடம்பிலே பாய்ச்சினார்.

சுவாமியாரைக் கண்டவுடன் பயத்தால் திறந்த அவள் வாய், 'ஐயோ' என்று கத்தக்கூட மறுத்துவிட்டது. இரத்தத்

தைக் கண்டவுடன் அவளும் மயக்கமுற்று சாய்ந்தாள்: தரையில் அல்ல, காத்திருந்த குருவானவரின் கரங்களில்! பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டுகளைப் போன்ற இரு உதடுகள் தன் முகத்தை ஒத்தி எடுப்பதை உணர்ந்து கொண்டே நினைவை இழந்தாள்!

அவள் மறுபடியும் கண் விழித்த போது தன்னைச் சுற்றி நகரக் காவலர்கள் சூழ்ந்திருப்பதைப் பார்த்தாள். பாதிரியாரைக் காணவில்லை. போயிபஸ் இரத்தச் சேற்றிலே மிதந்து கொண்டிருந்தான். "விலங்கிடுங்கள். இழுத்துவாருங்கள். இந்த சூழ்ச்சிக்காரி, சூன்யக்காரி, தளபதியைக் கொன்றுவிட்டாள்" என்று கட்டளையிட்டான் காவல் தலைவன்.

●

துணைவி எங்கு போனாளோ, என்ன ஆனாளோ, எதற்காக திடீர் என்று மறைந்தாளோ என்று பித்தம் பிடித்தவன் போல் அலைந்துவந்த கிரிங்காய்ரே, ஒருநாள் நீதி மன்றத்திலே கூட்டம் அதிகமாக இருக்கவே உள்ளே நுழைந்தான். மன்றம் எஸ்மெரால்டாவைக் குற்றக் கூண்டிலே நிறுத்தி விசாரணை நடத்திக் கொண்டிருந்தது.

அவள் ஒரு மாயக்காரி என்றும், மந்திரங்களால் பேய் பிசாசுகளை அழைக்கிறாள் என்றும், நகரிலே அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறாள் என்றும், போயிபஸை மயக்கி, பணத்திற்காக அவனைக் குத்திவிட்டாள் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. அவள் தான் நிரபராதி எனவும், தனக்கு மந்திரம் எதுவும் தெரியாதென்றும், தான் கற்றுக்கொடுத்த வித்தைகளைத்தான் ஆட்டுக் குட்டி செய்கிறதென்றும், கொலைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை, அதைச் செய்தவர் ஒரு குருவானவர் என்றும் வாதாடினாள். குருவானவரைக் குற்றவாளி என்று அவள் சுட்டிக் காட்டியபோது "இவள் எல்லோரையும் ஏய்க்கப் பார்க்கிறாள். முக்திக்கு வழி தேடும் ஒரு முனிபுங்கவரையே—பக்திப் பூஜைகள் கொண்டிருக்கும் ஒரு பாதிரியையே—குற்றம் சாட்டுகிறாள் என்றால் இவள் சாதாரணமானவளல்ல. நம் வழக்கப்படி, குற்றவாளி குற்றத்தைக் கக்கும் மட்டும் சித்ரவதை செய்யுங்கள்" என்று ஆணையிட்டார் நீதிபதி.

அவளது அழகான கால்களை இரும்பு 'பூட்சு'களில் திணித்து முடுக்கினார்கள். வலி பொறுக்க முடியாமல் கதறினாள், கண்ணீரால் நனைந்தாள். 'ஒப்புக்கொள்கிறாயா?' என்ற ஒரே கேள்விதான் வெடித்துக் கிளம்பியது அக் கொடுமையாளனின் வாயினின்று. வேதனையை வெகுநேரம் சகித்துக் கொள்ள முடியாத அவ் வனிதை சம்மதத்திற்கு அறிகுறியாக தலையை ஆட்டினாள். அவர்கள் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும்—"நீ ஒரு மாயக்காரிதானா? சாத்தானை ஆட்டிப் படைகிறாயா? ஆட்டுக்குட்டி

மூலம் பேய் பூதங்களுடன் பேசுகிருயா? போயிபஸை பேயின் துணை கொண்டு குத்திக் கொன்ருயா?" போன்ற சகல கேள்விகளுக்கும்—'ஆமாம், ஆமாம்' என்றே பதிலிறுத்தாள். சித்ரவதையைத் தாங்கச் சக்தியற்ற அச் சித்திரப் பதுமை.

குற்றத்தை ஒப்புக்கொண்ட அந்த நாடோடிக்கு தண்டனை தீட்டப்பட்டது. 'இம்மாநிலத்து மன்னன் விருப்பத்துக்குட்பட்ட நாளில் சரியாக பகல் பன்னிரெண்டு மணிக்குக், கழுத்திலே கயிறு கட்டி, கட்டை வண்டியிலே ஏற்றப்பட்டு, நாட்டர்டாம் ஆலயத்திற்கு இழுத்துச் செல்லப்படுவாய். அங்கே இரண்டு ராத்தல் எடையுள்ள மெழுகு வர்த்தியை கையில் பிடித்துக் கொண்டு செய்த பாவத்திற்கு பிராயச் சித்தமாக தவம் இருக்க வேண்டும். பிறகு கொலைக் களத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டு அங்கே உனக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்' என்பதுதான் அந்த இளஞ் செடிக்கு, தளிர்க் கொடிக்கு, குளிர் நிலவுக்குக், குணக் குன்றுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு!

●

தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்தினம் சிறையில் பூட்டப்பட்ட கைதி தன் பாவங்களுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்க வேண்டும். குருவானவரிடம் அன்று இரவு 'பாவ சங்கீர்த்தம்' கேட்க சுவாமியார் வந்தார். ஆனால் அவரைக் கண்டவுடன் 'ஓ' வென்றலறிவிட்டாள் எஸ்மெரால்டா. ஆம்... எந்தக் குரு அவளுடைய இன்றைய பரிதாப நிலைக்குக் காரணமோ அவரே அவளுக்கு பாவ மன்னிப்பு அளிக்க வந்துள்ளார்!

"கண்ணே எஸ்மெரால்டா! வியப்பாக இருக்கும் உனக்கு. ஆனால் உன்னை மனதார காதலிக்கிறேன் நான்...தயவு செய்து என் பேச்சைக் கேள். கள்ளங் கபடமற்ற புள்ளினமாக எவ்வளவோ அமைதியாகத்தான் இருந்தேன்: நீ என் கண் முன்னல் தென்படும்வரை! விஞ்ஞானம் உண்டு என் வேலையுண்டு: ஜெபமாலை உண்டு, பக்திப் பாமாலை உண்டு என்று காலங்கடத்தி வந்தேன், பெண் என்ற வாடையே கூடாதென்று.

"அப்பொழுதுதான் ஒருநாள் உன்னை தெருவோரத்திலே, நாட்டியக் கோலத்திலே பார்த்தேன். உலகத்து அழகையெல்லாம் ஒருசேர உருக்கி வார்த்த உன் உருவம் என்னை உருக்குலைத்துவிட்டது. எவ்வளவோ உன்னை மறக்க முயன்றேன். உன் நிழலைக்கூடப் பார்க்க அஞ்சினேன். ஆனுல் என்ன செய்வது: உன் ஆடலோடு பாடலும் சேர்ந்து, என்னை அலைகடல் சருகாக, ஆலையிட்ட கரும்பாக ஆக்கின.

"உன் மாயசக்தி, மந்திர விளையாட்டு இவைகளிலிருந்து தப்ப நான் முதலில் துணைகொண்டது சட்டம். இந்தத் தெருப் பக்கமே உன் காலடி படக்கூடாது என்ற உத்தரவு வாங்கினேன். அப்படியாவது என் கண்களிலிருந்து நீ மறைந்தால் மன நிம்மதி

யடையலாமென்று! ஆனால் நீயோ உன் ஆட்டபாட்டங்களுக்கு இந்த இடத்தைத்தான் தேர்ந்தெடுத்தாய் மீண்டும் மீண்டும். பின் உன்னை அபகரித்துவர திட்டமிட்டேன். அதிலிருந்தும் தப்பி விட்டாய் நீ. பிறகுதான் உன்னைக் குற்றவாளியாக்கி கொடும் சிறையில் அடைக்கத் திட்டமிட்டேன். அந்த நிலையிலாவது உன்னை இணங்க வைத்து அணைத்து ஆனந்தம் கொள்ளலா மென்று.

"கனிப்பாகே! என்னைக் கைவிட்டுவிடாதே. உனக்கு ஒரு தீங்கு என்றால் என் உள்ளம் எப்படித் தீயாக எரிகிறது தெரியுமா? உன்னை நினைத்து உடம்பையெல்லாம் புண்ணாக்கிக் கொள்கிறேன். பார்த்தாயா இரத்த வடுக்களை? தயவு செய்து என்னிடம் இரக்கம் காட்டு. ஒரு பாதிரியாக இருப்பது—பாங்கியைக் காதலிப்பது—ஆனால் அவளால் வெறுக்கப்படுவது—இதனால் நான் எத்துணை அவதியுறுகிறேன் என்று தெரியுமா? என்னுடைய இரத்தக் குழாய்களில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோல் இருக்கின்றதே! காதல் நோயில் ஒருவன் கருகிச் சாகிறான் என்றால் அது நான்தான் கண்ணே!

"நீ சரி என்று வார்த்தை சொல்லிவிட்டால் போதும். மரண ஊஞ்சலுக்குப் பதில் மலர் மஞ்சம் தயாராக இருக்கிறது. கொலைக் களத்திலிருந்து உன்னை தப்பவைத்து விடுவேன்—நீ சாக வேண்டாம். உன் பொன்னான உடம்பை, பொசுக்கும் வெயி லில் இழுத்துவருவதைப் பார்க்க என்னால் முடியாது...வா...வா... ஒரே ஒரு முத்தம்..."—அவளுக்குப் பேச இடங்கொடுக்காமலே தன் ஆசைக் கனலைக் கொட்டிக்கொண்டே நெருங்கினார் குரு.

ஆனால் அவளோ பதறி; எட்டிப்போய் "போயிபஸ் போன பிறகு எனக்கு என்ன வாழ்வு வேண்டியிருக்கிறது? எனக்கு உயிர் வெல்லமல்ல. உள்ளத்தை உம்மிடம் தந்துவிட. நான் சாகத் தயாராக இருக்கிறேன்...நீர் போகலாம்...போ...போ... நீர் கொண்ட செயலுக்காக வெட்கப்படு...எனக்கு மன்னிப்பு தர உமக்கு யோக்கியதை இல்லை...முதலில் உமது மீதுள்ள கறையை. களங்கத்தைக் கழுவிக்கொள்ள கர்த்தரிடம் போய் மன்றாடு...உம் ஒருவரால், உமது குலத்துக்கே, பாதிரிகள் என்ற புனிதக் குழுவினருக்கே அவமானம்...போ...நிற்காதே" என்று கத்தினாள்.

சப்தம் கேட்டது. காவலாளி வரும் சலசலப்பு கேட்கவே உடைந்த நெஞ்சத்துடன் திரும்பினார் ப்ரோலோ.

மறுநாள் வண்டியில் ஏற்றி ஆலயத்திற்கு அழைத்து வந்தனர் எஸ்மெரால்டாவை. நகர மக்களே திரண்டிருந்தார்கள். இக் காட்சியை ரசிப்பதற்கு. ப்ரோலோ அவளுக்கு ஆசீர்வாதம் அளிக்க வந்தபோது உள்ளே திரும்பி விட்டார் பாதிரியார்.

ஆனால் இந்த ஆரவாரங்களையும் சம்பவங்களையும் உன்னிப் பாகக் கவனித்துக்கொண்டிருந்தது கோபுரத்தின் உச்சியிலே ஒரு

உருவம், குவாசிமோதோவுக்குப் புரிந்துவிட்டது என்ன நடக்கப் போகிறது; எதற்காக அவளை வண்டியில் ஏற்றிச் செல்லப்போகிறார்கள் என்று! கொஞ்சமும் தாமதிக்காமல், ஒரு நீண்ட கயிற்றின் ஒரு முனையை உச்சியில் உள்ள ஒரு கல்லில் கட்டிவிட்டு, மறுமுனையை கீழே தொங்கவிட்டான். கண்ணாடியில் மழைத் துளி தவழுவதுபோல 'சர்ர்' என்றிறங்கினான் தரையில்...இரண்டு குத்து...நான்கு உதை—அடியற்ற மரம்போல் சாய்ந்தனர் காவலாளிகள். அனைவரும் அதிர்ச்சியால் அசைவற்றிருந்த அந்நேரத்தில் லாவகமாக எஸ்மெரால்டாவைத் தூக்கிக்கொண்டு 'அடைக்கலம்! அடைக்கலம்' என்று கூவிக்கொண்டே கோபுரத்தில் ஏறிவிட்டான்!

அந்தக் காலத்திலே ஒரு விதிவிலக்கு உண்டு. குற்றவாளி ஒரு குறிப்பிட்ட இடங்களில் அடைக்கலம் புகுந்து விட்டால் சாதாரண நீதிமன்றம் ஒன்றும் செய்ய முடியாது. அரசரின் ஆணைக்குட்பட்ட பாராளுமன்றம்தான் அவர்களை அசைக்க முடியும். அப்படிப்பட்ட இடங்களில் ஆலயங்களும் ஒன்று. ஆனால் எங்கே இவ்விதம் தஞ்சம் புகுந்து விடுகிறார்களோ அவ்விடத்தை விட்டு அவர்கள் அகலக்கூடாது. மறுபடியும் வெளியுலகில் காலடி எடுத்து வைத்தால், சட்டம் தனது கடமையை செய்து விடும். எனவே கூனனால் கோயிலில் அடைக்கலம் பெற்றுவிட்ட எஸ்மெரால்டாவை காவலாளிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோவிலைச்சுற்றி பாதுகாப்பு போட்டுவிட்டு அவர்களும் கூட்டத்தோடு கலைந்தனர். இந்த விவரம் பூராவும் பின்னால்தான் தெரியவந்தது பாதிரிக்கு.

தூக்கிச் செல்லப்பட்ட அந்த நாடோடிப் பெண்ணுக்கு கோபுரத்தில் தனியொரு அறை அளித்தான் கூனன். 'என் முகத்தையும் தோற்றத்தையும் பார்க்கவே உனக்கு அருவருப்பாக இருக்கும், முடிந்த வரையில் உன் கண் முன்னால் தோன்றாமலே இருக்கிறேன். என்னைக் கூப்பிடுவதற்கு உனக்கு பிடிக்கவில்லையானால் இதோ இந்தக் குழலை ஊது. உடனே ஓடி வருவேன். உனக்காக எதையும் செய்ய சித்தமாக இருக்கிறேன்!' என்றான் குவாசிமோதோ. அவன் குரலில் அன்பு, கருணை, பச்சாதாபம், பரிவு அத்தனையும் இழைந்தோடின.

'என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று உனக்கேன் அவ்வளவு ஆர்வம்?' என்று பீதியுடன் கேட்டாள் அவளுக்குப் பயம்; எங்கே, பாதிரிக்காகத்தான் மறுபடியும் கூனன் தன்னை அங்கே அடைத்து வைத்திருக்கிறானோ என்று.

'உனக்கு வஞ்சகம் நினைத்தவனுக்கு வாய் நிறைய தண்ணீர் கொடுத்துத் தாகம் தீர்த்தாயே, தாயே! அந்த ஒரு செயலுக்காகவே உன்னை என் இதயக்கோயிலில் வைத்து கை எடுத்துக் கும்பிடுவேனே! நீ மறந்தாலும் என்னால் அந்த சம்பவத்தை மறக்க முடியாதம்மா!'—கூனன் கூறினான்.

இப்படி இருக்கும்பொழுது இவளது இருப்பிடத்தைத் தேடிக் கொண்டு எப்படியோ அவளது ஆட்டுக்குட்டியும் அங்கு வந்து சேர்ந்து விட்டது!

●

எவளைத் தீர்த்துக் கட்டிவிட்டோம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாரோ அவளே உயிரோடு இருக்கிறாள், அதுவும் ஆலயத்தின் உச்சியிலே நடமாடுகிறாள் என்று கேள்விப்பட்டவுடன் அவரது குருதியெல்லாம் மறுபடியும் கொதிக்க ஆரம்பித்தது. தேடித்தேடி அலுத்த திரவியப்பேழை, தன் தலையணை பக்கத்திலே இருக்கிறதென்று உணர்ந்தால், அதைத் துழாவி அள்ளி அணைக்கத் துடிக்காதவர் உண்டோ? மறுபடியும் சபலத்திற்கு ஆட்பட்டுவிட்ட குரு கோபுரத்தை நோக்கி ஏற ஆரம்பித்தார்.

நடு இரவு...நிசப்தம்...நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்த எஸ்மெரால்டாவின் கரத்தைப் பற்றினார் ப்ரோலோ. திடுக்கிட்டு எழுந்தவள் அவருடைய முகத்தைப் பார்த்தவுடன் தேள்தீண்டப் பட்டதுபோல் கத்தினாள். ஆனால் அவர் விடவில்லை. பலவந்தமாக அணைத்துக்கொண்டு, முத்தத்தால் அவள் முகத்தை நனைத்தார். நல்ல வேளையாக உடனே அவள் கையில் ஊது குழல் தட்டுப்பட்டது. 'வீல், வீல்' என்றலற ஆரம்பித்தது அக் குழல்!

'பளார்' என்று குத்து விழுந்தது பாதிரியின் முதுகில். அதைத் தொடர்ந்து ஒரு பயங்கர உருவம் அவரைப் படுக்க வைத்து நெஞ்சில் ஏறி உட்கார்ந்துகொண்டு கத்தியை எடுத்துக் குத்தப் போயிற்று. அப்பொழுதுதான் குருவானவரின் முகத்தை அடையாளம் கண்டுகொண்டு பயந்து அது பின்வாங்கியது. இவ்வளவு நேரம் கூனனுக்கு அதுதான் தன் எஜமானன் என்று தெரியாது. இப்பொழுது...? கூனனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. ''என்னை வேண்டுமானால் கொன்று விடுங்கள். ஆனால் பாவம்! அந்தப் பேதையை மாத்திரம் தொந்திரவு செய்யாதீர்கள்''—என்று கெஞ்சினான். அடிபட்ட, அவமானப்படுத்தப்பட்ட குரு, சீறிக்கொண்டே கீழே இறங்கிப் போவாதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்?

●

கிரிங்காய்ரேயுக்கும் ப்ரோலோவுக்கும் நெருங்கிய அறிமுகமும் தொடர்பும் உண்டு. முன்னவனுக்கும் எஸ்மெரால்டாவுக்கும் நடந்தேறிய விசித்திர திருமணத்தைப்பற்றி அவன் மூலமாகவே கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார் பாதிரி. மேற்கண்ட சம்பவம் நடந்த மறுநாள், மனதில் ஒரு தீர்மான முடிவுடன் அவனை அணுகி, அவனுள்ளத்தில் கணவன் ஒரு மனைவிக்கு செய்ய வேண்டிய கடமை உணர்ச்சிகளையும் நினைவுறுத்தி, 'நீ உன் மனைவியைக் காக்க வேண்டும் என்று கருதினால் இதுதான்

கடைசிமுறை. அவள் ஆலயத்தில்தான் தஞ்சமடைந்திருக்கிருள். ஆனல் அவள் வாசம் இன்னும் மூன்று தினங்களுக்குத்தான். பின்னல் பாராளுமன்றம் தன்னுடைய விசேஷ தீர்மானத்திஞல் அவளைக் கொலைக்களத்துக்கு அனுப்பப் போகிறது. அதற்குள்ளாக அவளை தப்பவைக்க வேண்டுமானல் நீ உனது சகாக்களுடன் படைதிரட்டி, கோயிலைச் சுற்றிக் காத்துக்கொண்டிருக்கும் காவலாளிகளை முறியடித்து அவளைக் காப்பாற்றிச் செல்ல வேண்டும். ஆனல் இதில் நானும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காட்டிக் கொள்ளக்கூடாது'' என்று தனது நயவஞ்சகத் தீர்மானத்திற்கு அடித்தளம் போட்டார். எஸ்மெரால்டாவைவிட அவள் ஆட்டுக்குட்டி மீது அபார பிரேமை கொண்ட கிரிங்காய்ரே இந்தத் திட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்தான்.

ஜிப்சிகளின் படை திரண்டு வருவதைக் கண்ட காவலாளிகள் பயந்தோடினர் அரசனிடம். ஆனல் அப்படை கோயிலினுள் புக முடியவில்லை. எஸ்மெரால்டாவைத் தீர்த்துக் கட்டுவதற்குத்தான் இப்பெரும் படை திரண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்ட குவாசிமோதா மேலேயிருந்து கற்களால் கீழே இருந்த கூட்டத்தைத் தாக்கினன். நகரில் பெரும் குழப்பம் ஏற்படவே, செய்தியறிந்த மன்னன் தன் விசேஷ அதிகாரத்தின்படி உடனே எஸ்மெரால்டாவை தூக்கிலிடும்படி உத்திரவிட்டான்.

கோபுரத்தின் உச்சியையடைந்த மன்னனது ஆட்களையும். கூனனையும் வியப்பும் திகைப்பும்தான் வரவேற்றன...காரணம் எஸ்மெரால்டாவையும் அவள் ஆட்டுக்குட்டியையும் காணவில்லை! அவளை விடிவதற்குள் கண்டுபிடித்து தலையைக் கொய்யாவிடில் தங்கள் தலை போய்விடும் என்றுணர்ந்த வீரர்கள் அவளைத் தேட தீவிரமாகப் புறப்பட்டனர் குதிரைகளிலே!

●

எஸ்மெரால்டா எங்கே போனள்?

குவாசிமோதோவின் எதிர்த்தாக்குதலை சமாளிக்க முடியாத நிலையில் இருந்ததால் கோயிலின் பின்புறம் வழியாக கிரிங்காய்ரே சுவாமியாரை அண்டினன். இருவரும் ஒரு முடிவுக்கு வந்து கோபுரத்தில் ஏறினர். தன்னிடமிருந்த கள்ளச் சாவியினல் எஸ்மெரால்டாவின் அறையைத் திறந்து வழி காண்பித்தார் பாதிரி. கிரிங்காய்ரே அவளை அணுகி, தன்னை இன்னர் என்று வெளிப்படுத்தி, அவளையும் ஆட்டுக்குட்டியையும் தப்பவைக்க வந்திருப்பதாகவும் துணைக்கு இன்னெருவரை அழைத்திருப்பதாகவும் விவரங்கூறி வெளியில் நடக்கும் குழப்பத்தையும் விளக்கி, இப்பொழுது தப்பி ஓடாவிட்டால் இனி உயிர் பிழைப்பது கனவிலும் காணமுடியாது என்றும் கூறி அவளைத் தன்னேடு அழைத்துக் கொண்டான். பாதிரி தன்னை முழுவதும் மறைத்துக் கொண்டிருந்ததால் அவளுக்கு அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

மூவரும் ஆட்டுக்குட்டியுடன் கீழே இறங்கி, பின்பக்கம் வழியாக மறைந்தோடி, குறுக்கே சென்று கொண்டிருந்த ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தனர். இதற்குள் எஸ்மெரால்டாவைக் காணேம் என்று நகரசோதனைபோட புறப்பட்டுவிட்ட குதிரை வீரர்களின் குளம்படிச் சத்தமும், தீப்பந்தங்களும் தொலைவில் தெரிந்தன. இந்த நிலையில் மூவரும் ஒரே திக்கில் செல்வது ஆபத்தாகையால், அந்த நாடோடி மாதுவை தான் எப்படியும் காப்பாற்றி விடுவதாகவும், கிரிங்காய்ரே அந்த ஆட்டுக்குட்டியைக் காப்பாற்ற வேறு வழியாகச் செல்லவேண்டும் என்று புத்திமதி பகர்ந்தார், புனித சிலுவையை நெஞ்சிலே தொங்கவிட்டிருக்கும் அந்தப் போலி வேடதாரி!

குருவானவரை சந்தேகிக்க முடியுமா, ஒரு சாதாரண மனிதனல்? மேலும் அவளைவிட ஆட்டுக்குட்டியின்மீதுதான் அளவு கடந்த அன்பு கிரிங்காய்ரேயுக்கு. எனவே அவன் வேறு பாதையில் நுழையவே, தனித்துவிடப்பட்ட எஸ்மெரால்டா திகைத்து நின்ருள், தன் துணைக்கு வந்த ஆள் இன்னுர் என்று தெரியாமல். தன் இரும்புப் பிடியில் சிக்கிய அவளை மூர்ச்சையடையும் நிலைக்கு ஆளாககினுர் அந்த மறையவர் தன் முகத்தைத் திறந்து காட்டி!

''ஐயோ! இங்குமா வந்துவிட்டாய்? உன் அட்டகாசத்துக்கு ஒரு அளவே கிடையாதா? இவ்வளவு வெறுத்தொதுக்கயும் விடாப்பிடியாக என்னை வளைய வளைய வருகிருயே! இது நீதி தானு? ஐயோ, என்னைத் தயவுசெய்து விட்டுவிடேன், உன் கண்ணிலே படாமல் எங்காவது ஓடிவிடுகிறேன்'' என்று கெஞ்சினுள்.

''முடியாது! முடியவே முடியாது. என்னைக் காதலிக்கிறேன், விரும்புகிறேன் என்று ஒரு வார்த்தை கூறிவிடு! பூங்கொடியே! அதோ பார் பட்டாளத்தின் வரிசையை. இப்போதாவது புரிந்துகொள் உன் உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பதை. நான் ஒரு கணம் நினைத்தால்போதும். அதோ தெரிகிறதே தூக்கு மேடை அங்கே தொங்கும் உன் நாதியற்ற உடம்பு. அவ்வளவு தூரத்திற்கு என்னைக் கல் நெஞ்சராக்கிவிடாதே. ஒரு கனிவான பார்வை; கடைக்கண் வீச்சு; வெல்லச் சொல் ஒன்று; வேறென்றும் வேண்டாம். மன்னன் கரங்களே உன் மீது படாதபடி பார்த்துக்கொள்கிறேன். இணங்கிவிடு''—பயமுறுத்தினுர் பாதிரி.

''நீர் என்னை எந்த நிலையில் வைத்துக் கேட்டாலும் என்னிடமிருந்து முடியாது என்ற பதிலைத் தவிர வேறு பதில் நிச்சயம் வராது. ஊருக்கு உபதேசி-நீர் இப்படி உல்லாசத்துக்கு ஊஞ்சல் அமைக்க அழைப்பது சரிதானு?...உமக்கு இதயம் இல்லை?... மனசாட்சி இல்லை?''-எந்த முரடனும் அவளது அழுகையில் இளகிவிடுவான். ஆனல் மோகவெறிகொண்ட அந்த முனிவரோ, விடவில்லை,

''இனிப் பேசிப் பிரயோசனமில்லை. அதோ அவர்கள் நம்மை நெருங்கிவிட்டார்கள், இரண்டில் ஒன்றை தீர்மானித்துக்

கொள். உனக்கு வேண்டுது எது? அந்தத் தூக்குக் கயிறு அல்லது துறவியா?''—கேட்டுக்கொண்டே அவளை அணைத்துப் பிடித்தார். அவரது அந்தப் பிடி எலும்புகளையெல்லாம் நொறுக்கிவிடும்போல் இருந்தது.

''முடியாது பேயே...ஒழிந்துபோ...நான் சாகத்தான் போகிறேன்...நீர் ஒரு மலைப் பாம்பு...அதைவிட அந்த மரண மேடையே எனக்கு மேல்...விடும்...என்னை விட்டுவிடும்''—என்று கத்தினாள், திமிறினாள், மானத்தைக் காத்துக்கொள்ளத் துடித்த அந்தக் கன்னி.

இனி இவளிடம் தன் தந்திரமோ துணிச்சலோ பலிக்காது என்ற முடிவுக்கு வந்துவிட்ட ப்ரோலோ, ''சரி, செத்துப்போ, சபிக்கப்பட்டவளே!'' என்று கரகர வென்று அவளை இழுத்துக் கொண்டு சென்றார்.

''சிஸ்டர் கூடுல்! இந்தா ஒரு ஜிப்சி! உன் வஞ்சத்தை யெல்லாம் தீர்த்துக்கொள்ள நல்ல சந்தர்ப்பம். நாளெல்லாம் உன்னை கண்ணீர் வெள்ளத்தில் மிதக்கவிட்ட அந்த நாடோடிக் கூட்டத்தின் மீது பழிக்குப் பழி வாங்கிக்கொள்! இதோ, நீ ஒழிய வேண்டும் என்று விரும்பிய நாடோடி. பிடித்துக்கொள்! அரசர் ஆட்கள் இவளைத் தேடி வருகின்றனர். நான் போய் அவர்களுக்குத் தகவல் கொடுக்கிறேன். அதுவரை இவளைப் பிடித்துக்கொள்'' என்று—ஒரு சன்னல் வெளியே நின்று கத்தினார்.

எலும்பும் தோலுமாக இருந்த ஒரு கை வெளியே வந்தது. உடும்புப் பிடியாய் பிடித்துக்கொண்டது எஸ்மெரால்டாவை. இவள்தான் முன்பு கூறினோமே, பிள்ளையை பரிதவிக்கக் கொடுத்து விட்டு, 'ரோலண்டு டவரில்' பைத்தியம் பிடித்தவள் போல் அடைபட்டுக் கிடக்கிறாள் என்று; அந்த பக்குவதே என்ற பெண்மணி!

''அகப்பட்டுக்கொண்டாயா, ஏ! சூன்யக்காரி! இந்த பதினைந்து வருட காலம் காத்துக்கிடந்தேனடி பழிவாங்க. இனி நிம்மதியாக சாவேனடி நான்''—அவள் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தன.

''அம்மா! தெருவிலே துள்ளிச்செல்லும் நான் உங்களுக்கு என்னம்மா தீங்கிழைத்தேன்? தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள் தாயே''—அவளது பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாத எஸ்மெரால்டா கெஞ்சினாள்.

''என்ன தீங்கா? அடப்பாவிகளா? என் பச்சைச் சிசுவை பறித்துக் கொண்டுபோய் ருசியான உணவாக்கிக் கொண்டீர்களே...அது ஒன்று போதாதா? உன் மூதாதையர் செய்த அந்த குற்றத்திற்குத்தானடி உன்னை கொலைக்களம் அனுப்பப் போகிறேன்...இதோ பார்த்தாயா, இந்தக் காலணியை! இதே போல மற்றொன்றை எங்காவது பார்த்திருக்கிறாயா?...பார்த்திருக்க

மாட்டாய்...அதையும் சேர்த்து தின்றிருக்கும் அந்த வெறிக்கூட்டம்''—என்று தன்னிடமுள்ள ஒற்றைக் காலணியை எடுத்துக் காண்பித்தாள்.

அதையே விடாது பார்த்துக் கொண்டிருந்த எஸ்மெரால்டா தான் ஒரு கையினல், கழுத்தைச்சுற்றி தொங்கவிட்டிருந்த 'தாயத்துப் பையை'த் திறந்து அதிலிருந்து ஒரு காலணியை எடுத்தாள்...இரண்டும் ஒரே மாதிரி இருந்தன!!

ஆசைப் பெருக்கெடுத்தோடியது அந்த மூதாட்டிக்கு! ''எங்கே அதைக் கொண்டா இப்படி...ஆம்...இதே தான்...எப்படி இது உனக்குக் கிடைத்தது...சொல்...நீ யார்...என் மகள் எங்கே?''

''உன் மகளா...நீ உன் மகளைத் தேடுகிருய்...நான் என் தாயை எங்கே என்று தேடுகிறேன், அம்மா!''

''மகளே!...நீயா?''

''அம்மா!...அம்மா!''

''ஆமாம்...அன்று அழகுக்காக அபகரித்துச் செல்லப்பட்ட குழந்தைதான் இன்று வளர்ந்து, வனப்பு கரைகட்டி நிற்கும் வாலிப மங்கையாக நிற்கிருள்! பக்குவதே பெற்ற பைங்கொடி தான், நாடோடி மாதாக, நாதியற்றவளாக, கதிகலங்கி, கதறிக் கொண்டு வெளியே நின்று கொண்டிருக்கிருள்!

மகிழ்ச்சியால் குதித்தாள் பக்குவதே, ஒரு கல்லை எடுத்து சன்னல் பக்கத்தை இடித்துத் தகர்த்தாள். தன் மகளை உள்ளே அழைத்துக் கொண்டாள். அவர்களது ஆலிங்கனமும், ஆனந்தக் கண்ணீரும் நின்றபாடில்லை. அதற்குள் அரசரின் ஆணையை நிறைவேற்ற வந்து விட்டனர் ஆட்கள்.

''மந்திரக்காரி அல்ல அவள், என் மகளய்யா. விட்டு விடுங்கள். அவளுக்கு சூன்யமும் தெரியாது சாத்தானும் தெரியாது. காணமற்போய் இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட கட்டிப் பொன், நான் பெற்ற செல்வம் ஐயா அவள், கண்கட்டுவித்தைக் காரியல்ல......நம்புங்களய்யா...விட்டு விடுங்கள்''—வீரர்களின் காலைப்பிடித்து வேண்டினுள் பக்குவதே.

கடமையுணர்ச்சி கொண்ட காவலாளிகளிடம் ரத்தப் பாசமும், ஆசைப்பந்தமும் தலைகாட்ட முடியுமா? மாதாவாக இருந்தால் என்ன, மகளாக இருந்தால் என்ன, மன்னர் கோபத்திற்கு முன் இவர்களெல்லாம் தூசு!

எனவே கரகரவென்று எஸ்மெரால்டாவை இழுத்துக் கொண்டு சென்றனர். உதறித் தள்ளிவிடப்பட்ட பக்குவதே, ஒரு கல்லில் முட்டி, கீழே விழுந்து இறந்தாள்!

தூக்குமேடையில் ஏற்றினர் எஸ்மெரால்டாவை. சைகை காட்டினுன் காவலாளி...பலகையைத் தட்டிவிட்டான் கொலையாளி...அவ்வளவுதான்...கசாப்புக்கடையில் தோலுரித்து விடப்

பட்ட ஆட்டுக்கடாவைப்போல, மீன்வாயில் ஊசலாடும் கருவாட்டைப்போல தொங்கினுள் எஸ்மெரால்டா! பாவம்! அவள் செய்த ஒரே குற்றம், அழகாகப் பிறந்து அத்துடன் மயக்கும் பாட்டு, மயிலின் ஆட்டம்—இவைகளைச் சொத்தாகக் கொண்டதுதான்,

மகனையும் மாதாவையும் ஒரு சில விநாடிகளுக்காகவாவது ஒன்று சேர்த்து வைத்த புண்யத்தையாவது தேடிக்கொண்டாரே, ப்ரோலோ என்ற அப்பெருந்தகை!

●

எஸ்மெரால்டாவைக் காணும் என்றதும் ஓரளவுக்குப் புரிந்து விட்டது குவாசிமோதோவுக்கு, இந்த மர்மத்திற்குப் பின்னல் மறைந்திருப்பவர் யாரென்று. அவளது அறைக்கு வழியும் அதைத் திறக்கும் வகையும் தெரிந்த ஒரே மனிதன், அவனைத் தவிர, அந்தப் பாதிரிதான்! அவன் கண்முன் அன்று இரவு நடந்த பயங்கரச் சம்பவம் கனவுபோல வந்து வந்து மறைந்தது.

நினைவு குழம்பியது; நிலை கொள்ளவில்லை...என்ன ஆனுளோ எஜமான் அவளை என்ன பண்ணினுரோ, எங்கு அழைத்துச் சென்ருரோ, எப்படி எப்படியெல்லாம் வாட்டி வதைத்தாரோ, என்ற எண்ணங்கள் அவன் கால்களை தரையில் நிரந்தரமாக நிற்க விடவில்லை.

திடீரென்று சுவாமியார் மாடிப்படி ஏறி மேலே வருவதைப் பார்த்தான். ஒரு ஓரமாக ஒளிந்து கொண்டான் அவர் என்ன செய்யப் போகிருர் என்பதைப் பார்க்க!

கூனன் பின்னல் இருப்பதை அறியாத ப்ரோலோ ஏதோ ஒரு இடத்தை உற்று வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கொள்ளிக் கண்களில், பொருமையும், ஏமாற்றமும் எரிச்சலும், வெறியும், வெற்றி என்ற எக்களிப்பும் மாறிமாறி வர்ணவிளக்குகள்போல் ஒளி வீசிக்கொண்டிருந்தன. அவர் நோக்கினதிக்கிலே தன் ஒற்றைக் கண்ணைச் செலுத்தினுன் கூனன். அங்கே...தூரத்திலே...வெண்ணுடை மாதொருத்தியை இழுத்து வந்து, இரண்டுபேர் அவளைத் தூக்கிலேற்றினர்.

அவள் இன்னுரென்று புரிந்து விட்டது குவாசிமோதோவுக்கு. அவளை என்ன செய்து விட்டார்கள் என்றும் தெரிந்துவிட்டது. ஆத்திரமும், ஆவேசமும் பொங்க பாதிரியை உற்றுநோக்கினுன். ஆனல் அவரோ, தூக்குமேடையில் எஸ்மெரால்டா தொங்கியதும் ஒய்யாரமாக "ஓகோ" என்று வெற்றியுடன் சிரித்துக் கொண்டிருந்தார். ஆனல் அச்சிரிப்பு அடங்குமுன்னரே, ஓங்கார மிருகக் கர்ஜிப்போடு அவர் மீது பாய்ந்தான் கூனன். கல்லைத் தூக்கி எறிவதுபோல் அப்படியே எஜமானனை தலைக்குமேல் தூக்கி நச் சென்று கீழே எறிந்தான் அந்த அடிமை!

அவ்வளவு உயரத்திலிருந்து எறியப்பட்ட பாதிரியின் தலை சுக்கு நூறாகியது!

●

அன்றிலிருந்து நாட்டர்டாம் ஆலயத்தில் அந்தக் கூனனைக் காணவில்லை!

ஈராண்டுகள் கழிந்தபின்னர் தூக்கிலிடப்பட்ட பிரேதங்களைத் தொங்கவிடும் 'மான்ட்பாக்கன்' என்ற இடத்தைத் திறந்தபோது அங்கே ஒரு எலும்புக்கூட்டை அணைத்தபடி மற்றொன்று இருந்தது.

முன்னதின் கழுத்திலே பாசிகள் கோர்க்கப்பட்ட சங்கிலியும் அதனுடன் இணைக்கப்பட்ட வெற்றுப்பையும் இருந்தன. பின்னதின் முதுகெலும்பு வளைந்திருந்ததென்றும், அதன் கபாலம் தோள்பட்டையில் அழுந்தியிருந்ததென்றும். ஒரு கால் மற்றக் காலைவிட கட்டையாக இருந்ததென்றும், அதனுடைய கழுத்து எலும்புகள் உடைபடாமல் இருந்ததால், பின்னதற்கு ஏற்பட்டது இயற்கை மரணம்தான் என்றும் பேசிக்கொண்டனர்.

●

ஒரு காலத்தில் குவாசிமோதோ என்ற கூனன் நாட்டர்டாம் ஆலயத்திலே இருந்தான் என்று நினைவு கொள்வோர்க்கு இன்று அவ்வாலயம், சூன்ய வெளியாக, செத்த பிரேதமாக, நிலவற்ற வானமாக, நீரற்ற கிணறாகத்தான் தெரியும்! ஃ

ஒரு மைல் நீளப் புத்தகம்!

பர்மாவில் மாந்தளைக்குச் செல்லும் பாதையில் 728 டன் எடையுள்ள ஒரு மகத்தான புத்தகம் நிற்கிறது. 'குத்தேதா' (கல் வேதம்) என்னும் பெயருடைய அந்நூல் 728 பக்கம் கொண்டது. ஒவ்வொரு பக்கமும் ஒரு டன் எடையுள்ள ஒரு பளிங்குக் கல்லாகும். அதில் உச்சி முதல் அடிவரையில் சொற்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

728 பக்கங்களும் சிப்பாய்களைப்போல் வரிசை வரிசையாகக் கீழ்மேல் முகமாகவும் தெற்கு வடக்கு முகமாகவும் ஒரு மைல் தொலைவுக்கு மேல் நிற்கின்றன.

ஊ காந்தி என்னும் புத்த துறவி இயற்றிய பர்மிய வேதத்தின் ஆதாரபூர்வமான பதிப்பு இவ்வாறு கல் சாசனங்களாக வடிக்கப்பட்டிருக்கிறது.

கல் மேல் பொறித்த இப்புத்தகத்தை ஒருவர் படித்து முடிக்க ஐந்து ஆண்டுகள் பிடிக்கும். அது மட்டுமல்ல, அவர் கால்களும் உறுதியானவையாக இருக்க வேண்டும்.

—இராலன்.

[illegible]

ആണ്ട് 1 ലക്കം 10-12.

[illegible] .57.

[illegible]

[illegible]

[illegible] 1. 10-12.

198954